

June 2019
தமிழ்
10ம் ஆண்டில்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

# VARSHA™


Ready to Cook

Made with Quality Natural Products

**Idli / Dosa Wet Mix** • இட்லி / தோசை மாவு

ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്




ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा

# iதமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

June 2019 சுவடி — 9 ஓலை — 4

## வணக்கம் பல

மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவுக்கு நடந்து முடிந்திருக்கும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் ஒரு போலிச் சாயத்தைப் பூசியிருக்கிறது. மனிதநேயத்தையும் சகோதரத்துவத்தையும் மத நல்லிணக்கத்தையும் முன்னிறுத்தும் நாடாகத் திகழும் இந்தியாவுக்கு பூசப்பட்டிருக்கும் அந்தக் ‘காவிச் சாயம்’ உலகின் பிற நாடுகளால் ஆச்சரியத்துடனும் அதிர்ச்சியுடனும் பார்க்கப்படுகின்றது. மதச்சார்பற்ற நாடாகத் திகழும் இந்தியாவுக்கு அமைந்திருக்கும் புதிய தலைமையானது, மதத்தைக் கையில் ஆயுதமாக எடுத்து விடுமோ என்ற ஐயப்பாடு பெருத்த அளவில் இந்தியாவுக்குள்ளேயே அதிர்வலைகளாக வளையமிடுகிறது.

எந்த ஒரு ஆட்சியாளரும் விருப்பு வெறுப்பு இல்லாமல் அனைத்து பிரிவினருக்கும் நலம்பயக்கும் விதமான ஆட்சியைத் தர வேண்டும் என்ற தர்ம நெறியிலிருந்து அவர்கள் அடிபிறழ்வதற்கு காரணமாக அமைவது, இனவெறியாகவோ, மதவெறியாகவோ அல்லது தன்முனைப்பை வெளிக்காட்டும் விதமாகவோ இருந்துவிட்டால் அது அந்த ஆட்சியாளருக்கு மட்டுமின்றி, அந்த நாட்டுக்கும் கேடுமிகுந்த காலமாகி விடும் என்பதைக் கடந்த கால வரலாறுகள் காட்டி வருகின்றன.

இந்தியாவுக்கு தற்போது தலைமை ஏற்றிருக்கும் மதம் சார்ந்த ஒரு தலைவர் தனக்குள் அந்த மதம் வேர்பிடித்து விருட்சமாய் வளராமல் தற்காத்துக் கொள்ள வேண்டிய பெரும் பொறுப்பில் இருக்கிறார். உலக அரங்கில் இந்தியாவின் நற்பெயருக்கு களங்கம் வராமல் பார்த்துக்கொண்டாலே புதிய அரசுக்கு மிகப்பெரிய நன்மையாக இருக்கும்! கோடிக்கணக்கான மக்கள் தேர்ந்தெடுத்திருக்கும் தலைமை, தகைமை சார்ந்த தலைமைதானா? பகைமை பாராட்டும் தலைமையா? என்பது ஐந்து ஆண்டுகளுக்குள்ளாகவே தெரிந்துவிடும்! இருப்பினும், நல்லதையே நாடும் நன்மக்கள் வாழும் இந்தியா, நல்லபடியாகவே இருக்க வேண்டும் என்பதுதான் உலகெங்கும் வாழும் இந்தியர்களின் விருப்பமாகவும், இந்தியாவுக்குள்ளே இருக்கும் மதவெறியற்றோரின் விருப்பமாகவும் இருக்கிறது. நடக்குமா? நடக்கும் என்றே நம்புவோம்! நல்லதையே எண்ணுவோம்!

உலகின் பல பாகங்களிலும் நிகழும் பல்வேறு செய்திகளைக் கட்டுரைகளாகத் தாங்கி மலர்ந்திருக்கும் இம்மாத ‘அய் தமிழ்’ இதழை வழமைபோல் வரவேற்று மகிழுங்கள்!

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

## உள்ளே...

சொக்கட்டான் தேர்தல்
தெறிக்க விட்ட தமிழகம்
பெருந்தனம் செய்யும் மாயம்
வளரும் காலம்
தாயுமானவர்
அறிவோம் தமிழர் பெருமை
சிவகாமியின் சபதம்
மக்காக் கழிவு
மருத்துவ தமிழ்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று!

**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
editor@ithamil.com

*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

# சொக்கட்டான்

## மோதி – ராகுல்: இந்திய மக்களவை தேர்தலை அமெரிக்க அதிபர் தேர்தல் போல மாற்றியது பாஜகவின் வெற்றிக்கு காரணமா?

உலகெங்கும் பழமைவாதிகளின் கை ஓங்கி வருகின்றன. பழமைவாத தலைவர்கள் கைகளுக்கு அதிகாரம் செல்கிறது, முன்பை விட அதிகாரமிக்கவர்களாக அவர்களை மாற்றுகிறது. இதற்கு வயதானவர்கள், பழைய தலைமுறை மட்டுமல்ல, இளைஞர்களும்தான் காரணம்.

கடந்த ஏப்ரல் 11 முதல் மே 19 வரை 7 கட்டங்களாக நடைபெற்ற இந்திய மக்களவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கையில், 350க்கும் மேற்பட்ட தொகுதிகளில் பா.ஜ.க கூட்டணி வெற்றி பெறுகிறது.

2018 டிசம்பரில் சத்தீஸ்கர், மத்தியபிரதேசம் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களுக்கு நடந்த சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்று ஆட்சியமைத்த நிலையில் தற்போதைய மக்களவை தேர்தல் முடிவுகளில் பா.ஜ.க பெருவெற்றி பெற்றுள்ளது.

கடந்த 2011 வரை கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்கு மேலாக கம்யூனிஸ்ட் கூட்டணி ஆட்சியில் இருந்த மேற்குவங்கத்தில் பாஜக இம்முறை வலுவாக காலூன்றியுள்ளது.

பண மதிப்பிழப்பு, ஜிஎஸ்டி, விலைவாசி உயர்வு, வேலைவாய்ப்பின்மை என பல அம்சங்களில் பாஜக மீது காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்கட்சிகள் தொடர்ந்து குற்றம்சாட்டிவந்த நிலையில், பாஜகவின் இந்த வெற்றி எப்படி சாத்தியமானது?




'கிட்டத்தட்ட 40 சதவீதம் அளவுக்கு பாஜக வாக்கு சதவீதம் பெறலாம். இதற்கு முக்கிய காரணம் அந்த கட்சி தனது ஆதரவு கட்டமைப்பை நாடு முழுவதும் பரவலாக்கியுள்ளதுதான்.

'வட மற்றும் மேற்கு மாநிலங்களில் பாஜக அதிக இடங்களில் முன்னிலை பெற்றுள்ளதற்கு, புல்வாமா தாக்குதலுக்கு பிறகு அக்கட்சி முன்னெடுத்த தேசியவாதம் மற்றும் நாட்டுப்பற்று குறித்த கோஷங்கள் வெற்றிக்கு பெரிதும் உதவியுள்ளது.



# தேர்தல்

"காங்கிரஸ் கட்சியால் பாஜகவின் தவறுகளை மக்களிடம் சரியான முறையில் எடுத்துச் செல்ல முடியவில்லை. அதுமட்டுமல்லாமல், சமூகவலைத்தளங்களை பாஜகவே மிகச்சிறந்த முறையில் பயன்படுத்தியது. இது அக்கட்சியின் வெற்றிக்கு ஒரு முக்கிய காரணமாகும்.

சத்தீஸ்கர், மத்திய பிரதேசம் மற்றும் ராஜஸ்தானில் அண்மை சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ள போதிலும், காணப்படுகிறது. இந்த ஆதரவு நிலையை ஏற்படுத்த அக்கட்சி கடுமையாக உழைத்துள்ளது. அக்கட்சியின் இந்த பிரச்சாரத்தை கவனிக்க எதிர்கட்சிகள் தவறியுள்ளன. ஆனால் பாஜகவால் ஊடுருவ முடியாத மாநிலங்கள் கர்நாடகத்தை தவிர்த்து தென்மாநிலங்கள்தான். வரும் காலத்தில் இம்மாநிலங்களில் தனது ஆதரவு நிலையை அதிகரிக்க பாஜக பல யுக்திகளை கையாள வாய்ப்புள்ளது.



புல்வாமா மற்றும் பாலகோட் சம்பவங்களுக்குப் பிறகு அம்மாநில மக்களின் மனநிலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் ராஜஸ்தான் மற்றும் மத்திய பிரதேச மாநில அரசுகளுக்கு வரும் காலத்தில் ஆபத்து ஏற்படலாம்.

அதேவேளையில் உத்தரபிரதேசத்தில் பகுஜன் சமாஜ் மற்றும் சமாஜ்வாதி கூட்டணி கட்சிகளுக்கு பொதுவாக வாக்களித்து வந்த பிற்படுத்தப்பட்ட மற்றும் தலித் சமூக மக்களிடம் தற்போது பாஜகவுக்கும் ஒரு ஆதரவு நிலை

பாஜக வென்றதற்கு மூன்று காரணங்கள் உண்டு. முதல் காரணம் நரேந்திர மோதி அளவிற்கு காங்கிரஸ் அல்லது எந்த எதிர்க்கட்சியாலும் மக்கள் மத்தியில் ஒரு மிக பிரபலமான தலைவரை முன்னிறுத்த முடியவில்லை.

ஒரு கட்டத்தில் இந்திய மக்களவை தேர்தலை அமெரிக்க அதிபர் தேர்தல் போல் பாஜக மாற்றிவிட்டது என்றே கூறலாம். மோதியா? ராகுலா? என்ற கேள்வியை நாட்டின் மூலை முடுக்குக்கும் எடுத்துச் சென்று, பாஜக அதில்

வெற்றி கண்டுள்ளது.

மேலும் எதிர்கட்சிகளினால் ஒரு பலமான கூட்டணியை உருவாக்க முடியவில்லை. திமுக பாஜக ஆட்சியமைக்கவும் முயற்சி செய்யக்கூடும். இது அக்கட்சியின் பிரச்சாரத்திற்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும்.



தலைவர் ஸ்டாலின் முன்னெடுத்த ராகுல் காந்தி பிரதமர் வேட்பாளர் என்ற கோஷம் எடுபடாமல் போனது இந்தத் தோல்விக்கு காரணமாக இருக்க கூடும். இதனால்தான் உத்தர பிரதேசம் போன்ற மாநிலத்தில் பாஜகவால் பெரும் வெற்றியை தொடர்ந்து இரண்டாவது முறையாக பெற முடிந்தது.

மூன்றாவது காரணம், புல்வாமா மற்றும் பாலகோட் தாக்குதல் சம்பவங்களுக்கு பிறகு வட மற்றும் மேற்கு மாநிலங்களில் பாஜக முன்னெடுத்த இந்தியம், தேசியம் போன்ற கோஷங்கள் அக்கட்சிக்கு வெகுவாக கை கொடுத்துள்ளது.

வரும் காலத்தில் தாங்கள் வெல்லாத மற்ற மாநிலங்களிலும் பாஜக கூடுதல் கவனம் செலுத்தக்கூடும். காங்கிரஸ் கட்சி, பாஜகவை வீழ்த்த மிகமிக கடினமாக உழைக்க வேண்டும்.

முப்பதுக்கும் மேற்பட்ட ஆண்டுகள் கம்யூனிஸ்ட் கூட்டணி ஆட்சியில் இருந்த மாநிலம் மேற்கு வங்கம். இங்கு இந்தளவு மிகப்பெரிய வெற்றியை நோக்கி பாஜக செல்வது மிக முக்கியமான அரசியல் திருப்புமுனை`` என்றார்.


இதனால் மேற்கு வங்கத்தில் வருங்காலத்தில்

தமிழ்நாடு, கேரளா, தெலங்கானா, ஆந்திர பிரதேசம் மற்றும் பஞ்சாப் ஆகிய மிக சில மாநிலங்களை தவிர பல மாநிலங்களில் பாஜக பெரும் அளவில் வெற்றிபெற்றிருப்பது அக்கட்சியின் பிரச்சாரத்துக்கும், ஒருங்கிணைப்பு மற்றும் உள்கட்டமைப்பு பலப்படுத்தும் முயற்சிக்கும் கிடைத்த வெற்றியே என்பது சில அரசியல் விமர்சர்களின் கருத்தாக உள்ளது.

பெரும்பாலான இந்தி பேசும் மாநிலங்கள் மட்டும் அல்லாமல், இடதுசாரிகளின் பலம் என்று கருதப்பட்ட மேற்கு வங்கம்,அதோடு மகாராஷ்டிரா, கர்நாடகா போன்ற மாநிலங்களிலும், பாஜக வலுவாக கால் பதித்திருக்கிறது.

கடந்த தேர்தலில் மேற்கு வங்கத்தில் இரண்டு இடங்களில் மட்டுமே வெற்றி பெற்ற பாஜக, தற்போது 18 இடங்களில் வெற்றி கண்டுள்ளது. கர்நாடகாவில் மொத்தம் உள்ள 28 மக்களவை தொகுதிகளில், 26 தொகுதிகளை பாஜக கைப்பற்றியுள்ளது. அதே போல ஒடிஷா மாநிலத்தில் கடந்த மக்களவை தேர்தலில் ஒரே ஒரு தொகுதியில் மட்டுமே வென்ற பாஜக, தற்போது அங்கு எட்டு தொகுதிளில் வெற்றி பெற்றுள்ளது.

இப்படி அனைத்து மாநிலங்களிலும் வெற்றி




முத்திரையை பதித்து வரும் பாஜகவால், தமிழகம் மற்றும் கேரளாவில் ஒரு தொகுதியில் கூட வெற்றி பெற முடியவில்லை.

தமிழகத்தில் ஆளும் அதிமுகவுடன் கூட்டணி அமைத்து பாஜக தேர்தலை எதிர்கொண்டது. தூத்துக்குடி, கன்னியாகுமரி, சிவகங்கை, ராமநாதபுரம், கோவை ஆகிய ஐந்து இடங்களில் பாஜக போட்டியிட்டது. இதில் ஒரு தொகுதியில் கூட அக்கட்சி வெற்றி பெறவில்லை. இந்த ஐந்து தொகுதிகளில், அங்கு அவர்களுக்கு எதிராக போட்டியிட்ட திமுக, காங்கிரஸ், முஸ்லிம் லீக், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகளால் பாஜக தோற்கடிக்கப்பட்டுள்ளது.

ஆளும் அதிமுக தலைமையில் பாஜக, பாமக, மற்றும் தேமுதிக கூட்டணி அமைத்து போட்டியிட்டதில், இந்தக்கூட்டணி ஒரே ஒரு தொகுதியில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. தேனியில் ஓ.பன்னீர் செல்வத்தின் மகனான ரவீந்திரநாத் வெற்றி பெற்றுள்ளார்.

எதிர்க்கட்சிகளின் மோதி எதிர்ப்பு பிரச்சாரம், நீட் தேர்வு விவகாரம், அனிதாவின் மரணம், ஓக்கி மற்றும் கஜா புயலின்போது பாஜக தமிழகத்துக்கு சரியான உதவிகளை செய்யவில்லை போன்றவற்றை முன்னிறுத்தியே எதிர்க்கட்சிகள் பிரசாரம் செய்து வந்தன.

நீண்ட கால திராவிட இயக்கத்தின் இருப்பும், சமூக அடிப்படையும்தான் பாஜகவை தமிழகத்தில் இருந்து தள்ளி வைக்க ஒரு முக்கிய காரணம்.

தற்போது அதிமுக தலைமையே ஒரு கேள்விக்குறியாக உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக முதல்வர் எடப்பாடி பழனிசாமி மற்றும் ஓ.பன்னீர்செல்வத்தை பாஜக ஆதரவாளர்களாகவே மக்கள் பார்க்கின்றனர். இத்தேர்தல் திமுக அதிமுகவுக்கு இடையே நடக்கவில்லை. மறைமுகமாக இது பாஜகவுக்கும் திமுகவுக்கும் இடையே நடந்த தேர்தல்.

மேலும், கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு விவகாரங்களில் மத்திய அரசுக்கு எதிரான நிலையையே தமிழக இளைஞர்கள் எடுத்திருக்கிறார்கள். அவர்கள் வாக்களிக்க இங்கு எந்த மூன்றாவது கட்சியும் இல்லை. அதிமுகவில் ஜெயலலிதா இருந்தவரை அவரால் மாநிலத்துக்காக பேச முடிந்தது. பழனிசாமி மற்றும் பன்னீர்செல்வத்தால் அது முடியாது என்று மக்களுக்கு தெரியும். இதெல்லாம் சேர்ந்து திமுகவுக்கு ஆதரவான நிலை ஏற்பட்டது.

அகில இந்திய அளவில் தமிழகத்தில் நான்கு, கேரளாவில் ஒன்று என மொத்தம் ஐந்து தொகுதிகளிலேயே இடதுசாரிகள் வென்று இருக்கிறார்கள். இந்த வீழ்ச்சிக்கு என்ன காரணம்? உலகமயமாக்கலை சரியாக உள்வாங்காததுதான் இடதுசாரிகளின் வீழ்ச்சிக்கு காரணம்!

தொழிற்சங்கங்கள்தான் இடதுசாரிகளின் பலம். ஆனால், தொழில்துறை மாற தொடங்கியப் பின், சங்கங்கள் ஆட்டம்காண தொடங்கின. மாற்றங்களுக்கு ஏற்றவாறு இடதுசாரிகள் மாறவில்லை. இது தேர்தல் அரசியலில் உள்ள இடதுசாரிகள் கட்சிகளிலின் வெற்றி தோல்விகளிலும் தாக்கம் செலுத்த



தொடங்கிவிட்டது.

எப்படி பாரதிய ஜனதா கட்சி தொடர்ந்து வெற்றி பெறுகிறது அல்லது பெரும்பான்மை இல்லாமலும் ஆட்சி அமைத்து கொண்டிருக்கிறது? பணமதிப்பு நீக்கத்தால் மிக மோசமாக நேரடியாக பாதிக்கப்பட்டவர்கள் கூட, நரேந்திர மோதியை தொடர்ந்து ஆதரிக்க (வட இந்தியாவில்) என்ன காரணம்? காஷ்மீரில் ஆட்சியில் பங்கு, வட கிழக்கு மாநிலங்களில் ஆட்சி எப்படி சாத்தியமானது பா.ஜ.கவுக்கு?

இக்கட்சி அசாம் மாநிலத்தில் வெல்ல மற்றும் மணிப்பூரில் ஆட்சி அமைக்க என்ன செய்தது? தொடர்ந்து 25 ஆண்டுகள் இடதுசாரிகள் ஆட்சி செய்த திரிபுராவில் இப்போது பா.ஜ.க அடைந்துள்ள வெற்றியைப் புரிந்துகொள்ள இது உதவுகிறது.

தேர்தல் முடிவுகளை எப்படிப் புரிந்துகொள்வது?


இந்து உயர்சாதியினர் பாஜகவை ஜெயிக்கவைத்தார்கள், இது இந்துத்துவத்தின் வெற்றி என்றெல்லாம் பார்ப்பது மக்களைக் கேலி செய்வதற்கு ஒப்பானதாகும். யாரும் ஒற்றைக் காரணத்துக்காக ஒரு கட்சியை ஜெயிக்கவைப்பதில்லை. தங்கள் வாழ்க்கை முன்னேற இதுதான் சரியான தேர்வு என்று பெருமளவு மக்கள், சாதி, மதங்களையெல்லாம் தாண்டிச் சிந்தித்திருக்கிறார்கள். பணமதிப்பிழப்பு, ஜிஎஸ்டி வரிவிதிப்பு, வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிப்பு, மதவாதம், ரஃபேல் ஊழல் என்று பாஜகமீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை மக்கள் அங்கீகரிக்கவில்லை, அல்லது சிலவற்றில் உண்மை இருந்தாலும் பாஜகவுக்கு வாக்களிப்பதே சரியானது என்று பெரும்பாலானோர் முடிவெடுத்தனர் என்பதையே இந்தத் தீர்ப்பு காட்டுகிறது.

ரஃபேல் போர்விமானங்கள் வாங்குவதில் நரேந்திர மோதி தனிப்பட்ட முறையில் ஊழல் செய்தார் என்று காங்கிரஸ் கடுமையான பிரசாரம் செய்தது. மோதி ஒரு திருடன் என்று ராகுல் காந்தி தொடர்ந்து சொல்லிவந்தார். தனக்கு ஆதரவாக, உச்சநீதிமன்றம் சொல்லாத ஒன்றைச் சொன்னதாகப் பொய் சொன்னார். பின்னர் அதற்காக அவர் நீதிமன்றத்தில் வருத்தம் தெரிவித்து அவமானப்படவேண்டியிருந்தது. இந்த அவதூறுகளை உதறி எறிந்த நாட்டு மக்கள், மோதி திருடன் அல்லர் என்று அழுத்தம் திருத்தமாகப் பதில் சொல்லியுள்ளனர்.

பணமதிப்பிழப்பு, ஜிஎஸ்டி இரண்டுமே இந்தியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பையே ஒடித்துவிட்டன என்று முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், முன்னாள் நிதியமைச்சர் சிதம்பரம் முதற்கொண்டு பலரும் பேசினார்கள். இவை இரண்டுமே கடினமான முடிவுகள், இவற்றால் குறுகிய காலத்தில் மக்களுக்கு நிறைய பிரச்னைகள் இருந்தாலும் நீடித்த நன்மைகள் இருக்கும் என்று மோதி விளக்கினார். மோதி எதிர்பார்த்ததைவிடச் சிக்கல்கள் அதிகமாக இருந்தன. ஆனாலும் மக்கள் இந்தப் பிரச்னைகளைப் புரிந்துகொண்டனர். இந்தச் செயல்பாடுகளின் பின் உள்ள நோக்கத்தை மிகச் சரியாகவே கணித்தனர். எதிர்க்கட்சிகளின் பிரசாரம் வேலை செய்யவில்லை.

வேலையில்லாத் திண்டாட்டம் என்பது திடீரென்று வந்த ஒன்றல்ல. படித்த இளைஞர்களுக்கு வேலை கிடைப்பதில் நிறைய சிக்கல்கள் உள்ளன. இதற்கு மத்திய அரசை மட்டும் குறை சொல்வது எவ்விதத்திலும் நியாயம் இல்லை. ஆனாலும் பாஜக அரசு 2014—ல் ஒரு தவறைச் செய்திருந்தது. இத்தனை லட்சம் வேலை

வாய்ப்புகளை உருவாக்குவோம் என்று உறுதி அளித்திருந்தது. எந்த அரசுமே அதுபோன்ற வாக்குறுதியைத் தரக்கூடாது. தந்தாலும் அதை நிறைவேற்ற முடியாது. இம்முறை பாஜக அப்படிப்பட்ட தவறைச் செய்யவில்லை. பொருளாதாரத்தை வளப்படுத்துவதுடன், இளைஞர்களின் தொழில்திறனையும் மென்திறனையும் மேம்படுத்தினால் மட்டுமே வேலைவாய்ப்புகளை அதிகப்படுத்த முடியும். மேலும், மக்களுக்கு ஏதோ ஒரு வேலை கிடைத்துக்கொண்டுதான் இருக்கிறது. உண்மையான பிரச்னை வேலை கிடைக்காமல் இருப்பதல்ல; சரியான ஊதியத்துடனன வேலை கிடைக்காததே.




பாஜக இந்துத்துவத்தை முன்வைக்கும் கட்சி. சில வட மாநிலங்களில் பசுக்காவலர்கள் என்ற பெயரில் உதிரிக் கும்பல்கள் முஸ்லிம்களைத் தாக்கின. உயிரிழப்பும் நிகழ்ந்தது. ஆனால் இதனை பாஜகவின் அடிப்படைத் திட்டம் என்று முன்வைத்து பத்திரிகைகளில் நடந்த பிரசாரம் எடுபடவில்லை. அதேபோல, சில கிறிஸ்தவ தேவாலயங்களில் மர்மமான முறையில் தாக்குதல் நடந்ததை, பாஜகவின் திட்டமிட்ட சதி என்று பத்திரிகைகள் காட்ட முயன்றதும் மக்கள்மத்தியில் எடுபடவில்லை. இதனால் பாஜக, மதத்தைக் கையில் எடுக்கவே இல்லை என்று சொல்ல முடியாது. முக்கியமாக உத்தரப் பிரதேசத்திலும், மேற்கு வங்கத்திலும், தெலங்கானாவிலும் மத அடையாளக் கூர்மைப்படுத்தல் பாஜகவுக்கு உதவியுள்ளது.

பயங்கரவாதக் குற்றச்சாட்டில் சிக்கியிருக்கும் சாத்வி பிரக்ஞா சிங் தாக்கூரை மத்தியப் பிரதேசத்தில் வேட்பாளர் ஆக்கியது மட்டுமல்ல, அவர் காங்கிரஸின் திக்விஜய் சிங்கை தோற்கடித்திருப்பதை எப்படிப் புரிந்துகொள்வது? பாஜக பலவிதமான உறுப்பினர்களைத் தன்னை நோக்கி ஈர்க்கிறது. அதில் ஒருசாரார் படுதீவிர இந்துத்துவர்களும்கூட. அந்தத் தொகுதியைத் தன்னிடம் வைத்திருக்க பாஜகவுக்கு பிரக்ஞாவும் தேவைப்படுகிறார். பிரக்ஞாவுக்கு இடம் கொடுத்தால் தான் விலகிவிடுவேன் என்று எந்த கூட்டணிக் கட்சியும் சொல்வதில்லை; பொதுமக்களும் பாஜகவுக்கு வாக்களிப்பதிலிருந்து பின்வாங்குவதில்லை. பிரக்ஞாவையும் உள்ளடக்கியதுதான் இந்திய அரசியல்.

திமுகவும் காங்கிரசும் தமிழகத்தில் கூட்டு சேர்ந்தபின், பாஜகவுக்கான ஒரே வாய்ப்பு ஒரு பெரும் கூட்டணியை உருவாக்குவதுதான். அதில் பாஜக வெற்றி அடைந்தது. ஆனால், தினகரன் அதிமுகவின் ஒரு குழுவைப் பிரித்தது, அக்கூட்டணிக்குப் பின்னடைவைக் கொடுத்தது. இருந்தும், பாஜக+அதிமுக கூட்டணி ஒட்டுமொத்தமாக வீழ்ந்ததற்கு காரணம், திமுகவின் வலுவான பிரசாரமே. தேர்தலுக்குப் பல மாதங்களுக்கு முன்பிருந்தே, மோதி தலைமையிலான பாஜக அரசு என்பது தமிழக விரோத அரசு என்று மக்களை நம்பவைப்பதில் திமுக பெரும் வெற்றி பெற்றிருந்தது. அது இந்திய அளவிலான பாஜக எதிர்ப்புப் பிரசாரத்தின் அடிப்படையிலானதல்ல. டெல்டா ஹைட்ரோகார்பன் பிரச்னை, தூத்துக்குடி ஸ்டெர்லைட் பிரச்னை, நீட் தேர்வுப் பிரச்னை என்று தொடங்கி, தமிழக வேலைகள் பறிபோகின்றன, தமிழகத்துக்கு வேண்டிய நிதி ஆதாரத்தை மத்திய அரசு தருவதில்லை என்று விரிந்து, “மோடியே திரும்பிப் போ” என்ற போராட்டமாக மாற்றம் எடுத்து, அனைவரையும் சென்றடைந்தது திமுகவின் பிரசாரம். இதனை எதிர்கொள்ள பாஜகவுக்கு வலு இருக்கவில்லை. தேர்தலை ஒட்டி அதிமுகவின் கூட்டணி அமைந்தபின்னரே, அதிமுக அமைச்சர்களும் பிற அதிமுகவினரும் பாஜகவுக்கு ஆதரவாகப் பேசத் தொடங்கினர்.

இன்றைய நிலையில், பாஜகவுக்கு வலுவான மாற்று என்று எதுவும் இல்லை என்பதுதான் உண்மை. இரண்டாம், மூன்றாம், நான்காம் அணி என்று யாரையும் கை காண்பிக்க முடியாது. வரும் ஐந்தாண்டுகளில் எதிர்க்கட்சிகள் வரிசையிலிருந்து ஒரு புது, இளம் தலைவர் உருவாகி வந்தால் மட்டுமே பாஜகவின் தேர்தல் இயந்திரத்தை எதிர்கொள்ள முடியும். அது நிச்சயமாக ராகுல் காந்தியாகவோ பிரியங்கா காந்தியாகவோ இருக்க முடியாது என்று தோன்றுகிறது. பாஜகவின் தவறுகள் போதும்,

நாம் உழைப்பின்றி ஜெயித்துவிடலாம் என்று எதிர்க்கட்சிகள் நினைத்துக்கொண்டிருந்தார்கள் என்றால், அதைவிடப் பெரியதவறு எதுவும் இருக்கமுடியாது.

‘வெல் அல்லது வெல்பவர்களை உள்வாங்கு’

‘வெல். வெல்லாத முடியாத பட்சத்தில் யார் வெல்வார்களோ அவர்களை உன் பக்கம் கொண்டு வா` என்ற சூத்திரத்தை பா.ஜ.க தலைவர் அமித் ஷா வலுவாக நம்பினார்.

இந்த சூத்திரத்தின் அடிப்படையில்தான் காங்கிரஸ் அமைச்சராக இருந்த ஹிமாண்தா பிஸ்வா சர்மாவை அஸ்ஸாமில் உள்ளிழுத்தது பா.ஜ.க. அவருக்கு மக்கள் மத்தியில் இருந்த ஆதரவை பயன்படுத்திதான் வட கிழக்கு மாநிலமான அஸ்ஸாமில் தமக்கு இருந்த தடைகள் அனைத்தையும் தகர்த்து எறிந்தது.

எதைப் பேச வேண்டும் என்பதைவிட எதைப் பேசக் கூடாது என்பதில் கவனமாக இரு என்பது பீகார் தேர்தல் பா.ஜ.க—வுக்கு கற்றுக் கொடுத்த பாடம்.

ஒற்றை நபர் மீது மக்கள் இந்து சமூகத்தை காப்பாற்ற வந்தவர் போல் நம்பிக்கை வைத்தது இந்திய வரலாற்றில் முன் எப்போதும் நிகழாதது. அது மட்டுமின்றி, சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் மோதி போன்ற ஒற்றை நபர் அரசியல் ரீதியாக இந்துத்துவா செல்வாக்கை பயன்படுத்தி மாபெரும் வெற்றியடைவதும் இதுவே முதல் முறை.

ஜவஹர்லால் நேரு மற்றும் இந்திரா காந்தி காலத்தில் கூட ஒரு நபர் அரசியல் அபரிமித ஆதரவைப் பெறுவது நடக்கவில்லை. ஏறக்குறைய 50 சதவிகிதம் ஓட்டுக்களை பாஜக வாங்கி இருக்கிறது. அனைத்து சமூகத்திலும் பாஜக ஆதிக்கம் செலுத்தி இருக்கிறது. கர்நாடகா மற்றும் மத்தியப்பிரதேசத்தில் காங்கிரஸ் ஆட்சி கவிழ்ந்தால் பாஜகவுக்கு மாநிலங்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். ஆர்.எஸ்.எஸ் மற்றும் இதர அமைப்புகள் ஒரே கலாச்சாரத்தை உருவாக்க முயற்சிக்கின்றன. இந்திய அரசியலில் அவர்களுக்கு கிடைத்த ஒரு எதிர்பாராத வாய்ப்பு இது என்று கருதலாம். இது எப்படி நடந்தது என்பதற்கு பல காரணங்கள் உள்ளன.

எதிர்க்கட்சிகள்

எதிர்க்கட்சிகள் மிகவும் பலவீனமாக இருக்கின்றன என்பதை மறுக்க முடியாது. அனைத்து விதங்களிலும் எதிர்க்கட்சிகள் பலவீனமாக இருக்கின்றன. திட்டங்கள் கொள்கைகளை வகுப்பதில் தடுமாற்றம் அடைந்தனர். தேசிய அளவில் ஒருங்கிணைந்து ஒரு கூட்டணியை உருவாக்க எதிர்க்கட்சிகள் தவறிவிட்டன.

மோதியின் கடந்த 10 ஆண்டுகால பிரசார உத்தி இந்தியாவின் பழைய அமைப்புகளை குற்றம் சாட்டுவது. அதாவது நேரு, காந்தி குடும்பத்தின் ஆட்சி. அது ஊழல் ஆட்சி என்றும் அவர்களால் வறுமையை ஒழிக்க முடியவில்லை என்பதுமே மோடியின் தாரக மந்திரம்.

கடந்த 5 ஆண்டுகளில் காங்கிரஸ் கட்சியிலும் பெரிய மாற்றம் ஒன்றும் நடக்கவில்லை. பிரியங்கா காந்தியை அரசியலில் கொண்டு வந்ததை தவிர, அந்த கட்சியில் எந்த மாற்றமும் இல்லை.

நடந்து முடிந்த மக்களவை தேர்தலில் பாஜக கூட்டணி 350க்கும் மேற்பட்ட இடங்களில் வென்று அசுர பலத்துடன் மீண்டும் ஆட்சியை பிடித்துள்ளது. 1971ல் இந்திரகாந்திக்கு பிறகு, 48 வருடத்துக்குபின் பாஜக வரலாற்று வெற்றி சாத்தியமாகி இருக்கிறது.

பாஜக கூட்டணி நாடாளுமன்ற குழுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதையடுத்து, பிரதமர் மோடி குடியரசுத் தலைவரிடம் ஆட்சியமைக்க உரிமை கோரினார்.

இதையடுத்து குடியரசுத் தலைவர் மாளிகை வெளியிட்டுள்ள அறிவிப்பில், நரேந்திர மோடி வரும் 30ம் தேதி பிரதமராக பதவியேற்பார் என தெரிவிக்கப்பட்டது. குடியரசுத் தலைவர் மாளிகையில் இரவு 7மணிக்கு மோடி பிரதமராக பதவியேற்கும் விழா நடைபெற்றது.


இதில் அமைச்சர்களும் மோடியுடன் பதவியேற்றார்கள். பிரதமர் மோடிக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

பதவியேற்பு விழாவில் இலங்கை அதிபர் சிறிசேனா உள்ளிட்ட வெளிநாட்டு தலைவர்களும் பங்கேற்றார்கள். மேலும் தேசிய ஜனநாயக கூட்டணி தலைவர்களும், காங்கிரஸ் கட்சி தலைவர் ராகுல் காந்தி உள்பட எதிர்க்கட்சி தலைவர்களும் பங்கேற்றார்கள்.

மோடி வந்தது கோடி மக்களின் விருப்பமே என்று வாதிட்டாலும், தெருக்கோடியில் நிற்கும் சாமான்யனுக்கும் பாதுகாப்பையும் நிம்மதியையும் வழங்கவேண்டும் என்ற, நம்பிக்கையை மோடியிடம் எதிர்பார்க்கலாமா என்பதுதான் இந்துவல்லாத இந்தியர்களின் கவலையாக இருக்கிறது. இதற்கு மோடியிடம் என்ன பதில் இருக்கிறது என்பது போகப்போகத்தான் தெரியவரும்.

நல்லதே நடக்கும் என்று நம்புவோமாக!

# கருத்துப் ப(ா)டம்




# சொல்றாங்க... சொல்றாங்க...



சந்திரபாபு நாயுடுவுக்கு ஆண்டவன் அழகான தீர்ப்பு எழுதிவிட்டார்!

**ஜெகன்மோகன் ரெட்டி**

(வஞ்சப் புகழ்ச்சியணி பாட இப்பவே கற்றுவிட்டீரா? எல்லாம் நாற்காலி செய்யும் வேலை!)



"கேள்வி கேட்க விரும்பிய நிருபர்களுக்கு கதவுகள் அடைக்கப்பட்டதாக தகவல். நீங்கள் தலைகாட்டியதே, பாதி போராட்டத்துக்கு வந்தது மாதிரி!"

**ராகுல்**

(என்னய்யா இது, குழந்தைப் பசங்க எல்லாம் யார்க்கர் போட விட்டுட்டீங்களே!)



"அமித் ஷாவைப் போன்ற ஒருவரை காங்கிரஸ் பெறுவதற்கான நேரம் இது"

**மெஹபூபா முப்தி**

(இந்த வார்த்தைகளில்தான் என்ன தெளிவு! என்ன தெளிவு!)



"மக்கள் எங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு கடமைப்பட்டுள்ளோம்"


**கமல்**

(கடமைப்படுவது இருக்கட்டும், உங்க 'கடமை' என்னன்னே இன்னும் தெரியாமல் குழம்பிக் கிடக்கும் மக்களுக்கு அதைத் தெளிவாகத் தெரிவிப்பதே உங்கள் முதல் கடமை!)

# தெறிக்கவிட்ட

## திரும்பிப் பார்க்க வைத்த திமுகவின் வெற்றி

ராகுல் காந்தியைப் பிரதமர் வேட்பாளராக மு.க.ஸ்டாலின் முன்மொழிந்தபோது, பாஜகவை எதிர்த்து நின்ற மற்ற கட்சிகளின் தலைவர்கள் அதற்கு உடன்படவில்லை. முணுமுணுப்புகளும் எதிர்ப்புகளுமே எழுந்தன. பரிகாசங்களுக்கும் குறைவில்லை. இருந்தாலும், ராகுல்தான் பிரதமர் வேட்பாளர் என்ற தனது நிலைப்பாட்டிலிருந்து ஸ்டாலின் கொஞ்சமும் பின்வாங்கவில்லை. தேர்தல் முடிவிலோ, ராகுலை ஏற்காமல் தேர்தலைச் சந்தித்த எதிர்க்கட்சிகள் இந்தியா முழுவதுமே படுதோல்வியைச் சந்தித்திருக்கின்றன. மத்தியில் ஆளும் பாஜக கூட்டணி 350 இடங்களில் வெற்றிபெற்றிருக்கிறது. பாஜக மட்டுமே 303 இடங்களில் வெற்றிபெற்றிருக்கிறது. ஆனாலும், தமிழகத்தில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற கூட்டணி ஒரு தொகுதி நீங்கலாக அனைத்து இடங்களையும் கைப்பற்றியிருக்கிறது.




பலம் பொருந்திய ஆளுங்கட்சியை எதிர்க்கும்போது அதற்குத் தலைமையேற்பது யார் என்பதில் நீடித்த ஊசலாட்டமே இந்தியா முழுவதும் எதிர்க்கட்சிகளின் படுதோல்விக்கு முக்கியக் காரணம். எல்லோரும் குறைந்தபட்ச உடன்பாட்டுடன் இணைந்து நின்று தேர்தலைச் சந்தித்திருந்தால், வெற்றிபெற முடியாமல் போயிருந்தாலும் இந்த அளவுக்கு மோசமான படுதோல்வியைச் சந்தித்திருக்க மாட்டார்கள். ‘தந்திரங்கள் இல்லாத வியூகங்கள் வெற்றியைத் தாமதிக்கும் வழி, வியூகங்கள் இல்லாத தந்திரங்களோ தோல்விக்கு முந்தைய வெறும் வாய்க்கூச்சல்கள்தான்’ என்கிற சீன போர்க்கலை சூத்திரங்கள் ஜனநாயகத் தேர்தலுக்கும் பொருத்தமானதுதான். பாஜகவை எதிர்த்து நின்ற காங்கிரஸூம் சரி, மற்ற மாநிலக் கட்சிகளும் சரி, தந்திரங்கள் இல்லாத வியூகங்களை வகுத்தார்கள் அல்லது வியூகங்கள் இல்லாத தந்திரோபாயங்களை மட்டுமே நம்பினார்கள்.

ஸ்டாலினுக்கு மட்டும் இந்த வெற்றி எப்படிக்





கிட்டியது? அரசியலில் எதிர்முனையில் இருப்பது யார், தோழமைச் சக்திகள் யார் யார் என்பதில் தெளிவாக இருந்தார் ஸ்டாலின். மாநிலத்தில் அதிமுகவையும் மத்தியில் பாஜகவையும் எதிர்முனையில் நிறுத்தி, பாஜகவை எதிர்க்கும் அத்தனை கட்சிகளையும் தன் பக்கம் ஈர்த்துக் கொண்டது அவரது வியூகம். அக்கூட்டணிக்குத் தலைமையேற்று வழிநடத்துவதற்குரிய கட்டமைப்பை ஏற்கெனவே உறுதிப்படுத்தியிருந்தார் ஸ்டாலின். எதிரியை அடையாளம் காண்பதும் படைகளை ஒருங்கிணைப்பதும்தானே போர்க்கலையின் முதல் அத்தியாயம். அப்புறம்தானே படையெடுப்பு, தாக்குதல் எல்லாமும்.



நமக்கு நாமே

2016 சட்டமன்றத் தேர்தலின்போது 89 தொகுதிகளில் மட்டுமே திமுகவால் வெற்றிபெற முடிந்தது. ஆனால், இன்னொருபுறம் தனது கட்சியைப் பலப்படுத்துவதற்கான அருமையான வாய்ப்பாக அத்தேர்தலைப் பயன்படுத்திக்கொண்டார். 2015—ல் மாநிலம் முழுவதும் சுற்றிச் சுழன்று அவர் மேற்கொண்ட 'நமக்கு நாமே' பயணம், கட்சியினரைத் தாண்டி பொதுமக்களிடம் அவருக்கு வரவேற்பைப் பெற்றுத் தந்தது. அரசியல்வாதிகளின் சீருடையாகவே மாறிவிட்ட வெள்ளைச்சட்டை, வேட்டியைத் தவிர்த்துவிட்டு, ஓர் இளைஞனுக்குரிய உற்சாகத்தோடு அவர் அந்தப் பயணங்களில் பங்கெடுத்துக்கொண்டார். நடைப்பயணம், சைக்கிள், ஆட்டோ, டிராக்டர் என்று எல்லா வாகனங்களிலும் ஏறி இறங்கினார். பள்ளி மாணவர்கள் முதற்கொண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் வரைக்கும் கைகுலுக்கிப் பேசினார்.




பயணத்தின்போது தான் சந்தித்த ஒவ்வொருவரும் கூறிய விவரங்களை, அளித்த மனுக்களை, விடுத்த வேண்டுகோள்களை உடனுக்குடன் சமூக வலைதளங்களில் பகிர்ந்துகொண்டார். தங்களது வேண்டுகோள்கள் செவிமடுக்கப்படுகின்றன என்ற நம்பிக்கையே மக்களை உற்சாகத்தில் ஆழ்த்தியது. விவசாயிகள், தொழில்முனைவோர், கல்லூரி மாணவர்கள் என்று பலதரப்பட்டவர்களையும் சந்தித்து உரையாடினார். அவர்களிடமிருந்து 4 லட்சத்துக்கும் மேற்பட்ட மனுக்களைப் பெற்ற ஸ்டாலின், திமுக வெளியிட்ட தேர்தல் அறிக்கையிலும் அவற்றுக்கு இடம்கொடுத்திருக்கிறார். இன்னொருபக்கம், குடும்பத்துக்குள் சகோதரர் மு.க.அழகிரிக்கும் அவருக்கும் இடையிலான வருத்தங்கள் கட்சிக்குள் எதிரொலிக்காமல் அந்தத் தேர்தலிலேயே அதற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். சிவகங்கை திருக்கோஷ்டியூரில் பெருமாள் கோயிலுக்கு அவர் சென்றது, திமுகவை இந்துக்களுக்கு எதிரான கட்சியாகச் சித்தரிக்கும் பிரச்சாரங்களுக்கு ஒரு மறுப்பாகவும் அமைந்தது.

காவிரி நெடும் பயணம்

'முடியட்டும், விடியட்டும்' என்ற முழக்கத்தை முன்வைத்து 'நமக்கு நாமே' பயணத்தை நடத்திமுடித்தார் ஸ்டாலின். அதிமுக ஆட்சி முடிவுக்கு வரவில்லை, ஆனால் திமுகவுக்கு அது விடிவுகாலமாக அமைந்தது. தொடர்ந்து மக்களைச் சந்திப்பதை ஒரு வழக்கமாகவே மாற்றிக்கொண்டார் ஸ்டாலின். கடந்த ஆண்டு, காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையோடு அவர் காவிரிப் படுகையில் மேற்கொண்ட உரிமை மீட்புப் பயணம் தமிழக அரசியல் வரலாற்றிலேயே மிகவும் வித்தியாசமானது. நெடுஞ்சாலைகளைத் தவிர்த்துவிட்டு, முழுவதும் கிராமப்புற சாலைகளின் வழியாகவே காவிரிப் படுகையை வலம்வந்தார் ஸ்டாலின். திருச்சி முக்கொம்புவில் தொடங்கிய அவரது பயணம் ஆளுநர் மாளிகையில் முடிவடைந்தது.

காவிரி உரிமை மீட்புப் பயணத்தை திமுகவின் பயணமாக அல்லாமல் தோழமைக் கட்சிகளுடன் இணைந்தே ஸ்டாலின் நடத்திமுடித்தார்.





இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த தொண்டர்களும் இந்தப் பேரணியில் ஆர்வத்தோடு பங்கேற்றார்கள். இந்தக் கூட்டணி வெறும் தேர்தலுக்கான கூட்டணி அல்ல, கருத்தியலின் அடிப்படையிலானது என்பதையும் அவர் மக்களுக்கு உணர்த்தினார். இத்தனைக்கும் மக்கள் நலக் கூட்டணியில், கடந்த தேர்தலில் கடும் பின்னடைவைச் சந்தித்தவர் ஸ்டாலின். ஆனாலும், அவர்கள் மீது அவர் எந்தக் கசப்புணர்ச்சியையும் காட்டவில்லை என்பதே இன்று திமுக தலைமையிலான கூட்டணிக்கு வலிமை சேர்த்திருக்கிறது.

பொள்ளாச்சி கோபம்

பொள்ளாச்சி சட்டமன்ற தொகுதியினை பொறுத்தவரை, அதிகமுறை வென்ற கட்சி அதிமுக தான். 1977ல் இருந்து தொடர்ந்து, பொள்ளாச்சி சட்டமன்ற தேர்தல்களில் அதிமுக வென்றுள்ளது, இடையில் 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் மட்டும் திமுக ஒரு முறை வெற்றி பெற்றுள்ளது. மீண்டும், 2001—ல் இருந்து தொடர்ந்து அதிமுக தான் வெற்றிபெற்று வந்தது.

கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதியிலும் 2001ல் இருந்து தொடர்ந்து நடைபெற்ற சட்டமன்ற தேர்தல்களில் அதிமுக வெற்றிபெற்றுள்ளது. தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதியில் கடந்த இரண்டு சட்டமன்ற தேர்தல்களில் அதிமுக தொடர்ந்து வெற்றி பெற்றது. உடுமலைப்பேட்டை சட்டமன்ற தொகுதியிலும் 2001ல் இருந்து நடைபெற்ற நான்கு சட்டமன்ற தேர்தல்களிலும் அதிமுக வெற்றிபெற்றது.

பொள்ளாச்சி மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட சட்டமன்ற தொகுதிகளிலும், மக்களவை தொகுதியிலும் அதிகமுறை வெற்றி பெற்று இந்த பகுதிகளில் வலுவான கட்சியாக அதிமுக



நிலைபெற்று இருந்தது.

அண்மையில் வெளியான பொள்ளாச்சி பாலியல் துன்புறுத்தல் நிகழ்வுகள் பொள்ளாச்சியில் மட்டுமல்ல தமிழகம் முழுக்கவே கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தின. பொள்ளாச்சியில் இளம் பெண்களை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கி அதனை வீடியோ எடுத்து அந்த பெண்களை மிரட்டிவந்ததாக குற்றம் சாட்டப்பட்டு நான்கு பேர் மற்றும் புகார் அளித்தவர்களை தாக்கிய வழக்கில் அதிமுக கட்சி பொறுப்பில் இருந்த நபர் கைது செய்யப்பட்டதும் மக்களிடையே பெரும் அதிருப்தியினை ஏற்படுத்தியது.

அரசு இந்த குற்றங்களை விசாரிப்பதில் தகுந்த முனைப்பு காண்பிக்கவில்லை என்பதே இந்த பகுதி மக்களின் பெரும் ஆதங்கமாக உள்ளது, அந்த கோபத்தின் எதிரொலியே தேர்தல் முடிவுகள் என்று இப்பகுதி மக்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

## மக்களோடு மக்களாக

தமிழ்நாட்டில் உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படாமல் கிராமப்புற, நகர்ப்புற உள்ளாட்சி நிர்வாகங்கள் முடங்கிக்கிடக்கும் நிலையில், ஸ்டாலின் அதையே தனது அரசியல் ஆயுதமாக மாற்றிக்கொண்டிருக்கிறார். மக்களவைத் தேர்தல் பிரச்சாரங்களுக்கு இடையிலும் ஊராட்சி சபைக் கூட்டங்களை நடத்தியபடியிருந்தார். மக்களிடம் குறைகளைக் கேட்டார். அவற்றை நிவர்த்திக்க வாய்ப்பில்லை என்றாலும் நாங்கள் பொறுப்பேற்கும்போது கண்டிப்பாக நிறைவேற்றுவோம் என்று மக்களுக்கு உறுதிமொழிகளை அளித்துவருகிறார். ஆளுங்கட்சிக்கு எதிரான, வலுவான பிரச்சாரங்களாக கிராம சபைக் கூட்டங்கள் மாறிக்கொண்டிருக்கின்றன.

ஸ்டாலின் பெற்றிருக்கும் வெற்றி என்பது வெறும் கூட்டணிக் கணக்குகளால் கிடைத்த வெற்றியல்ல. தான் சிறுகச் சிறுகச் சேகரித்த வெற்றியைத் தனது தோழமைக் கட்சிகளோடும் பகிர்ந்துகொண்டிருக்கிறார். அதற்குத் தயாராக இல்லாத மற்ற மாநிலக் கட்சிகள் தோல்வியைத் தழுவியிருக்கின்றன. ஸ்டாலின், தன்னைத் தனிப்பெரும் அரசியல் ஆளுமையாக நிறுவிக் கொண்டிருக்கிறார். ஸ்டாலினுக்கு ஏற்பட்டிருக்கும் அபரிமிதமான செல்வாக்குக்கு ஒரே காரணம், அவர் மக்களைச் சந்திக்கிறார், அவர்கள் சொல்வதைக் காதுகொடுத்துக் கேட்கிறார் என்பது ஒன்றேதான். மக்களாட்சியில் மக்களின் எதிர்பார்ப்பும் அது மட்டும்தான்.


ஆந்திர பிரதேசத்தில் ஜெகன்மோகன் ரெட்டி மேற்கொண்ட பாத யாத்திரை, அவரது வெற்றியில் முக்கியப் பங்காற்றியிருப்பதை இந்தியா முழுவதுமே ஏற்றுக்கொள்கிறார்கள். தமிழகத்தில் மு.க.ஸ்டாலின் மேற்கொண்டுவரும் தொடர் பயணங்களும் அதற்கு இணையானது. ஜெகனின் யாத்திரை, மக்களவைத் தேர்தலில் மட்டுமின்றி மாநிலத்திலும் அவருக்கு ஆட்சியமைக்கும் வாய்ப்பைப் பெற்றுத் தந்திருக்கிறது. மக்களவைத் தேர்தலில் தன்னை நிரூபித்திருக்கிற ஸ்டாலின், மக்களவையிலும் திமுகவின் செயல்பாட்டை நிரூபிக்கும்பட்சத்தில், தமிழ்நாடு சட்டமன்றம் அவருக்காகக் காத்திருக்கும்; அதற்கான போதிய அவகாசம் நிறையவே இருக்கிறது!


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा

# பெருந்தனம்

## ஏன் பெரும் பணக்காரர்கள் தொடர்பான விவாதம் முக்கியமானது ஆகிறது?

அமெரிக்காவின் '2020 அதிபர் தேர்தல்' வேட்பாளருக்கான போட்டியில் ஒரு அத்தியாயம் முடிவுக்கு வந்தது; மாதக்கணக்காகத் தன்னுடைய வருமான வரி விவரங்களைத் தாக்கல் செய்யாமல் தாமதித்துவந்த பெர்னி சாண்டர்ஸ், ஒருவழியாக அவற்றை வெளியிட்டார். 2016 தேர்தல் பிரச்சாரத்துக்குப் பிறகு சான்டர்ஸுக்கு அவருடைய புத்தகங்களுக்கான காப்புரிமைத்




தொகை நிறைய கிடைத்திருக்கும் என்று தோன்றுகிறது; இது வெளியே தெரிந்தால் உலகின் பெரும் பணக்காரர்கள் அடங்கிய 'ஒரு சதவீதக் குழு'வில் சேர்ந்துவிட்டதாகத் தன்னையும் கேலிசெய்வார்களே என்ற தயக்கம் காரணமாகக்கூட அவர் தாமதப்படுத்தினாரோ என்னவோ?

பெர்னி சாண்டர்ஸின் வருமானத்தை ஒரு பிரச்சினையாக்கவும் சிலர் விரும்பினர். இத்தகைய தாக்குதல் முட்டாள்தனமானது. தங்கள் மீதான வருமான வரியை உயர்த்துவதை ஆதரித்தும், தங்களுக்குத் தேவைப்படாத, ஏழைகளுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை வலுப்படுத்துவதை வரவேற்றும் பணக்கார அரசியல்வாதிகள் பேசினால் அதை வெறும் நடிப்பு என்று நாம் கருத வேண்டியது இல்லை; சமூகத்தில் தங்களுக்குள்ள பொறுப்பை உணர்ந்து, ஆதரிக்கிறார்கள் என்றே கொள்ள வேண்டும்.

'ஒரு சதவீதம்' எனும் சொல்லாடல்

உலகின் செல்வத்தில் சரிபாதிக்கும் மேல் தனி உடைமையாக வைத்திருக்கும் மேல்தட்டு 'ஒரு சதவீதக் குழு' பணக்காரர்கள் பற்றிய உரையாடல், 21—வது நூற்றாண்டு இயல்புத்தன்மையை நாம் சரியாகப் புரிந்துகொள்ள முடியாவிட்டால் தவறாகிவிடும்.

கோடிக்கணக்கானவர்களின் ஊதியம் மிகச் சிறியதாக உயரும்போது, மிகச் சிலரின் வருமானமோ பல கோடிகளாக உயர்ந்துவருவதை உணர்த்தத்தான் 'ஒரு சதவீதம்' என்ற சொல்லாடல் வந்தது. கோடிக்கணக்கான நடுத்தரக் குடும்பத்தினர் சந்திக்கும் பிரச்சினைகள் பணக்காரர்களுக்கு இல்லை என்பது உண்மைதான்; அமெரிக்காவின் மத்திய வங்கியான 'பெடரல் ரிசர்வ்' கூற்றின்படி, திடீரென 400 டாலர் அவசரச் செலவு ஏற்பட்டால் அதை எதிர்கொள்ளும் அளவுக்கு, வயதுவந்த

# செய்யும் மாயம்

**பால் க்ருக்மேன்**

அமெரிக்கர்களில் 40% பேரிடம் ரொக்கம் கிடையாது.


உள்ளபடி, பணக்காரர்கள் என்பதை நாம் பிரித்துப்பார்க்க வேண்டியிருக்கிறது. பணக்காரர், பெரும் பணக்காரர், உயர் அளவுக்குப் பணக்காரர் என்று மூன்று வகையினருக்கும் இடையில் செல்வத்திலேயே பெரிய வேறுபாடு இருக்கிறது. இன்றைக்கும்கூட எவ்வளவு பணம் இருந்தால் ஒருவர் உண்மையிலேயே பணக்காரர் என்று பெரும்பாலான பணக்காரர்கள் உணர்ந்ததைப் போலத் தெரியவில்லை.




பணக்காரர்கள் குறித்து ஏன் கவலைப்பட வேண்டும்?

என்னுடன் சிட்டி யூனிவர்சிடி ஆஃப் நியூயார்க்கில் படித்தவர் ஜேனட் கார்னிக். நிதி முதலீட்டுத் துறையில் முதல் 25 நிறுவனங்களில் மேலாளர்களாக இருப்பவர்கள் ஆண்டுக்குத் தலா 85 கோடி டாலர்கள் சம்பாதிக்கிறார்கள் என்பதைக் கூறிவிட்டு, 'நிஜமாக இருக்குமா?' என்று நம்பாமல் கேட்டார். அவர் சொன்ன தகவல் சரியானதுதான். ஒரு பெரிய தொழில் நிறுவனத்தின் தலைமை நிர்வாகிக்கு, சாதாரண ஊழியரைப் போல 30 மடங்கு அதிகமாக ஊதியம் இருக்கும் என்று பெரும்பாலான அமெரிக்கர்கள் கருத்து தெரிவித்தனர். ஆனால், உண்மையில் அது 300 மடங்கு!

ஏன் இந்த விவாதம் முக்கியமானது? பணக்காரர்கள் எவ்வளவு பணம் வைத்திருந்தாலும் நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? பொறாமைக்காக அல்ல, அப்படி பணக்காரர்களாக இருப்பது 'சில்லோர் முற்றுரிமை' (என்ற நிலைமைக்குத்தான் சமூகத்தை இட்டுச்செல்லும். மிதமிஞ்சிய பணம், மிதமிஞ்சிய அதிகாரத்தையும் செல்வாக்கையும் செருக்கையும் அவர்களுக்குக் கொடுக்கும். ஏழைகள், நடுத்தர மக்களின் துயரங்கள் அவர்களுக்குத் தெரியாது. அவர்களுக்கு எவையெல்லாம் தேவையோ




அவையெல்லாம் கைகளுக்கே வந்துவிடும். அவர்கள் எதை விரும்புகிறார்களோ அது பெரும்பாலும் மற்றவர்களுக்குத் தீங்கையே விளைவிக்கும். கோடீஸ்வரர்களிலேயே பொதுநலனை விரும்பும் பணக்காரர்களும் உண்டு, சுதந்திரச் சிந்தனையுள்ளவர்களும் உண்டு. ஆனால், இவர்கள் விதிவிலக்குகள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

பெரும் கோடீஸ்வரர்கள் அரசியலுக்கு நேரடியாக வராவிட்டாலும் அரசியல்வாதிகளிடையே மிகுந்த செல்வாக்கு பெற்றுவிடுகிறார்கள். மக்கள் அவர்களுக்கு அரசியல் தொடர்பே இல்லை என்று தவறாக நினைப்பார்கள். அவர்களோ தங்கள் மீது வரிச்சுமை அதிகமாகிவிடாதபடித் தடுத்துவிடும் அளவுக்கு ஆட்சியாளர்களிடையே செல்வாக்கு பெற்றிருப்பார்கள். அவர்களுடைய நலனுக்கான நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள், 'அத்தொழிலின் நன்மைக்காக' என்று கூறி வரியைக் குறைத்தோ, வரியை ரத்துசெய்தோ, வரிச் சலுகை அளித்தோ காப்பாற்றுவார்கள்.

யார் பெரும் பணக்காரர்கள்?

அமெரிக்காவை இப்போது ஆளும் வலதுசாரி குடியரசுக்கட்சி,பெரும்பணக்காரர்களிடம்தான் அதிக நன்கொடைகளைப் பெறுகிறது. எனவேதான், 'பெரும் பணக்காரர்கள்' என்று கூறும்போது யாரைக் குறிப்பிடுகிறோம் என்று புரிந்து பேசுவது முக்கியம். பணக்காரர்கள் என்று நாம் கூறுவது மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், எழுத்தாளர்களை அல்ல; விதிவிலக்காக சிலர் அந்த 'ஒரு சதவீதம்' என்ற வரம்புக்குள் வருகிறவர்களாக இருந்தாலும்!

அந்தப் பிரிவில் இருப்பவர்கள் அபூர்வமான சமூக அந்தஸ்து மிக்கவர்கள். தொழில்நுட்பம் வளர வளர, பொது எது, தனி எது என்ற வேறுபாடுகள் மறையுமா? எதைப் பெற சமூகம் காத்திருக்கிறது? பணக்காரர்களின் விருப்பம் என்ன என்று ஆராயுங்கள், அதன் மூலம் உங்களுக்கு எது கிடைக்கும் என்பது புரியும். மிகவும் கண்ணியமான சமூகத்தை உருவாக்கும் பணியிலிருந்து பணக்காரர்களை ஒதுக்கி வைத்துவிட வேண்டும் என்று இதற்குப் பொருள் அல்ல. பணக்காரர்கள் அதிக வரி செலுத்த வேண்டும். பெரும் பணக்காரர்கள் அதைவிட அதிகமாக வரி கட்ட வேண்டும். அவர்கள் நம்மிலிருந்து வித்தியாசமானவர்கள். நம்மிடையேயான வர்க்க வேறுபாடு பெரியது — மக்கள் உணர்ந்திருப்பதைவிட ஆழமானது.

தமிழில்: சாரி


தேவி!
வானுலகில், பூவுலகில், வேறெங்கும்
தேடினாலும் கிடைக்காத
indian express foods
இட்லி / தோசை மா
இலண்டனில் மட்டுமே கிடைக்கும்
indian express foods
+44 20 8133 5144
+44 7878 89 68 37




## இளையோரும் இலங்கையும்

பதினைந்து வயதுக்கும் முப்பத்தென்பது வயதுக்கும் இடைப்படடோர் இளையோர் ஆவர். எமது நாட்டில் இரண்டு கோடிக்கும் அதிகமான சனத்தொகையில் முப்பத்தெழு சதவீதம் இளையோர். கிட்டத்தட்ட நாட்டின் சனத்தொகையில் எழுபத்தைந்து இலட்சத்தினர். இளையோரின் ஆக்க பூர்வமான சிந்தனையைச் சரியாக நிகழ் கால சமூகம் பிரயோகித்தால்,




எதிர்காலத்தில் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கலாம். இளையோரின் சிந்தனையுடன், சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு நிகழ் கால சமூகம் அவர்களின் ஆளுமைகளைப் புரிந்து கொண்டு, அவர்கள் முகம் கொடு;க்கும் சமூக, பொருளாதார, அரசியல், கலாசார ரீதியான பிரச்சினைகள் பற்றி கவனத்தசை செலுத்தி, அவற்றைத் தீர்ப்பதற்கு விஞ்ஞான ரீதியான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.


இலங்கையின் எதிர்கால அபிவிருத்திக்கு அதிக பங்களிப்பை நல்கக்கூடிய, பலம் பொருந்திய வளர்ச்சியடைந்த இளையோரின் சக்திகள் இன்று கவனிப்பார் அற்று வீண்விரயமாவதைக் காணலாம். எமது நாட்டுப் பாடசாலைகளில முதலாம் தரத்திற்கு பிரவேசிக்கும் பல இலட்ச பிள்ளைகளில் உயர்தரத்தில் கல்வி கற்பதற்காக இணையும் தொகை 2 இலட்சமாகும். அத்தொகையில் பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்படுவோர் 30,000 ஆயிரமாகும். வருடமொன்றிற்குக் கல்வி தொடர்புகளிலிருந்து வெளியோரும் தொகை 330,000 இலட்சமாகும். இவ்வாறு வெளியேறுபவர்களை நாட்டின் பொருளாதாரத்தில் தொடர்புபடுத்துவதற்கு முறையான செயற்றிட்டமொன்று இல்லாததன் காரணமாக, குறிக்கோளின்றி எதிர்பார்ப்புக்கள் சிதைந்து வாழ்க்கையை நடத்தி செல்லும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதனால், தற்போது அவர்களின் வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்துள்ளது.

சரியான வழி நடத்தல் இன்மையால், இன்றைய இளையோர், போதைப்பொருளுக்கு அடிமையாதல், சமூக குற்றச் செயல்களில் ஈடுபடல், தொழில் தேடி வெளிநாடுகளுக்குச் செல்லுதல், பாதுகாப்பற்ற தொழிலில் ஈடுபடுதல், பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடுதல், எதிர் கால சிந்தனை இன்மை, எதிர் கால சந்ததியினர் பற்றி சிந்திக்காமை, தன் நம்பிக்கை இன்மை, விரக்தி மன நிலையால் தற்கொலைக்கு




புயல் ஸ்ரீகந்தநேசன்

முயற்சித்தல், கல்வியில் அக்கறை இன்மை, சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுதல், பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபடுதல், மத வாதத்தில் ஈடுபடுதல், இன வாதத்தில் ஈடுபடுதல், சாதியத்தைக் கடைப்பிடித்தல், பெற்றோரை மதியாமை, முதியோரை கனம் பண்ணாமை, உடற்பயிற்சிகளில் ஈடுபடாமை, சூழல் பற்றி அக்கறை இன்மை, நேரத்தின் முக்கியத்துவத்தினை உணராமை, சமபாடிகளை மதிக்காமை, வயதுக்கு மீறிய ஆசைகள், குறுக்கு வழியில் முன்னேற முயற்சித்தல், பாலியல் பிறழ்வுகள், சமூக பிறழ்வுகள், பண்பாட்டுப் பிறழ்வுகள், கடமையும் கண்ணியமும் கட்டுப்பாடும் இன்றி வாழ்தல், போதிய ஓய்வு




இன்மை, எந்நேரமும் கோபமான பதற்ற நிலை, நிலையாமையை உணராமை, வாழ்வதற்கான வாழ்க்கையை வாழாமை, பொழுபோக்கில் ஈடுபடாமை, இயந்திரமாக செயற்படுதல் முதலிய இன்னோரன்ன சிக்கல்களுக்கு உட்படுகின்றனர்.

சமூகத்தில் அரசு, குடும்பம் என்னும் இரண்டு அலகுகளுடன் இணைந்து தனி நபர்களும் இளையோர் வாழ்வில் செல்வாக்குச் செலுத்துகின்றனர். சமூக பொருளாதார முறையை வழி நடத்தல், ஆட்சி புரிதல், சமதர்ம சமத்துவத்தை நிலை நாட்டல் என்பவற்றைத் தீர்மானிப்பது அரசு ஆகும். அரச துறையின் மூலம் ஒட்டு மொத்த சமூகத்தின் இருப்பும் சகல சமூக உறவுகளின் தன்மையும் தீர்மானிக்கப்படுகின்றன. சமூகத்தில் மக்கள் ஒன்றாய் சேர்ந்திருக்கும் சிறிய அலகு குடும்பம் ஆகும். சிறுபராயத்திலிருந்து வாலிப பருவம் வரையிலான நபரொருவரை உருவாக்கும் போது தீர்மானகரமான பணியினை அவர் அல்லது அவள் இருக்கும் குடும்ப அலகால் ஆற்ற முடியும். ஒருவர் வசமுள்ள கருத்துக்கள், பழக்கவழக்கங்கள், கலாசார ரீதியான சுபாவ பழக்கம் முதலியவை குடும்பத்தில் சம்பவ காரணமாக அமைகின்றது. தனி நபர்களின் ஆற்றல், தலையீடு, பங்களிப்பு இளையோரின் சிந்தனையில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

இளையோரிடையே உக்கிரமான வேலையில்லாப் பிரச்சினை, நலிவடைந்த சேவையைப் பெறல் முக்கியமான பிரச்சினைகளாகும். தமது தகைமைக்கு ஏற்ப தொழில் இன்மையால், அவர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அரச தொழிக்கு இணைத்தக் கொள்ளப்பட்ட இளம் பட்டதாரிகள் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் காலத்தை வீணாக்குவதற்குவதையும் அவர்கள் கிராமங்களில் வாழவோருக்குப் பல வகையான பொருத்தமற்ற பணிகளைச் செய்து வருகின்றனர்.

உதாரணமாக, விவசாயம் பற்றி கற்காத இளையோர் கிராமங்களில் விவசாய பண்களில் ஈடுபடல். சாதாரண தரம், உயர்தரம்,




பட்டப்படிப்பு, டிப்ளோமா — கல்வியைக் கற்று நிறைவு செய்து வெளியோரும் இளையோருக்கு கற்ற கல்விக்கு ஏற்ப தொழில் வாய்ப்புக்கள் கிடைப்பது மிக அரிதாகவே உள்ளன. கலைத்துறையில் நிபுணத்துவம் பெற்ற ஒருவர் முகாமைத்துறையிலும் முகாமைத்துவதுறையில் நிபுணத்துவம் பெற்றவர் சுகாதாரத்துறையிலும் ஈடுபடுத்தப்படுகின்றனர். இதனால். இவர்களின் ஆளுமைகள் மழுங்கடிக்கப்படுகின்றன. தொழில் தேடி வெளி நாடுகளுக்குச் செல்லும் இளையோரும் பல துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

உதாரணமாக, இலங்கை இளையோர் கொரிய நாட்டில் தொழில் செய்வதாக கனவில் சஞ் சரித்து நீண்ட நாட்கள் காத்திருக்கும் ஆயிரக்கணக்கானோர் மத்தியில் சிறு தொகையினருக்கு மட்டுமே அந்த தொழில் கிடைக்கின்றது. அவ்வாறு சென்றவர்கள் தொழல் பாதுகாப்பு இன்மையால், பல்வேறு நோய்களுக்கு இரையாகின்றனர். தொழில் கிடைக்காதோர் மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர். அவர்களின் தகைமைகள், தகுதிகள் என்பவற்றுக்கு ஏற்ப தாம் பிறந்த நாட்டிற்காக உழைப்பைச் சிந்துவதற்குப் பொருளாதாரத்தில் சந்தர்ப்பங்ளை ஏற்படுத்திக் கொடுத்தல், முறையான பயிற்சிகளுடன், பாடநெறியைக் கற்பித்ததன் பி;ன்னர் ஏதாவது ஒரு தொழிலுக்காக வெளிநாடு செல்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல், அரசினதும் சமூகத்தினதும் கடப்பாடாகும்.


கல்வி, விஞ்ஞானம், கலை, மற்றும் தொழில் நுட்பமும் விசேட திறமைகள், தனிததுவ ஆற்றல்களும் மிக்க இளம் சமுதாயம் (இளைஞர், யுவதிகள்) குறைபாடுகள் மத்தியிலும், இலவசக் கல்வியினுள் பொருளாதார நெருக்கடியின் மத்தியிலான குடும்பங்களின் பிள்ளைகளுக்குப் படித்த பிரசையாக மாறக்கூடிய சந்தர்ப்பம் கிட்டியது. தற்போதைய நிலையில் இலவசக் கல்வியை இல்லாமலாக்கி, பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளக்கூடிய தனியார் நிறுவனங்களுக்கு அரசு அனுமதி வழங்கும் நிலை தோன்றியுள்ளது. தொடர்ச்சியாக வரவு செலவுத்திட்டத்தில் கல்விக்காக ஒதுக்கப்படும் உண்மையான நிதியானது நூற்றுக்கு 2 வீதம் கொண்டுள்ள நிலையில் அரச பாடசாலைகள், பல்கலைக்கழகங்களில் படிக்கும் பிள்ளைகளுக்கு மேலதிகமான பணத்தைச் செலவழிக்க நேரிட்டிருப்பதால், பாரிய கஷ்டங்களுக்குப் பிள்ளைகளும் பெற்றோர்களும் தள்ளப்பட்டுள்ளனர். இதனால், இளம் சமுதாயம் தமது கல்வித் தேவைகளை நிறைவேற்றக்கொள்ள பல சமூக பிறழ்வுகளில் ஈடுபடுகின்றது.

நவீன உலகத்திற்கு ஏற்ப இலங்கையில் கல்வி கற்று வெளியேருபவர்களுக்கு விஞ்ஞானம், தொழில்நுட்பம், புதிய ஔடதம், புதிய கிரகித்தல், புதிய எழுத்தாற்றல், புதிய ஆக்கங்கள் தொடர்பான அறிவு குறைவாக உள்ளது. இந்த சிக்கலை தவிர்ப்பதற்கு சகல இளையோருக்கும் கல்வி பெறும் உரிமையானது அடிப்படை மனித உரிமையாக ஏற்றுக்கொண்டு, வசிக்கும் பிரதேசம், இனம், சாதி, மதம், வர்க்கம் முதலிய பேதங்களின்றி சகலருக்கும் சமமாக கல்வியைப் பெற்றுக்கொள்ளும் வகையில் கல்வித்துறையை முழுமையாக அரசவுடைமையாக மாற்றுவதும் இளையோருக்கு அந்த அறிவை பெற்றுக்கொடுப்பதற்கும் சமூகத்தில் நிலவும் விஞ்ஞான ரீதியற்ற போலி கருத்தியலை இல்லாமலாக்குவது இலங்கை அரசினதும் நிபுணத்துவம் பெற்ற புத்திஜீவிகளினதும் தலையாய கடமையாகும்.

இளையோர் ஒற்றுமையாக செயற்படுவதன் மூலம் இனவாதத்தை எதிர்த்து தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்ப முடியும். உள்நாட்டு யுத்தத்தினால், பெருந்தொகையான இளையோரும் ஏனையோரும் இறந்தும் காயமுற்றும் இருப்பிடங்களை இழந்தும் உள்ளனர். முப்பத்தி மூன்று வருடங்களாக நடைபெற்ற இந்த யுத்தம் 2009 களில் நிறைவுற்றும் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தும் திசையை நோக்கி நாட்டை கொண்டு செல்ல முடியாமையானது கவலைக்கிடமா விடயமாகும்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே செயற்படும் இனவாதத்தைப் போல இனவாத கருத்தியல் விதைக்கப்படுவதை உடனடியாக தடுத்து நிறுத்தி, இனங்களுக்கிடையே சகோதரத்துவத்தைப் போல ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கும், உள் நாட்டு யுத்தத்தினால், பின்னடைவுக்கு உள்ளான சமூக, கலாசார விழுமியங்களை மீள நிலை நாட்டிக் கொள்ளவும், அரசும் ஒட்டுமொத்த சமூகமும் முன் நின்று உழைத்தால், இளையோரின் தீர்க்கமான சிந்தனையுடன், வருங்காலத்தில் நல்லதொரு சமூகம் உருவாகும். சகல மக்களுக்கும் ஜனநாயகம் மற்றும் சமத்துவத்தின் அடிப்படையில் தமது உரிமைகளை அளிக்கக் கூடிய அரசியல், பொருளாதார முறைகளை நிறுவுதல் வேண்டும். இன, மத, அடிப்படையில் பாடசாலைகள் நடத்துவதை நிறுத்தி, பாடசாலைகள் அனைத்தும் சகல இனங்களுக்கும் மதங்களுக்கும் உரிய மாணவர்ளை உள்வாங்க வேண்டும். எல்லா சந்தர்ப்பத்திலும் தேசிய கீதத்தை சிங்கள, தமிழ் மொழிகளில் பாடுவதைக் கட்டாயமாக்குதல். இவ்வாறான செற்பாடுகளை இளம் சமூகத்தின் மத்தியில் அமுலாக்குவதன் மூலம் ஆரம்பத்திலையே இனவாதத்தை இல்லாமலாக்க முடியும்.

கலை, கலாசாரம், இரசனை, பொழுதுபோக்கு, உடற்பயிற்சி முதலியவற்றை இளம் சமூகத்தின் மத்தியில் வளர்ப்பதன் மூலம், சகபாடிகளை மதித்து நடக்கும் பண்பையும் எதிர் கால சமூகத்தை வழி நடத்தும் ஆளுமையையும் கட்டியெழுப்புவதோடு, அறிவுள்ள ஆக்கத்திறனுடைய நுண்ணறிவு மிக்க மனிதனையும் உருவாக்க முடியும். இன்று இளம் சமூகத்தின் மத்தியில் கலையும் இரசனையும் அருகி செல்வதைக் காணலாம். இளம் சமூகத்தின் சகல பிரிவினரதும் கலாசார, தேசிய, மத ரீதியான பிரதேச பண்புகளைப் பிரதிநிதித்துவம் படுத்தும் விதமாக ஊடகங்களில் இளம் சமூகத்தினரை வெளிப்படுத்தி அவர்களை உற்சாகப்படுத்தி மறைந்துள்ள திறமைகளை வெளிக்கொணர்தல் வேண்டும்.




திறமையான இளம் சமூகம் இன்று பொழுது போக்கிற்காக மதுபானங்ளைப் பாவித்து, அதற்கு அடிமையாக வரையறுக்கப்பட்ட சிந்தனை வட்டத்துக்குள் உள்ளது. சாதாரண குடும்பங்ளைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கு பொழுது போக்கை பெறும் வழிகள் குறைவாகவே காணப்படுகின்றன. எனவே, குறைந்த பட்சம் இவர்களின் பொழுது போக்கிற்காக திரையரங்கங்கள், நாடக மண்டபங்கள், உடற்பயிற்சி நிலையங்கள், விளையாட்டுத் திடல்கள், நூல் நிலையங்கள், சனமூக நிலையங்கள் சமூக முன்னேற்ற சங்கங்கள் முதலியவற்றை நிகழ் கால சமூகம் அமைப்பதன் மூலம், நேரிய சிந்தனை கொண்ட இளம் சமூகத்தைப் போதைப் பொருளுக்கு அடிமையாவதிலிருந்து தவிர்க்க முடியும். இளம் சமூகத்தினரிடையே தொடர்ச்சியாக கலாசார விழுமியங்ளை உயர்வாகவும், முன்னேறிய பழக்க வழக்கங்கள் ஆழமாக பதியும் விதமாக, அநுபவங்களைப் பெறுவதற்காக தேவையான கொள்கையை உரிய துறையில் அறிமுகப்படுத்துவதற்கு நிகழ் கால சமூகம் முன்னுதாரணமாக திகழ வேண்டும். பண்பாட்டுக்கு விரோதமான, அவலட்சணமான வர்த்தக விளம்பரங்கள் மற்றும் ஊடக நிகழ்ச்சிளை நிறுத்துவதற்கு தேவையான சட்டங்ளை வகுத்து துரிதமாக நடைமுறைப்படுத்தல் வேண்டும். இதன் மூலம் இளம் சமூகம் திசை மாறி போவதைத் தடுக்க முடியும். ‘பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்’ — கலித்தொகையின் வரிக்கு ஏற்ப அவர்கள் வாழ்வில் வெற்றி பெறுவது உறுதி.

இளம் சமூகம், புலனற்றோராதல், பாலியல் நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகுதல், விசப் போதைப் பொருளுக்கு அடிமையாதல், ஒழுங்கற்ற பாலுறவில் ஈடுபடுதல் இவ்வாறு சுகாதார ஒழுக்க சீர்கேடுகள் எற்படுவதால், அழிவை எதிர் கொள்கின்றது. உலக நாடுகளுடன் இலங்கையை ஒப்பீட்டுப் பார்க்கும்போது, 1950 கள், 1970 கள் காலப்பகுதிகளில் மிக உயர் மட்ட சுகாதார வசதிகள் எமது நாட்டில் காணப்பட்டன. அவை இலவச சேவையாகவும் மக்களுக்கு நெருங்கிய வகையில் செயற்பட்டதாலும் சுகாதார வளமிக்க நாடாக, சர்வதேச மட்டத்தில் செலவாக்கும் சிறப்பும் பெற்றிருந்தது. ஆனால், அவை 1970 களின் பின்னரான காலக்கட்டத்தில் ஏனைய துறைகளைப் போல சுகாதார துறையும் படிப்படியாக தனியார்

மயப்படுத்தப்பட்டமையால், லாபத்தினை நோக்கமாகக் கொண்டு தனியார் துறை வைத்தியசாலைகள் உருவாகும் நிலை ஏற்பட்டது. எமது நாட்டில் சுகாதாரத்துறையின் முழுச் செலவில் அரசு ஒதுக்கும் நிதி 39 சதவீதமாகும். மிகுதி 61 சதவீதம் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. இளம் சமூகத்தினர் பாலுறவு தேவைகளைப் பூர்த்தி செய்து, கொள்வதற்குப் பாதுகாப்பற்ற முறைகளைப் பின்பற்றுவதால், ம் முதலிய தொற்று நோய்களுக்கு இரையாவது அதிகரித்து வருகின்றது. பல துறைங்களில் அறிவு வளர்ச்சி பெற்ற இளம் சமூகத்தினரிடம் பாலுறவு தொடர்பாக குறைந்த அறிவு காணப்படுவதால், பயங்கரமான விளைவுகளைச் சந்திக்க நேர்ந்துள்ளது. ஆளுமை மிக்க இளம் சமூகத்தினர் இலக்கு, குறிக்கோள் இன்றி பயணிப்பதால், விசப் போதைப் பொருளுக்கு அடிமையாகி இளமையை அழித்து வருகின்றனர். இலங்கையல் 50 குடும்பங்களில் ஒரு குடும்ப அங்கத்தவர் ஹெரோயின் போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளார் இது எதிர்கால இளம் சமூகத்தை படு குழியில் தள்ளிவிடும்.



இவ்வாறான நிலையை இல்லாது ஒழிக்க சுகாதாரத்துறை லாபத்தின் அடிப்படையில் செயற்படும் நிலை மாறி, மொத்த தேசிய வருமானத்திலிருந்து நான்கு சதவீதத்தை ஒதுக்கி, முற்றாக இலவச சேவையாக வழங்குவதோடு, அதன் பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். பாலுறவு கல்வியைப் பாடசாலைகளிலும் ஏனைய சமூக நிறுவனங்களிலும் இளம் சமூகத்தினருக்கு கற்பிக்க வேண்டும். போதைப்பொருளுக்கு அடிமையாகி புனர்வாழ்வு பெற்ற, பாதிக்கப்பட்ட இளம் சமூகத்தினர் தக்க மருத்துவ வசதிகளை பெற்றுக்கொள்வதற்கு உரிகையுள்ளதோடு, அவர்கள் பாடசாலை செல்லவும் தொழில் பயிற்சியைப் பெறவும் தொழில் செய்யும் உரிமையும் உண்டு. சிறுவர், சிறுமியர் பற்றிய அறிவை இளம் சமூகத்திற்கு ஏற்படுத்தல் சமூகத்தின் தலையாய பணியாகும்.

சைபர் அவகாசம் — நெருங்கிய நண்பனாக இருப்பவன் என்பது தற்போது எமது நாட்டில் பெருந்தொகையானவர்கள் இணையத்தளங்களைப் பயன்படத்துவதுடன், பல்வேறு அன்றாட விடயங்களுக்கான தகவல்கள், அறிவு, தொடர்பாடல் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும் பெற்றுக்கொடுக்கவும் பிரதான வடிவங்களாக மாறியுள்ளன. அவ்வாறே தமது தனிப்பட்ட விடயங்களைத் தெரிவிப்பதற்குச் சுதந்திரமான சூழல் காணப்படுவதுடன், இளம் சமூகத்தினர் சைபர் இடப்பரப்பை தம் வசப்படுத்த முற்படுவதைக் காணலாம். எவ்வாறாயினும் எமது நாட்டில் குறிப்பிட்டளவு இளம் சமூகம் சைபர் இடப்பரப்பில் செயற்பட தெரியாதவர்களாகவும் போதிய அறிவில்லாதவர்களாகவும் உள்ளனர். எனவே, அவர்கள் மானசீகமாக சிரமத்துக்கும் வெட்கத்திற்கும் ஆளானவர்களாக உள்ளனர் சைபர் இடப்பரப்பின் கொள்கையைப் பற்றி சமூகத்தினர் தப்பான கண்ணோட்டத்தில் பார்க்கின்றனர். நேரத்தை வீணாக்குதல், சமூக குற்றசெயல்களை தூண்டுதல், ஏமாற்று வித்தை, பாலியல இச்சையைத் தூண்டுதல் முதலிய சந்தர்ப்பங்கள் தப்பான கண்ணோட்டதிதிற்குக் காரணம்.

நாட்டின் தலைமைத்துவத்தை நடத்தி செல்வதும் சமூக, அரசியல், நிர்வாக சட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் இளம் சமூகதின் பொறுப்பாகவும் உரிமையாகவும் உள்ளன. இன்றைய காலகட்டத்தில் சிவில் சட்டத்தைப் பற்றி இளம் சமூகத்ஜீடையே நிலவும் குறைவான புரிதல் காரணத்தால், காவல்துறையின் முறையற்ற கைதுகளுக்கும் ஒடுக்கு முறைகளுக்கும் நிதமும் அவர்கள் உள்ளாவதைக்

காணலாம். பணபலம், அரசியல் பலம் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்களே, அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். சாதாரண குடும்பப் பின்னணியைக் கொண்டவர்கள் இதிலிருந்து விலத்தியிருக்கின்றனர். இந்த நிலைமைகள் மாற்றம் அடைவதற்கு அரசியல், பொருளாதார செல்வாக்கு காரணிகளால், இளம் சமூகத்தினர் தலைவர்களாக வருவதற்கு உள்ள சந்தர்ப்பங்களை நீக்கி, உண்மையாகவும் பொது நலத்துடன் சமூகத்திற்குத் தலைமை தாங்க விருப்பமுள்ள இளம் சமூகத்தினருக்குக் சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுக்கவேண்டும். அத்துடன், இன்று நடை முறையில் உள்ள சட்ட திட்டங்கள் பற்றிய அறிவை பாடசாலை மட்டத்திலிருந்து பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

தற்போது பாரிய பிரச்சினையாக இருப்பது இளைஞர், யுவதிகள் பொதுவான சமூக செயற்பாடுகளில் பங்கு பற்றாமையாகும். தலைமைத்துவ ஆளுமையுடன் செயற்படுவோர் குறைவாக இருப்பதாலும், கிராமங்களில் செயற்பாட்டு சங்கங்களில் கூட ஆண், பெண் சம மட்டத்திலான பரஸ்பர புரிந்துணர்வு செயற்பாடுகள் இல்லாததன் காரணமாகவும் மேற்கண்ட பிரசிசினைகள் நிலவுகின்றன. இனம் பலத்தை அடையும் போது நெருக்கமாக பழகுதல், சந்தேகம், குழு மன நிலை இல்லாத மன நிலை, இளம் சமூகத்தினரிடையே காணப்படுகின்றது. அதை தடுப்பதற்குப் பாடசாலைகளில் வருடாந்தம் சிறுவர் முன்னோடிகள் முகாம் (ஜீழைநெநச உயஅஜீள) நடத்துவதற்கும் பிரதேச மட்டத்தில் சிறுவர் முன்னோடி நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் நிகழ் கால சமூகமும் அரசும் முன்வர வேண்டும்.

வாழ்க்கையின் பெறுமதியை இளம் சமூகத்திற்கு உணர்த்தி, தற்கொலை, விபத்து, கலவரம், வீட்டிலிருந்து வெளியேறுதல் என்பன தொடர்பான அறிவை ஊட்டுதல் சமூகத்தின் பொறுப்பாகும். தற்கொலை செய்து கொள்ளும் மதிப்பீட்டில் எமது நாடு உலகில் மூன்றாம் இடத்தில் உள்ளது. நாளொன்றுக்கு 14 பேர் தற்கொலை செய்து கொள்வதுடன், 20 க்கு மேற்பட்டோர் தற்கொலைக்கு முயற்சிக்கின்றனர். இதில் பெரும்பாலானவர்கள் இளையோராவர். எதிர் காலம் சிதைந்து போயுள்ளதன் காரணமாக நம்பிக்கையிளப்பிற்கு உட்படுகின்றனர். அவ்வாறே இளம் தற்கொலையில் எமது நாடு இரண்டு தசாப்தங்களாக உலகத்தில் ஐந்து நாடுகளுக்குள் அடங்கின்றது. நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்பு செய்ய வேண்டிய இவர்கள் இவ்வாறு தற்கொலையாலும் விபத்தாலும் மரணத்தைத் தழுவுவது வேதனைக்கும் கவலைக்கும் உரிய விடயமாகும்.

இவற்றைத் தடுப்பதற்குச் சமூகப் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் இளம் சந்ததியினருக்கும் நேரடி தொடர்பினை ஏற்படுத்தி, ஆட்சி முறைக்கு சேர்த்துக்கொள்வதற்காக செயற்றிடம் ஒன்றை சமூகமும் அரசாங்கமும் இணைந்து வகுக்க வேண்டும். விபத்துக்களைக் குறைப்பதற்கும் விழிப்புணர் கருத்தரங்குகளையும் செயற்றிட்டங்களையும் நடத்தவேண்டும்.

சூழலையும் புவியையும் பாதுகாப்பது அனைத்து சமூகத்தினதும் கடைமையாகும். மனித வாழ்வுடன் நேரடித் தொடர்பு கொண்ட சூழல் இலாபத்தை தமது ஒரே குறிக்கோளாக கொண்ட பொருளாதார முறைகாரணமாக அழித்தொழிக்கப்பட்டுள்ளது. மிருகங்கள், பறவைகள், காடுகள் உள்ளிட்ட ஒட்டுமொத்த சுற்றாடல் தொகுதியையும் அழித்தொழித்ததின் காரணமாக காலநிலை மாற்றம், இயற்கை அனர்த்தம், நோய்கள் முதலியன சமூகத்தைப் பாதித்துள்ளன. எதிர் கால தலைமுறையினருக்குச் சுற்றாடலை பாதுகாப்பாக கையளிக்க வேண்டும். சூழல் பற்றி அன்பும் பரிவும் பிடிப்பும் ஏற்படும் விதமாக தயாரிக்கப்பட்ட விடய நெறிகளைப் பாடசாலை கல்வியிலும் உயர்க் கல்வியிலும் பாடமாக கற்பிப்பதன் மூலம் இளம் சமூகத்திற்கு விழிப்புணர்வை உண்டு பண்ண முடியும்.

தொகுத்து நோக்கும் போது இன்றைய இளையோர் நல்ல சிந்தனைகளுடன், திகழ்ந்தாலும் சில சட்ட விரோத செயல்கள் அவர்களைத் திசை திருப்புகின்றன. எவ்வாறாயினும் அவர்களிடம் காணப்படும் நல்ல சிந்தனைகளை இன்றைய சமூகம் கட்டியெழுப்பி பாதுகாத்து எதிர்கால சமூக வளர்ச்சி, இளையோரின் சிந்தனையுடனும் நிகழ் கால சமூகத்தின் பங்கேற்பும் பரஸ்பரம் தொடர்பு கொண்டுள்ளது. அந்த தொடர்பை வலுப்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் சமூக மாற்றத்தினை ஏற்படுத்தி ஆரோக்கியமன சமூகத்தை உருவாக்க முடியும். இலங்கையில் 1990 களில் உயர்தரத்தில் சித்தியடைந்தவர்களில் 21 சதவீதத்தினர் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்க பட்ட போதிலும் தற்போது 17 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. தொழில் வாய்ப்பையும் தொழிற்சாலைகளையும் பெருக்குவதன் மூலமும் இளம் சமூகத்தின் சிக்கல்களைக் குறைக்கக் கூடிய நிலை தோன்றும். நவீன இளம் சமூகத்தினர் சமவுரிமை, சுற்றாடல் நேசிப்பு, நச்சுப்போதை எதிர்ப்பு, பெண்ணை மதித்தல, தாயகத்தை நேசித்தல, ஊடகங்களைச் சரியாக பயன்படுத்தல் முதலிய பண்புகளை உள்வாங்கி செயற்பட்டால், எதிர் காலத்தில் இளையோரின் நல்ல சிந்தையுடன், நல்ல சமூகத்தை நிகழ் கால சமூகத்தின் ஆதரவுடன், கட்டியெழுப்ப முடியும்.

# தமிழே

## பாடம் சொல்லும் பர்மா தமிழர்கள்!

கண்டங்கள் பல கடந்து, புலம் பெயர்ந்து வரும் பறவைகளுக்காக வேடந்தாங்கலையும், கூந்தன்குளத்தையும் ஆயத்தமாக்கி வைத்திருக்கும் வாழ்க்கை மரபு, தமிழகத்துக்குச் சொந்தமானது. பறவைகளுக்கு நீதி வழங்கும் இந்த மண்ணிலிருந்து புலம் பெயர்ந்து உலகம் முழுவதும் செல்லும் தமிழர்களுக்கு இந்த வரம் வழங்கப்பட்டுள்ளதா என்பது நம் முன் நிற்கும் பெரும் கேள்வி. ஆண்டுக்கணக்காகத் தகித்துக் கொண்டிருக்கும் இந்தக் கேள்விக்கிடையே, கடும்பாறைக்கு ஊடாக மலர்ந்திருக்கும் அழகிய பூங்கொடியைப் போல நம்மை வியப்பூட்டுகிறது பர்மா தமிழர்கள் வடிவமைத்திருக்கும் பண்பான வாழ்க்கை.







மியான்மர் என இன்று குறிப்பிடப்படும் பர்மாவுக்கும் தமிழகத்துக்கும் இடையிலான உறவுச் சங்கிலி இரண்டாயிரம் ஆண்டுகள் பழைமையானது. சங்கத் தமிழனும், பிற்காலச் சோழர்களும் தடம் பதித்த மண் பர்மா. ஆங்கிலேயர்களின் ஆட்சியில் இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்த இந்நாட்டிற்கு உரிமையுடன் தமிழர்கள் சென்று வந்தனர்.

பர்மாவில் ஈட்டிய செல்வத்தில் அரண்மனைகள் போல தமிழகத்தில் பல வீடுகள் எழுந்தன. இந்த வரலாற்றின் சாட்சியங்களாய், ஆயிரம் ஜன்னல்கள் வைத்த செட்டிநாட்டு வீடுகள் இன்றும் கம்பீரமாக எழுந்து நிற்கின்றன. ஏழைத் தமிழர்களின் ஈடில்லா உழைப்பில் உருப்பெற்ற இந்நாட்டின் வயல்கள், ஆசியாவின் அரிசிக்கிண்ணமாக மாறிய அற்புதம் நிகழ்ந்தது.

காலங்காலமாகத் தொடர்ந்த இந்த உறவுச் சங்கிலி, இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அறுந்தாடியது. உலகப் போருக்குப் பின் எழுந்த புதிய சூழலாலும் அறுபதுகளில் ஏற்பட்ட ராணுவப் புரட்சியாலும் தமிழர்களின் வாழ்க்கை துன்பக் கடலில் திசை மாறிப் பயணித்தது. பர்மாவின் பக்கங்களிலிருந்து லட்சக்கணக்கான தமிழர்கள் கிழித்தெறியப்பட்டனர்.

வியர்வை சிந்தி உழைத்து உருவாக்கும்

# தமிழே

இரா. குறிஞ்சிவேந்தன்

மண்ணிலிருந்து, வேரோடுப் பிடுங்கி எறியப்படுவது தமிழர்கள் வாழ்க்கையில் புதிய அத்தியாயமன்று. அது வழக்கமான வரலாறுதான். ஆனால், எந்த நாடு வாழ்வைப் பறித்து விரட்டியதோ, அந்த நாட்டையும், அந்நாட்டின் பூமி புத்திரர்களையும் தமிழனை நேசிக்கும் மனிதர்களாக மாற்றிக் காட்டியதுதான் பர்மா தமிழர்களின் மகத்தான சாதனை. அரை நூற்றாண்டுக்கால இடைவெளியில் மௌனமாக நிகழ்ந்துள்ள இந்த அற்புத மாற்றத்தை அனைத்துலகத் தமிழர்களும் அறிவது அவசியமாகும்.



ஆங்கிலேயர்களுக்கு வெற்றியை ஈட்டித் தந்த இரண்டாம் உலகப் போரின் முடிவில், பல மாற்றங்களை பர்மா கண்டது. அதுவரை பர்மிய வயல்களையும், செல்வங்களையும் பேரரசர்களைப் போல ஆண்டுவந்த செட்டிநாட்டு வணிகர்கள் பலர், உயிரை மட்டும் சுமந்து நடைப்பயணமாகவே தமிழகம் வந்து சேர்ந்தனர். அவர்களின் கணக்கில்லாச் சொத்துகள் அரசாங்க வசமாயின. அதுவரை சகோதரர்களைப் போல ஒன்றி வாழ்ந்த பர்மியர்களும் தமிழர்களும் கிழக்கும் மேற்குமாகத் திசைமாறி நின்றனர்.

நீறு பூத்த நெருப்பாகப் புகைந்து கொண்டிருந்த இந்த மனவேறுபாடுகள், அறுபதுகளில் வேறு வகையாக வெடித்துச் சிதறத்தொடங்கின. ஜெனரல் நிவின் தலைமையில் அதிரடியாக ஏற்பட்ட ராணுவப் புரட்சியின் விளைவாக, ஒரே நாளில் தமிழர்களின் வாழ்க்கை வரைபடம் சரிந்து பாதாளத்தில் வீழ்ந்தது. எளிய தமிழர்கள் உழைத்து உருவாக்கிய அங்காடிகளும், வணிக நிறுவனங்களும் அரசுடைமையாக்கப்பட்டன. தமிழ்ப் பள்ளிகள் மூடப்பட்டன. வானொலியில் மிதந்த தமிழ்ச் சேவை தன் மூச்சை நிறுத்திக்கொள்ள, தேமதுரத் தமிழோசையைப் பரப்பிய தமிழ் நாளிதழ்களும் ஒரே இரவில் தலைமறைவாயின.

அச்சுறுத்தல்களும், கெடுபிடிகளும் சுழன்றாடிய

வேதனைச் சூழலில் இருந்து மீள நினைத்த லட்சக்கணக்கான தமிழர்கள், தங்கள் மூதாதையர்களின் தேசத்திற்கே சென்றுவிட முடிவெடுத்தனர். பர்மாவோடு பின்னிப் பிணைந்துவிட்ட மிச்சத்தமிழர்களோ அந்த மண்ணிலேயே வாழ்ந்துவிடத் தீர்மானித்தனர்.

இப்படி பர்மாவில் பாதியும், தமிழகத்தில் மீதியுமாய் பல தமிழ்க் குடும்பங்கள் பிளந்து நின்றன. இந்தக் காலகட்டத்தில்தான், தமிழர் வாழாத நாடில்லை; ஆனால், தமிழர் வாழ்ந்திட தான் ஒரு நாடில்லை என்ற முழக்கம் ஓங்கி எழுந்தது.

தளத்தில் தமிழர்கள் ஏற்படுத்திய அமைதிப் புரட்சி. முருகன், மாரியம்மன், முனீஸ்வரன் என்று தமிழ்த் தெய்வங்களுக்கான கோயில்களில், பர்மியர்களின் கண்கண்ட தெய்வமான புத்த பகவானுக்கும் தனி சந்நிதியை அமைத்தனர். ஆவேசக் கோலத்தில் அம்மனும், அமைதி மலராய் புத்தரும் ஒரே ஆலயத்தில் காட்சி தரும் வித்தியாசமான ஆன்மிகத்தை வரலாற்றில் முதன்முறையாக பர்மா தரிசித்தது.

முருகன் சந்நிதியில் விளக்கேற்றிய தமிழ்ப் பெண்கள், புத்தருக்கும் நெய் விளக்கிட்டனர். புத்தரைத் தரிசிக்க வந்த பர்மியப் பெண்கள்,



சொந்தங்களைத் தொலைத்த துயரத்தை மனத்தில் அடக்கிய பர்மா தமிழர்கள் உள்ளுக்குள் அழுதாலும், உழுவதை நிறுத்தவில்லை. பன்மடங்கு வலிமையுடன் ஓய்வறியாது வயல்களில் உழைத்தனர். பர்மிய மண்ணைப் பொன்னாக்கிய உழைப்பாளிகள் தாங்கள் என்பதை ராணுவ ஆட்சியாளர்களுக்கும் அதிகார வர்க்கத்திற்கும் தம் வியர்வைத் துளிகளால் பதிவு செய்தனர்.

அரசியல் அதிகாரத்தில் பங்கு கேட்காமல், பொருளாதாரப் பாதையில் முழுமையாகப் பயணிக்க முடிவெடுத்ததுதான் பர்மியத் தமிழர்களின் தொடர் வெற்றிகளின் மூல காரணம். ஏனென்றால், எத்தகைய அரசியல் விசுவரூபமாக இருந்தாலும், அவர்கள் வளைந்து நிற்கும் பீடம் பொருளாதாரம் என்பதுதானே நிதர்சனம்.

தமிழர்களைப் பர்மியர்கள் உயர்வாக மதிப்பதற்கான மற்றொரு காரணம், பண்பாட்டுத்

மாரியம்மனுக்கும் மலர் வைத்து வணங்கிச் சென்றனர்.

பார்வையாலேயே பசியாற்றும் தமிழர்களின் இணையில்லா விருந்தோம்பல் பண்பினைப் பர்மிய இனத்தவர்கள் முழுமையாக உள்வாங்கிக் கொண்டனர். தாங்கள் தோற்கடிக்க நினைத்த தமிழர்களிடமிருந்தே கலைகள் பலவற்றைக் கற்றுக் கொண்டது பர்மிய மக்களினம். பதிலுக்கு பர்மியர்களைக் காட்டிலும் வெகுஅழகாய் பர்மிய மொழியைப் பேசும் ஆற்றலைத் தமிழர்கள் வளர்த்துக் கொண்டனர்.

பர்மிய மொழியில் உரையாடினாலும், இதயத்தின் மையத்தில் தமிழை உயிர்த்துடிப்பாக வைத்துப் போற்றுவதில் அத்தமிழர்கள் உயர்ந்து நிற்கின்றனர். பள்ளித்தலம் அனைத்தும் கோயில் செய்குவோம் என்றார் மகாகவி பாரதி. ஆனால், சற்றே வித்தியாசமாக கோயில்கள் அனைத்தையும் பள்ளித்தலமாக மாற்றி அன்னைத் தமிழைப்

பர்மியத் தமிழர்கள் வாழச் செய்துள்ளனர். அந்த மண்ணில் பரவிக்கிடக்கும் நூற்றுக்கணக்கான ஆலயங்களில், மந்திரங்கள் ஒலிக்க மறந்தாலும், மாலை நேரப் பள்ளிகளின் மந்தகாசத் தமிழ் ஒலிக்க மறப்பதில்லை.

மனிதர்களின் வரிசையில் தமிழர்களின் பெயர்களும் இணைந்து வருகின்றன. பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்களாக, அரசு அலுவலகங்களில் மேலதிகாரிகளாக தமிழர்கள் இடம்பெற்றுள்ளனர். மொத்தத்தில் தமிழர்களைச் சொந்த சகோதரர்களாக எண்ணும் சிந்தனை



பர்மியர்களிடம் பரவலாக ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம், காலத்திற்கேற்ப தமிழர்கள் மேற்கொண்ட அறிவார்ந்த முடிவுகளே.

பணிவு, அடக்கமான வாழ்க்கை, கட்டொழுங்கு போன்ற அடிப்படைப் பண்புகள் பர்மா தமிழர்களிடம் ஓங்கி நிற்பதற்குக் காரணம், அந்நாட்டிலுள்ள புத்த மடங்கள். அரசியல், இனவாதம், பேதமூட்டல் ஆகியவற்றை ஆடையாகப் போர்த்திக் கொள்ளாமல், புத்தம், தர்மம், சங்கம் என்று வாழும் அன்பு வடிவமான புத்தத் துறவிகளை அந்த நாடு பெற்றுள்ளது. இந்தத் துறவிகளிடம் இளம் வயதிலேயே பாடம் கேட்கும் வழக்கத்தை அங்குள்ள தமிழ்க் குழந்தைகள் வழக்கமாக வைத்துள்ளனர்.

பண்பாட்டையும் பண்பட்ட இதயத்தையும் பகிர்ந்து வாழும் கலையைப் பர்மியர்களும் தமிழர்களும் காலப்போக்கில் முழுமையாகக் கற்றுக்கொண்டுள்ளனர். அந்த மண்ணில் வலம் வரும் ஆலயத் தேர்களின் வடக் கயிறுகளை பர்மிய அரசியல்வாதிகள் கொடியசைத்து வழியனுப்புகின்றனர். ஆலயத் தீமிதி விழாக்களில், பக்திப் பெருக்குடன் நெருப்பு மிதிக்கும் பாதங்களில் பர்மியப் பெண்களின் பாதங்களையும் காணமுடிகின்றது.

பர்மாவின் பொருளாதார ஆளுமை மிக்க

சபிக்கப்பட்ட வாழ்க்கையைக்கூட சத்தமின்றிச் சரித்திரமாகச் செதுக்கவியலுமென்பதை மெய்ப்பித்த பர்மா தமிழர்கள் கதை, தமிழின நெடுங்காவியத்தில் பொறிக்க வேண்டிய பாடம். புறக்கணிப்பில் இருந்துகூட, புதிய அத்தியாயத்தை வளர்த்தெடுக்க முடியுமென்னும் செய்தியை இந்தத் தமிழர்களின் வாழ்க்கை நமக்குக் கற்றுத் தருகிறது.

இந்த வெற்றிக் கோட்டை பர்மா தமிழர்கள் எட்டுவதற்கு அரைநூற்றாண்டுக்காலம் ஆகியிருக்கலாம்; ஆனால், உலகெங்கும் பரவி வாழும் தமிழர்களின் வாழ்க்கைக்குத் தேவையான அமைதியின் ரகசியங்கள், அந்த அரை நூற்றாண்டுக்காலப் பாதையில் கண் சிமிட்டியபடி கம்பீரமாய் வீற்றிருக்கின்றன.

# இறப்பு

நீ எனக்குச் சொந்தமில்லை என்று தெரிந்தும்
கனவில் கழிக்கிறேன்

உன்னுடன் வாழ நினைத்த என் காதலை
பித்துப்பிடித்த இதயத்தில் இரத்தம் வழிகிறது

நீ விட்டுச் சென்ற காதல் வடுக்களால்,
நம்ப மறுக்கும் இதயத்திடம்
யாசகம் கேட்கிறேன் என்ன செய்வது?

குப்பையாக கிழித்தெறியப்பட்ட
என் காதல்
உன்னைப் பொறுத்த வகையில்
இறந்ததாகவே இருக்கட்டும்,

என் காதல் இம்சைகளில் இருந்து
எப்போதோ உனை
விடுதலை செய்து விட்டேன்,

புலம்பித்திரியும் என் மனதிற்கு
முற்றுப்புள்ளி வைக்க ஏங்குகிறேன்,

உன்னைக் குறை சொல்வது என் நோக்கமல்ல
நான் ஏமாற்றப்பட்டேனா?
என்பதைத் தாண்டி எதிர்பார்ப்புகளால்
தண்டிக்கப்பட்டேன் என்பதே நிதர்சனம்,
த
ண்டனைக் கால அவகாசம்
என் வாழ்நாள் முழுவதையும் ஆக்கிரமிக்கிறது
உன் நினைவுகளிலிருந்து எனை விடுவிக்க.

**கார்த்திகா பாண்டியன்**

# வேறுபாடு

உறங்கும் நேரத்தில்
கண்கள் ஒத்துழைப்புக்
கொடுக்கவில்லை!

படிக்கும் நேரத்தில்
கவனம் ஒத்துழைப்புக்
கொடுக்கவில்லை!

உண்ணும் நேரத்தில்
வாய் ஒத்துழைப்புக்
கொடுக்கவில்லை!

இன்றைய சமூகப் பார்வைக்குள்
எதுவுமே நியாயமில்லை,
குறைகள் காண்பதில் இங்கு
சலித்தவர் யாருமில்லை

பொய்யான பிம்பத்தோடு
சுழல்வதில் பெருமையில்லை
எனெக்கென்னென்று வாழ்வதால்தான்
உயிருக்குள் ஊற்று இல்லை

ஆளுக்கு தகுந்தாற்போல்
முகமூடியணிய விருப்பமில்லை
அதனால் தானோ என் நிலை
இன்னும் முன்னேறவில்லை

அசல் எது? நகல் எது? என்று
தெளிவாக விளங்கவில்லை
நிஜமாக என்னை
வதைக்க துளியும் விருப்பமில்லை!

நானாக செயல்படும் பொழுதும்
சமூகத்தை சார்ந்து வாழ்வதால்
என்னை மீறிய ஒரு நிலைப்பாடு,
அதை உணர்ந்த பிறகுதான்
எனக்குள் எத்தனை எத்தனை வேறுபாடு
இங்கு முளைக்கும் ஒவ்வொரு உதவிகளும்
வியாபரத்தின் ஆணி வேரன்றோ!!

**ஞா.கா.சௌந்தர் ராஜன்**

# பிழை செய்யும் பிரம்மனே!

இடியுடன் கூடிய மழையில்
வானம் கிழிந்து புத்தகம்
ஒன்று விழுந்தது
எடுத்து படித்த நான்
சிரித்து முடித்தேன் — காரணம்
தமிழில் பிழை நிறைந்த புத்தகம்
பிரம்மச்சுவடியாம்.

ஆத்திரம் கொண்ட நான்
ஆணையிட்டேன் பிரம்மனை
அழைத்துவர.
நீ செய்யும் தவறுக்கு
தண்டனை எங்களுக்கா?
பிழையின்றி எழுத
என் நண்பர் யார் வேண்டும் கேள்!

பல விஷயங்களை விவாதிக்க அழைக்கிறான் ஒருவன்
யாழ்ப்பாணத்தில் இருந்துகொண்டு தமிழை
யாசிக்கிறான் ஒருவன்
மௌனத்தை உயிர்த்தெழச் செய்கிறான் ஒருவன்
சிட்டுக்குருவியாய் சிறகடிக்கிறான் ஒருவன்
தாயான போதும் தாயின் மடி தேடுகிறாள் ஒருத்தி
தனிமையில் பேச சிநேகத்துடன் அழைக்கிறாள்
ஒருத்தி
திரைக்குள்ளே விட்டு உயிரை தேடுகிறான் ஒருவன்
தான் காதலிக்காமலே பலர் காதலுக்கு
கவிதை பல எழுதுகிறான் ஒருவன்
கடல் கடந்து சென்றும் தமிழை
காதலிக்கிறான் ஒருவன்

யார் வேண்டும் கேள்
இன்னும் எத்தனையோ
அருமையான நட்புகள் என்னிடம் இருக்க
வெட்கமின்றி நீ வா!
தயங்காமல் தமிழ் எழுத
கற்றுத் தருவர் உனக்கு!

இனிமேலும் நீ செய்யும் தவறுக்கு
தண்டனை எங்களுக்கு வேண்டாம்
தவறு செய்யும் உன்னைத் தண்டிக்க
இவர்களில் யார் வருவார் தெரியாது!

**காளீஸ்**

## கொண்டாட்டம் தரட்டும் கோமாளி!

பிரதீப் ரங்கநாதன் இயக்கத்தில் ஜெயம் ரவி நடிப்பில் உருவாகி வரும் படம் கோமாளி. காஜல் அகர்வால், சம்யுக்தா ஹெக்டே, யோகி பாபு, கே.எஸ்.ரவிகுமார் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். இந்தப் படத்தில் ஜெயம் ரவி 9 விதமான கெட்டப்புக்களில் தோன்றுகிறார். ஆதிவாசி, ஐடி இளைஞன், அடிமை, ஜோக்கர் உள்ளிட்ட தோற்றங்களில் வருகிறார். ஒரு கெட்டப் இருக்கலாம் என்று தெரிகிறது. படத்தின் டைட்டிலை சமீபத்தில் வெளியிட்ட படக்குழுவினர் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை வெளியிட்டனர். ஜெயம் ரவி தனது ட்விட்டரில் இந்த போஸ்டரை பதிவிட்டுள்ளார்.



## 'கோமாளி'யான ஜெயம் ரவி!



## ஜெயிக்கட்டும் சாக்ஷி!

## ஷேக்ஸ்பியரின் நாடகத்தில் சாக்ஷி!

வில்லியம் ஷேக்ஸ்பியரின் உலக பிரசித்தி பெற்ற 'மெக்பெத்' என்ற நாடகம் தமிழில் 'பகைவனுக்கு அருள்வாய்' என்ற பெயரில் படமாக்கப்படுகிறது. இந்தப் படத்தை, திருமணம் என்னும் நிக்காஹ் படத்தை இயக்கிய அனீஸ் இயக்குகிறார். இதில், சதீஸ் நீநாசம் என இரட்டை கதாநாயகர்கள் நடிக்கும் இந்தப் படத்தில் நாயகியாக சாக்ஷி அகர்வால் நடிக்கிறார். ரஜினியின் 'காலா', அஜித்தின் 'விஸ்வாசம்' படத்திலும் நடித்துள்ள சாக்ஷி அகர்வால், ஜி.வி.பிரகாஷ் உடனும் இணைந்து ஒரு ஹாரர் கலந்த காமெடி படத்திலும் நடிக்கிறார். "நிச்சயம் இந்த ஆண்டு எனக்கு தமிழ் சினிமாவில் முக்கியமான ஆண்டாக இருக்கும்" என்கிறார் சாக்ஷி.



## வேகமாக பாயும் கைதி!

'மாநகரம்'' படத்துக்கு பிறகு கார்த்தி நடிக்கும் 'கைதி' படத்தை இயக்குகிறார் லோகேஷ் கனகராஜ் கூறுகையில், 'மாநகரம் திரைக்கதையை போல், கைதி திரைக்கதையும் வித்தியாசமாக இருக்கும். 61 நாட்கள் இரவு நேரங்களில் மட்டுமே படப்பிடிப்பு நடத்தப்பட்ட முதல் படம் இது. ஜூலை மாதம் ரிலீசாகிறது' என்கிறார். இந்த படத்துக்கு பிறகு விஜய்யின் 64வது படத்தை லோகேஷ் கனகராஜ் இயக்க பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

## நிலைபெறப் போராடும் நிகிலா!

## ஓட்டத்தில் தப்பிக்கட்டும்!

'வெற்றிவேல்' படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானவர் நிகிலா விமல். கிடாரி, பஞ்சுமிட்டாய் உள்பட சில படங்களில் நடித்திருக்கும் நிகிலா தற்போது கார்த்தியுடன் நடிக்கிறார். இதன் படப்பிடிப்புகள் தற்போது ஊட்டியில் நடந்து வருகிறது. இந்த நிலையில் கார்த்தி தனது டுவிட்டரில் நிகிலாவுடன் ஊட்டி படப்பிடிப்பில் எடுத்த ஒரு படத்தை வெளியிட்டுள்ளார். திறமிமிக்க நடிகை என்ற பெயரை எடுத்திருக்கும் நிகிலா விரைவில் முன்னணிக்கு வருவார் என்ற எதிர்பார்ப்புடன் தயாரிப்பாளர்கள் அவரை அணுகி வருகிறார்கள் !

## நிலைக்கட்டும் வெற்றி!

நேர்காணல்



# தாயுமானவர்



## முதன்முறையாக திரு.எம்.ஜி.சி.இராமமூர்த்தி அவர்கள் மனம் திறக்கும் நினைவலைகள்...

3

**கொற்றவன்**

“மகாத்மா காந்தி என்றால் சித்தப்பாவுக்கு மிகவும் பிடிக்கும்! அவர் மீது மிகுந்த பக்தி கொண்டிருந்தார். காந்தி சுடப்பட்ட நேரம், தியாகராஜ பாகவதர், வி.என்.ஜானகி நடித்த ‘ராஜமுக்தி’ படப்பிடிப்புக்காகப் பூனா சென்றிருந்தார் சித்தப்பா” எனும் திரு. ராமமூர்த்தி அவர்கள், அந்தச் சமயத்தில் மக்கள் திலகத்தின் நிலை எவ்வாறு இருந்தது என்பதை விளக்குகிறார்.




“அப்போதெல்லாம் கதராடை அணிந்த காங்கிரஸ்காரராக இருந்தார். அவரோடு அவரது நாடக நண்பர்களும் தீவிர காங்கிரஸ் பக்தர்களாக இருந்தார்கள். காந்தி சுடப்பட்டார் என்பது கேள்விப்பட்டு மிகுந்த மன உளைச்சலும் மன வேதனையும் அடைந்தார் சித்தப்பா. அவரால் இயல்பு நிலையில் இருக்க முடியவில்லை என்று எனக்குக் கடிதம் எழுதினார்.

சென்னையில் இருக்கும் நிலவரம் குறித்து கடிதம் எழுதச் சொன்னார். அவர் எழுதிய கடிதத்தில், காந்தி மீது அவர் கொண்டிருந்த அளவுகடந்த பக்தியும் அன்பும் தெளிவாக தெரிந்தது சித்தப்பாவுக்கு காந்தி மீது இவ்வளவு

அன்பு இருக்கிறதா என்பதை அந்தச் சமயத்தில்தான் அறிந்து கொண்டேன்.

மகாத்மா காந்தி அவர்களின் மீதும் அவர் காட்டிய வழிமுறைகளில் மீதும் சித்தப்பாவுக்கு அளவுகடந்த பற்றுதலும் பிடிப்பும் இருந்தது. நீண்ட நாட்கள் மகாத்மா காந்தியைப் பற்றிய சித்தப்பா பேசிக்கொண்டே இருந்தார். அவரது இழப்பை சித்தப்பாவால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை என்பதைப் பல சந்தர்ப்பங்களில் அவரது பேச்சின் வாயிலாக அறிந்திருக்கிறேன்!"

திரு.ராமமூர்த்தி அவர்கள் சொல்வது போல மகாத்மா காந்திமீது மக்கள் திலகத்திற்கு இருந்த பற்றும் பக்தியும் அவரது பல படங்களில் பின்னாளில் பிரதிபலித்ததை நாம் காண முடிகிறது. அவரது படங்களிலும், பாடல் காட்சிகளிலும் காந்தியையும் அவரது கொள்கைகளையும் அழுத்தமாகப் பதிய வைத்திருக்கிறார் மக்கள் திலகம்!

உதாரணத்துக்குச் சொல்ல வேண்டும் என்றால், 'பணம் படைத்தவன்' 'சந்திரோதயம்' 'எங்கள் வீட்டுப் பிள்ளை' 'ஆனந்த ஜோதி' 'பல்லாண்டு வாழ்க' 'ரிக்ஷாக்காரன்' 'நம் நாடு' 'நவரத்தினம்' எனப் படங்களின் பட்டியல் நீள்கிறது!

மீண்டும் தன் 'தாயுமான'வரைப் பற்றித் தன் மழலைக் கால நினைவுகளைத் தொடர்ந்தார் திரு.ராமமூர்த்தி அவர்கள்.




"ஒருமுறை நாங்கள் மெரினா கடற்கரைக்குக் குடும்பத்தோடு சென்றிருந்தோம். நான் கரையோரம் நின்று கடல் அலைகளில் கால் நினைத்தபடி இருந்தேன். அப்போது என் கால்களுக்கு அடியில் மணல் இழுக்கத் தொடங்கியது. அலை இழுத்தசத்தத்தில், தடாலென விழுந்து அலைகளில் உருள ஆரம்பித்தேன்.

அம்முக்குட்டி அம்மா (சதானந்தவதி) அதைப் பார்த்துக் கத்தினார்கள். அவ்வளவுதான்! அடுத்தகணமே, சடாரென தன் கட் ஷூக்களை கழற்றி எறிந்து விட்டு விறுவிறுவென தண்ணீருக்குள் ஓடிவந்து, அலைகளில் சிக்கிய என்னைக் காப்பாற்றித் தன் தோளின் மீது போட்டுக்கொண்டு கரைக்குத் திரும்பினார் சித்தப்பா. எல்லோரும் அதிர்ச்சியாகி நின்றிருந்த சமயத்தில் அவர் மட்டும்தான் ஓடிவந்து காப்பாற்றினார்.


நல்லவேளையாக எனக்கு ஆபத்து எதுவும் நேரவில்லை அன்று சித்தப்பா இல்லை என்றால் நான் உயிர் மீண்டிருப்பது சிரமம்! என்னை வளர்த்ததோடு அல்லாமல் என் உயிரைக் காப்பாற்றியும் வைத்தவர் சித்தப்பா!" அந்த நாட்களைப் பசுமையாகக் கூறி நெகிழும் திரு. ராமமூர்த்தி அவர்கள் மேலும் தொடர்கிறார்.

"சென்னை மவுண்ட் ரோடில், சில திரையரங்குகளில் அப்போதெல்லாம் ஆங்கிலப் படங்கள் தான் அதிகம் வெளியாகும்! அந்தப் படங்களுக்கு என்னையும் அழைத்துச் செல்வார் சித்தப்பா. ஹாலிவுட் நடிகர் டைரான் பவர் நடித்த பல படங்களை நாங்கள் பார்த்திருக்கிறோம்.

ஒருசமயம், ஓடியன் தியேட்டரில் (பின்னாளில் அது மெலோடி என்று பெயர் மாறியது) 'தி பிளாக் ஸ்வான்' என்ற ஆங்கில படத்தைப் பார்த்தோம். அந்தப் படத்தில் இருந்த ஒரு சண்டைக்காட்சியை குறித்து வைத்துக் கொண்டார் சித்தப்பா.

பின்னாளில் 'சக்கரவர்த்தி திருமகள்' என்ற படத்தில் குண்டுமணியை வைத்து அந்த சண்டைக் காட்சியைப் படமாக்கினார் சித்தப்பா. கதைப்படி இளவரசியைத் தேடிக் காட்டுக்குள்

செல்லும் கதாநாயகன் செவ்விந்தியர்களிடம் சிக்கிக் கொள்வார். அந்த சண்டைக் காட்சி மிகவும் வித்தியாசமாக இருந்ததைப் பிரபல பத்திரிகைகள் பாராட்டி எழுதி இருந்தன.



'மர்ம யோகி' படத்துக்குப் பிறகு வந்த சில படங்களில், 'மலைக்கள்ளன்' படம் மாபெரும் வெற்றிப்படமாக அமைந்தது. இது 'பட்சி ராஜா ஸ்டுடியோ' சார்பில் ஸ்ரீராமுலு நாயுடு நாயுடு தயாரித்த படம்! எதிர்பார்த்ததை விடவும் மிகப்பெரும் வெற்றியைப் பெற்ற அப்படத்தில் சித்தப்பா, மூன்று வேடங்களில் நடித்திருப்பார். அதில் ஒன்று, முதியவர் வேடம்! அந்த வேடத்தில் வந்து நடிகர் சகாதேவனோடு அவர் செய்யும் சண்டைக்காட்சிகள் மிகப் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி இருந்தது. இந்த மூன்று வேடங்களில் நடித்திருப்பவர் ஒருவரேதானா என்று ஐயப்படும் அளவுக்கு இருக்கிறது என்று பத்திரிகைகள் புகழ்ந்தன.

'மலைக்கள்ளன்' நாமக்கல் கவிஞரின் கதை. வசனம் கலைஞர். ஒரு காட்சியில் கதாநாயகி பானுமதி அம்மையார், "நீங்கள் என்ன பேசுகிறீர்கள்?" எனக் கேட்பார்.

அதற்கு கதாநாயகன் "தமிழ்!" எனப் பதில் சொல்வார். தியேட்டரில் கைத்தட்டல்களும், விசில் சத்தங்களும் காதைப் பிளக்கும்! அந்த அளவுக்கு சித்தப்பாவும் கலைஞரும் இணைந்த படங்கள் மக்கள் மத்தியிலே மிகுந்த வரவேற்பைப் பெற்றிருந்தது.

'மலைக்கள்ளன்' படத்தின் மாபெரும் வெற்றி, பட்சிராஜா ஸ்டுடியோவுக்கு மிகப் பெரும் புகழைத் தந்ததோடு மட்டுமல்லாமல், இந்தியிலும் மலையாளத்திலும், தெலுங்கிலும் தயாரிக்கும் அளவுக்கு பட்சிராஜா ஸ்டுடியோ பெரும் வளர்ச்சியைக் கண்டது!

மலையாளத்தில் பிரேம் நசீர், தெலுங்கில் ராமாராவ், இந்தியில் திலீப் குமார் என முன்னணி கதாநாயகர்கள் அந்தப் படங்களில் நடித்தார்கள். அப்போது அந்தந்த நடிகர்களுக்காக சில காட்சிகளை மாற்றம் செய்துகொள்ளலாம் என்று ஆலோசனை சொல்லப்பட்டபோது, ஸ்ரீராமுலு நாயுடு, "தமிழில் என்ன செய்தோமோ அதைத்தான் பிறமொழிகளிலும் செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்!

அப்படம் தந்த வெற்றி அப்படி ஒரு நிலையை ஏற்படுத்தி இருந்தது மட்டுமல்ல, சித்தப்பாவின் நடிப்பும் பெருமளவில் பேசப்பட்டதும் தயாரிப்பாளர் ஸ்ரீராமுலு அப்படியான முடிவை எடுத்ததற்கு ஒரு முக்கிய காரணம்!" என்கிறார் திரு.ராமமூர்த்தி அவர்கள்.

'மலைக்கள்ளன்' படம், மக்கள் திலகத்துக்கு மகத்தான பெயரையும் புகழையும் மட்டுமல்ல, தமிழ்த் திரையுலகுக்கும் பெரும் வரலாற்றுப் புகழையும் ஏற்படுத்தியது.

'தேசிய விருது பெற்ற முதல் தமிழ்ப் படம்' என்ற மகத்தான பெருமையை 'மலைக்கள்ளன்' படம் பெற்றுத் தந்தது.

திரையிட்ட இடமெல்லாம் மக்களின் உள்ளங்களை

# படைப்பாளிகளுக்கு...

* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!



* படைப்புகளை மின்னஞ்சலில் அனுப்புவது வரவேற்கப்படுகிறது.

*இதழில் வெளியாகிற கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள் யாவும் படைப்பாளிகளின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!



தொடர்புகளுக்கு

editor@ithamil.com






வென்ற மலைக்கள்ளன், இந்திய அரசின் வெள்ளிப் பதக்கத்தை வென்றான்!

இந்தித் திரையுலகையும் தமிழ்த் திரையுலகம் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தான் மலைக்கள்ளன்!

'மலைக்கள்ளன்' படம் மக்கள்திலகத்துக்கு மிகவும் முக்கியமான படம் என்பதற்கு மேலும் இரண்டு சிறப்பம்சங்கள் உண்டு!

இப்படத்தில்தான் அவருக்கு முதன்முதலாகத் தத்துவப்பாடல் ஒன்று அமைக்கப்பட்டது. அப்பாடலைப் பாடியவர், முதன்முறையாக புரட்சிநடிகருக்குப் பாடிய பாடல் என்ற வகையிலும் அப்பாடல் அமைந்தது.

மக்கள்திலகத்தின் குரலாகவே பட்டிதொட்டியெங்கும் இன்றும் ஒலிக்கும் 'ஏழிசை வேந்தர்' திரு.டி.எம்.எஸ் என்ற முக்கியமான ஆளுமை இணைந்த பெருமையும் 'மலைக்கள்ளன்' படத்துக்கு உண்டு!

திரு.டி.எம். எஸ். அவர்கள் முதன்முறையாக மக்கள்திலகத்துக்காக பாடிய அந்தப் பாடல்தான்...

"எத்தனைக் காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே" —பாடல்!

இப்படியாக 'மலைக்கள்ளன்' படத்துக்குப் பெருமைகள் பல உண்டு!

வளர்ந்து வரும் கதாநாயகனாக உயரும் இந்தக் காலகட்டத்தில் தான் மக்கள் திலகம், தான் மட்டும் உயர்ந்தால் போதும் என்ற சுயநலமில்லாமல், தன்னைச் சார்ந்தவர்களுக்கும் தம்மால் இயன்றதைச் செய்தே ஆகவேண்டும் என்ற பொதுநலக் கொள்கைப் பிடிப்புடன் ஒரு அமைப்பை ஏற்படுத்தினார்.

அதுதான் 'எம்.ஜி.ஆர் நாடக மன்றம்!'

அந்த நாடகமன்ற துவங்கப்பட்டதையும், செயல்பட்டதையும் அருகிருந்து பார்த்து வளர்ந்தவரான திரு.ராமமூர்த்தி அவர்கள் அதுபற்றிய அற்புதமான அனுபவங்களைப் பகிரத் தொடங்குகிறார்.

(பயணிப்போம்..)

# புத்தக விமர்சனம்

## இரண்டாம் சுற்று

**ஆசிரியர் : ஆர். பாலகிருஷ்ணன்**

**விலை– ரூ.240**




**வெளியீடு:**

**எஸ்.ஆர்.வி. தமிழ்ப் பதிப்பகம்,**

**சமயபுரம்,**

**திருச்சி 621112.**

*தமிழ் இலக்கிய மாணவன் ஒருவன், இந்திய ஆட்சிப் பணித் தேர்வில் தமிழில் தேர்வெழுதி முதல் முயற்சியில் வென்று, இந்திய ஆட்சிப் பணியாளராக வலம்வந்து, திராவிடவியல் மற்றும் இந்தியவியல் ஆய்வாளர் எனப் பன்முகம்கொண்டு விளங்கும் ஆர். பாலகிருஷ்ணன் உருவாக்கியது இந்நூல்.*

*வாழ்க்கை என்பது ஒருமுறைதான் என்றாலும், வாய்ப்புகள் நல்லபடியாக வரும்போது அதைத் தவறவிட்டு தவிப்பவர்கள் ஏராளம், அதற்குக் காரணமாக அமைவது அனுபவமின்மை! வாழ்வில் பக்குவப்பட்டபின்பு, முன்பு வந்ததுபோல் ஒரு வாய்ப்பு வராதா என்று ஏங்குவதும் மனிதனின் இயல்பே, அவ்வாறான நிலையில் மீண்டும் அந்த வாய்ப்பு வரும்பொழுது தான் மனிதனின் வாழ்கையில் இரண்டாம் சுற்று ஆரம்பிக்கிறது. இத்தகைய இரண்டாம் சுற்றுக்களே அந்த மனிதன் இன்னாரென்று உலகுக்கு அடையாளம் காட்டுகிறது.*

*மனித வாழ்க்கையில் இரண்டாம் சுற்று என்று உண்மையில் எதுவும் உள்ளதா? என்ற கேள்வியை மையமாக வைத்து விடாமுயற்சி, கடின உழைப்பு, நேரம் தவறாமை என ஆளுமை வளர்க்கும் பண்புகளைச் சொல்லியும், எதார்த்த உலகின் நடைமுறை வாழ்க்கையின் தத்துவார்த்த உண்மைகளையும், 'இது எனது இரண்டாம் சுற்று' என்று நெகிழ்ந்து உணர்ந்த தருணங்களையும், கட்டுரைகளாகவும், கவிதைகளாகவும் தொகுத்து வாழ்க்கைப் பயணத்தில் அன்பு, அறம் மற்றும் மனிதநேயத்தின் முக்கியத்தைப் போதிக்கிறது இந்நூல்.*




# காதல் ரேகை

குரு அரவிந்தன்

எனக்கு என்ன ஆச்சு, எதுவும் புரியவில்லை. ஒரு பெண்ணைக் கண்டவுடன் ஏற்படும் ஈர்ப்பு இவ்வளவு சக்தி வாய்ந்ததாக இருக்குமா என்று நினைத்துப் பார்த்தேன். திரும்பத் திரும்ப அவளையே பார்க்கத் தூண்டிய மனசு அவளைச் சுற்றிச் சுற்றியே வந்தது.

மனசும் ஒரு தேனீ போலத்தான் இருக்குமோ என்ற நினைத்தேன். மொட்டாக இருந்தால் உதாசீனம் செய்வதும், மலரப் போகிறது என்று தெரிந்தல் சுற்றிச் சுற்றி வருவதும், மலர்ந்து விட்டால் தேனை அருந்தி விட்டு விலகிச் செல்வதும் தேனிக்குக் கைவந்த கலையாக இருக்கலாம்.

இதுவரை எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கின்றேன் ஆனால் இப்படியொரு ஈர்ப்பு ஒருபோதும் ஏற்பட்டதில்லை.

சினிமாப் படங்களில் சில நடிகைகளைப் பார்க்கும் போதெல்லாம் மனசு கொஞ்சம் சஞ் சலப்படுவது உண்மைதான். நிழற் காட்சிபோல மறுகணம் அது மாயமாய் மறைந்துவிடும். ஆனால் இது என்ன மாயம், இன்று எனக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை.

கனவுலகில் இருந்து நான் மீண்ட போது அவள் மறைந்து போயிருந்தாள். அவளை இன்னுமொரு முறையாவது பார்க்க வேண்டும் என்று மனசு ஏங்கியது. இந்தக் கூட்டத்தில் அவளை எங்கே தேடுவது? தென்றலாய் வந்தவள் சட்டென்று என் மனதில் சூறாவளியை ஏன் ஏற்படுத்தினாள்? என் தவிப்பு என்னவென்று அவளுக்குப் புரியப் போவதில்லை, ஆனாலும் மனசு எதற்கோ தவித்தது.

வரவேற்பு மேசையில் உட்கார்ந்திருந்த பெண்ணோடு சிரித்துச் சிரித்துப் பேசிக்கொண்டிருந்த அவள்தான்; திடீரென மறைந்திருந்தாள். சரி, இத்தோடு விட்டு விடுவோம் என்று நினைத்துக் கொண்டு நகர்ந்தேன். விரிவுரை நடக்கவிருக்கும் அறை எங்கே இருக்கிறது என்று முதலில் தேட வேண்டும். விரிவுரைக்குச் செல்லுமுன் கோப்பி ஒன்று அருந்தினால் நல்லாயிருக்கும் போல இருந்தது. பூட் கோட்டில் இருந்த ரிம்ஹேட்டனுக்குச் சென்று வரிசையில் நின்றேன்.

வரிசை மெல்ல நகர்ந்தது. வரிசையில் நகர்ந்து கொண்டிருந்தாலும் மனசெல்லாம் அவள் நினைவாகவே இருந்தது. தற்செயலாகத் திரும்பிப் பார்த்தேன். மறுவரிசையில் அவளும் நகர்ந்து கொண்டிருப்பது போன்ற ஒரு உணர்வு ஏற்பட்டது. இது வெறும் மாயையா அல்லது நிஜமா ஒரு கணம் சுயநினைவு பெற்றுத் திரும்பிப் பார்த்தேன். நிஜம்தான் என்பதை உணர்ந்தேன்.

திரும்பவும் அவளைக் கண்டதில் மனம் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தது. அவள் என்னைப் பார்த்ததாகத் தெரியவி;ல்லை. ஆனாலும் வைத்த கண் வாங்காமல் அவளைப் பார்த்தேன். இப்படி ஒருத்தன் அவளை விழுங்கி விடுவது போலப் பார்க்கிறேனே என்பதைக்கூடப் பொருட்படுத்தாமல் அவள் கோப்பியை வாங்கிக் கொண்டு. நகர்ந்தாள். பூட்கோட்டில் இருந்த ஒரு இருக்கையில் அமர்ந்து கோப்பியை மெல்ல மெல்ல ருசித்து அருந்தினாள். நானும் அருகே இருந்த இருக்கையில் அமர்ந்து கோப்பியை அருந்தினாலும் என்னுடைய கவனம் எல்லாம் அவள்மேல்தான் இருந்தது. ஒவ்வொரு தடவையும் அவளது உதடுகள் அந்தக் கோப்பையில் பதிந்த போது எனக்குள் ஏதேதோ உணர்வுகள் எழுந்து என்னைப் பரவசப்படுத்தியது.




மனசு ஒரு நிலையில் இல்லை என்பதை உணர்ந்தேன். முதல் நாள் என்பதால் விரிவுரை தொடங்குமுன் அங்கே சென்று தகுந்த இடத்தில் அமர விரும்பினேன். ஏற்கனவே சிலர் அங்கே வந்து அமர்ந்திருந்தார்கள். நான் எனக்கு வசதியான இடத்தில் அமர்ந்து கொண்டேன். தென்றல் தழுவிச் சென்றது போல, இனிய சுகந்தம் காற்றில் மிதந்து வந்து என்னைத் தழுவியது. நிமிர்ந்து பார்த்தேன். சற்றும் எதிர் பாராத ஆச்சரியம் எனக்குக் காத்திருந்தது. யாரைத் தேடினேனோ அவளேதான், எனக்கு அருகே இருந்த இருக்கையில் வந்து அமர்ந்தாள்.

‘ஹலோ ஐ ஆம் ரீனா ஹிரோக்கி’ என்றாள். ஒரு கணம் எனக்கு கைகால் இயங்கவில்லை. ஆனாலும் சமாளித்துக் கொண்டு ‘ரஜீவன்.. கிளாட் ரு மீட்யூ’ என்று கை கொடுத்தேன். அவள் சகஜமாகக் கை கொடுத்துவிட்டு. நடக்க இருக்கும் விரிவுரை பற்றிப் பேசினாள். தன்னை யார் என்று அறிமுகப் படுத்தினாள். என்னை நானும் அறிமுகப் படுத்திக் கொண்டேன்.

ஏதாவது அவளுடன் பேசவேண்டும் என்பதற்காக, ‘ரீனா என்றால் என்ன அர்த்தம்?’ என்றேன். ‘ஜாஸ்மின்’ என்றாள். என் சுவாசத்தில் மல்லிகை மணத்தது. அவள் மல்லிகைதான்! ‘எனக்கும் பிடிக்கும்’; என்றேன். புன்னகை உதிர்த்தாள்.

அதன் பின் விரிவுரை நடக்கும் நாட்களில் அவளை அடிக்கடி சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது. அவளைப் பற்றிய தொடர் நினைப்பு அவள் மீது ஏற்பட்ட ஒரு வகை ஈர்ப்பு என்றுதான் நினைத்தேன். இந்த வயதில் ஏற்படும் இயற்கையான கவர்ச்சிதான் என்னை அவள் பக்கம் திருப்பியிருக்கலாம். அடிக்கடி அவளைச் சந்திப்பதும் எங்களுக்குள்ளான கருத்துக்கள் ஒன்று பட்டிருந்ததும் காரணமாக இருக்கலாம்.

பெற்றோர் பார்த்துச் செய்யும் திருமணத்தை ஏற்பதாக இதுவரை நம்பிக் கொண்டு கட்டுப்பாட்டுடன் இருந்தாலும் என் மனம் அவளைச் சுற்றியே வருவதை உணர்ந்தேன். கைரேகை பார்த்து அதைத்தான் சொன்னார்கள். எப்படி இது சாத்தியமாயிற்று, காதல் ரேகை கையில்



ஏற்கனவே எழுதி வைத்திருக்கிறான் என்பார்கள். அது போல எனக்கு இவள்தான் என்று ஒரு வேளை எழுதி வைத்திருக்கலாமோ?

அன்று வலன்ரைன் தினம். செரிடன் கல்லூரி வளாகம் கலகலப்பாக இருந்தது. வழமைபோல நட்புக்கு அடையாளமாக எல்லோரும் நண்பர்களுக்கு ஏதாவது கொடுத்தார்கள். ரீனா தனது தோழிகளோடு கலகலப்பாகப் பேசிக் கொண்டு நின்றாள்.

'ஓஹாயோ ரீனா' என்றேன். ஆச்சரியமாய் பார்த்தாள். அவளது அந்த ஆச்சரியம் கலையுமுன்பே நானும் ஒற்றை ரோஜா ஒன்றை அவளிடம் நீட்டினேன். நான் மட்டுமல்ல அவளுடன் பழகிய வேறு சிலரும் ஏதாவது கொடுத்தார்கள். எந்த மறுப்பும் இன்றி எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டாள். விரிவுரை முடிந்து வீடு செல்ல முற்பட்டபோது அவள் ஓடிவந்து சிறிய அன்பளிப்பு பெட்டி ஒன்றை தந்து 'ஹப்பி வலன்ரைன்' என்றாள். நன்றி சொல்லி அதைப் பெற்றுக் கொண்டேன்.

எனது நட்பை மதித்து அதைக்கொடுத்திருக்கிறாளே என்று எனக்குள் ஒரு கிளுகிளுப்பு. 'வீட்டுக்குப் போனதும் பிரிச்சுப் பாருங்க' என்று சொல்லி அவள் வந்த வேகத்திலேயே மறைந்துவிட்டாள். நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. என்னவாய் இருக்கும் என்ற ஆவலோடு வீட்டிற்குச் சென்றேன். அந்த சிறிய பெட்டியைப் பிரித்துப் பார்த்தேன்.

ஆண்கள் கழுத்திலே கட்டும் அழகான ஸ்காவ் ஒன்று மடித்து வைக்கப்பட்டிருந்தது. அதற்குள் ஒரு அழகான வலன்டைன் கார்ட்டில் ஜப்பானிய கவிதை ஒன்று ஆங்கிலத்தில் பேனாவால்


இல்லை என்பது எனக்குப் புரியலாயிற்று. கருத்துப்பரிமாற, ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள பொதுவான ஒரு மொழி இருந்தது ஒரு வேளை காரணமாக இருக்கலாம்.

இவளைப் பற்றி அம்மாவிடம் சொன்னால் அம்மா கேட்கும் முதல்கேள்வி என்னவாயிருக்கும் என்று யோசித்துப் பார்த்தேன். அவள் என்னுடைய இனத்தவளா, என்னுடைய மதத்தவளா, அல்லது எனக்கு உறவினரா, என்னுடைய நாட்டவளா கேள்விகள் இப்படித்தான் இருக்கும். இதற்கு என்ன பதில் சொல்ல முடியம், சாதகமாக எதுவும் இல்லையே!

இது காதல் என்றால், அவளும் என்னை விரும்பினால் முடிவு எடுப்பது நாங்களாகத்தான் இருக்க வேண்டும். யாருக்கு யாரென்று ஆண்டவன்

எழுதியிருப்பாள் என்பதை அறிவதில் ஆவல் பிறந்தது. என் பதட்டத்தில் எதுவுமே புரியவில்லை. 'முட்டாள்! நட்போடு பழகினால் அதைக் காதல் என்று எடுத்துக் கொள்வாயா? கடைசியில் நீயும் ஒரு சராசரி இளைஞன் என்பதைக் காட்டி விட்டாயே' என்று யப்பானிய மொழியில் திட்டியிருப்பாளோ?

எப்படியும் கவிதையில் என்ன எழுதியிருக்கின்றது என்பதை அறியப் பொறுமையாகத் தேடினேன். நான் ஆவலோடு தேடிய கவிதை அங்கே இருந்தது. ஒவ்வொரு வரியாக வாசித்துப் பார்த்தேன்.



என் காதலனே ஆடைபுறம் மாறிட

கனவு வரும், உண்மையாக உன்னையே

நேரில் கண்டது போல!

சேராவிடினும் நான் துன்புற மாட்டேன்

இந்த அணையை நான் என்று எண்ணிடுவாய்

அணைத்து உறங்கிடுவாய்!

எனக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. அவள் கவிதையில்சொன்னபடியே அவள் கொடுத்த ஸ்காவை அணைத்துக் கொண்டு தூங்கியது சுகமான அனுபவமாக இருந்தது. மறுநாள் விரிவுரையின்போது அவளைச் சந்தித்தேன்.

'ஹாய் ரீனா ஐஸிரெறு' என்றேன்.

முகம் சிவக்க கைகள் இரண்டையும் நாடியில் வைத்தபடி விழி உயர்த்தி ஆச்சரியமாய் பார்த்தாள்.

எப்படி இது சாத்தியமாயிற்று என்று எனக்குப் புரியவில்லை. ஜப்பானிய மொழி உங்களுக்குப் புரியாதவரையில் நான் தப்பித்தேன்.

எழுதப்பட்டிருந்தது. வாசித்துப் பார்த்தாலும் அதன் பொருள் விளங்கவில்லை. என்ன செய்வது என்று யோசித்தபோது சட்டென்று தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட அந்த கவிதை நூல் ஞாபகம் வந்தது. அவசரமாக எடுத்து மேலோட்டமாகத் தட்டிப் பார்த்தேன்.

எனக்கு அன்பளிப்பாய் கொடுத்த யப்பானிய காதற் பாடல்கள் அடங்கிய மொழி மாற்றம் செய்யப்பட்ட நூல்தான் அது, அதை எடுத்து பக்கங்களைப் புரட்டினேன். ரீனா என்ன




## தோப்பில் எனும் அபூர்வ ராகம்

தோப்பில் முஹம்மது மீரான் என்னும் அபூர்வ ராகம் இனி இங்கே ஒலிக்காது; ஆனால், என்றும் எங்கேயும் கேட்கும். அவர் ஆண்டவனிடம் சேர்ந்தார் என்ற செய்தி கேட்டதும் ஒரு வலி.

மூன்று ஆண்டுகளுக்கு முன் என்று நினைக்கிறேன். நண்பர் அன்வர், என்னிடம் குட்டித் தீவின் வரைபடம் புத்தகத்தைக் கொடுத்தார். அந்தப் புத்தகத்தை நான் சென்ற ஆண்டின் இறுதி மாதங்களில்தான் கையில் எடுத்தேன். இந்தப் புத்தகத்தை மொழிபெயர்க்க வேண்டும் என்று முடிவு செய்தேன். பிறகு திருநெல்வேலிக்கு தொலைபேசி செய்தேன். அவர் 'எந்தப் புத்தகம் பண்ணப் போறீங்க' என்றார்.

ஆனால், 'இதில் 9 கதைகள்தான் இருக்கு, எனக்கு இன்னும் சில கதைகள் தேவைப்படும்' என்றேன்.

'அனுப்பறேன் மா' என்றார் தோப்பில் முஹம்மது மீரான். பிறகு, மரணத்தின் மீது உருளும் சக்கரம், ஒரு மாமரமும் கொஞ்சம் பறவைகளும் இரண்டையும் அனுப்பி வைத்தார். 'இந்தக் கதைகளிலிருந்தும் செய்யுங்க' என்றார் அவர்.

'எது நன்றாக வருதோ அதை பண்றேன்' என்றேன். 'எல்லாமே நல்லாதானே இருக்கு' என்றார் அவர். 'அய்யோ, நீங்க எழுதினது எல்லாம் நல்லாதான் இருக்கு. எனக்கு எது மொழிபெயர்க்க நல்லா வருமோ அதைச் சொன்னேன்' என்றேன் நான். சம்மதம் கிடைத்துவிட்டது.

'எல்லாமே நல்லா தானே இருக்கு' ——பேசியது ஒரு குழந்தையா அல்லது ஒரு மாபெரும் எழுத்தாளரின் துல்லியமான சுய விமர்சனமா? இரண்டும்தான். இரண்டு கதைகளையும் மொழிபெயர்த்து முடித்ததும் அவருக்கு தபாலில் அனுப்பினேன். பிறகு, அவர் குடும்பத்தினரிடம் நேரே வந்து பார்க்கிறேன் என்றேன். அந்த வாய்ப்பு கிட்டாமல் போய் விட்டது.

அவர் எழுத்து எனக்குத் தந்த அனுபவம் மட்டும் போதும் என்று ஆண்டவன் சொல்லிவிட்டார். மொழிபெயர்க்கும்போது நாம் அந்த எழுத்தாளரை ஒரு அரிய நெருக்கத்துடன் பார்க்கிறோம்; அவர் உணர்வு, பார்வை, நெஞ்சின் ஒலி எல்லாவற்றையும் நாமும் அணிந்து பார்க்கவேண்டும். அப்படி நான் பார்த்து தெரிந்த தோப்பில் அவர்களின் உலகம் எத்தனை உயர்வான, அன்பான அனைத்தையும் பார்த்து அப்படியும் அணைத்த உலகம்!

நாம் அனைவரும் எப்படியும் ஒரு வட்டத்துக்குள்தான் இருக்கிறோம். அந்த வட்டம்தான் உலகம் என்று நினைப்பவர்கள் சிலருக்கு, தான் இருக்கும் வட்டத்துக்கு வெளியே பல வட்டங்கள் இருப்பது தெரியாது. வட்டம் என்று நினைப்பது உண்மையில் புகை வட்டம்தான்; எல்லோரும் ஒரே மாபெரும் வட்டத்துக்குள்தான் இருக்கிறோம் என்று திரும்பத் திரும்பச் சொல்கிறார் தோப்பில் முஹம்மது மீரான். அந்தச் செய்தி சம்மட்டியால் தலையில் அடித்துச் சொல்லும் செய்தியல்ல, மென்மையாக வரும் காதினுள், பிறகு உள்ளே ஸ்திரமாக அமர்ந்துவிடும்.

அவருக்கு பத்தி பத்தியாக எழுதவேண்டாம், நாலு வரி போதும். அப்பா துணியை அடக்கி கும்பிட்டுக் கொண்டு ஒரு மைல் தொலைவில் வண்டியை நிறுத்தி விட்டு எசமானே என்று சொல்கிறார். மகன் சைக்கிளை படாரென்று நேரே நிப்பாட்டி கும்பிடாமல் ஏங்கே என்கிறார். பேரன் குடுகுடு சத்தத்துடன் ஹாரன் அடித்து பல்ஸரில் வந்து செட்டியாரே என்று கூப்பிட்டு செல்லிடப்பேசி எண்ணை காகிதத்தில் நீட்டுகிறார்.

படிக்கும் நமக்கு சிரிப்பு வரும், ஆனால் இருந்த நிலை இறந்துவிட்டது என்று புரியாதவருக்கும், புரிந்துகொள்ள விருப்பம் இல்லாதவருக்கும் அதிர்ச்சி. தோப்பில் எழுதுவது இவ்வளவுதான். ஆனால், எத்தனை ஆழம். பாசி படர்ந்த சமூக குளம் தெளிவடைகிறது.

ஒரு மாணவன் பொய் சொல்லி தன்னைக் கவிஞனாகக் காட்டிகொள்ள முயல்கிறான். சாயம் வெளுக்கிறது. ஆசிரியர் என்ன செய்திருப்பார்? பிளந்திருப்பார். தோப்பிலின் ஆசிரியர் செய்யவில்லை. மீராசா பிள்ளை, ஒரு பொய் சொல்லியாவது உன்னைக் கவிஞனாகக் காட்டிக்கொள்ள நினைத்தாயே. அதைப்



# பெருமை

நீதிபதி **பிரபா ஸ்ரீதேவன்**


பாராட்டுகிறேன். இந்த மனிதத்தன்மை தான் தோப்பில் முஹம்மது மீரானின் சிறப்பு.

நாம் ஒருவித தீர்மானத்துடன் இயற்கையை அழித்து வருகிறோம் இல்லையா, அதை தோப்பில் எழுதுவார். டேய், இங்கே மூதாட்டி மரமும் இல்லை, ஆம்பல் குளமும் இல்லை, நீ உன் ஊருக்கு இங்கிருந்து பஸ் ஏறிப் போய் விடு. நம் பரம்பரை பாட்டெல்லாம் புலம் சார்ந்தது. இப்போது நாம் எந்தப் பாட்டை பாடுவோம், ஆம்பல் இல்லை, வரப்பு இல்லை, தோப்பு இல்லை, குளம் இல்லை, ஒப்பாரி வைத்து அழுவதற்குக்கூட வழி இல்லை. பூமியின் நெஞ்சாம் பலகையைப் பிளந்து நொறுக்கும் ஜே.சி.பி..... வரப்பு என்ற நரம்புகள் மட்டப்படுத்தப்பட்டது, மரங்கள் என்ற எலும்புகள் நொறுக்கப்பட்டன.



பெண்ணுக்கு கடன் வாங்கி மெத்தை படுக்கை அனுப்புகிறார் தகப்பன். எந்த வண்டியில்? அவருக்கு சல்லிசாக ஒப்புக்கொள்பவர் மைதீன். மைதீன் யார்? சவப்பெட்டி வண்டிக்காரர். மெத்தையை உள்ளே விடுவாளா மாமியார்? எவ்வளவோ விஷயங்கள் ஒரு சிறு கதையில் சில வரிகளில்...தோப்பில் சொல்கிறார்: மைதீன் வாழவேண்டுமானால், ஊரில் ஒரு இறப்பு நடக்க வேண்டும் என்ற நிலை. அவன் செய்வது ஒரு சமூக சேவையாகத்தான் எனக்குப்படுகிறது. இந்த ஈரம் அவர் எழுத்து முழுவதிலும் வியாபித்திருக்கும்.

நலிந்து போகும் மனித உறவுகள் இதனால் உடைந்து போகும் ஒரு தலைமுறை மக்கள் இதையெல்லாம் அற்புதமாகச் சித்தரிப்பார். ஒரு அலமாரி, அபூர்வ மருந்து மரத்தில் செய்யப்பட்டது, ரகசிய உள்ளறை கொண்டது, வாப்பா மட்டும்தான் அதைத் திறப்பார். உளி இறங்காத மரம். அதில் ம.உ.மு என்று பொறிக்கப்பட்டது, பின்கிளைகள் அறிவதற்கு...அது கை மாறுகிறது. இந்த பெயரின் மீது ஒரு மாம்பலகை அடிக்கப்பட்டு அதில் அரசியல் கட்சியின் கொடி பொறிக்கப்பட்டு, மொத்தத்தில் அருவருப்பான ஒரு முகர்வு உணர்வு வந்தது




என்கிறார். ஒரு வாழ்க்கை முறையின் சிறப்பும் பின் சீரழிவும். ஒரு பத்துப் பக்கக் கதையில்.

ஒரு சிறுவனுக்கு பெரிய ஸ்கூல் போகணும். பெரிய கல்வி ஆசை இல்லை, பஸ்ஸில் போகலாம், சுல்தான் கண்ணு காக்கான் சாயாக்கடையில் புட்டு பயிறு சாப்பிடலாம் இவ்வளவுதான். ஆனால் பள்ளியில் பிறந்த தேதி கேட்கிறார்கள், யாருக்கும் தெரியவில்லை. அப்பா சொல்கிறார், இஞ்ச எவனுக்குத் தெரியும்..படிச்சது மதி...இளம் உள்ளத்தை அப்படி உண்மையாக தோப்பிலின் பேனா வரைகிறது. அதன் குரூரம் உள்பட டேய் உங்க உம்மா குழந்தை பெறலடா குழந்தைகளுக்கு நிஜமாகவே பிறை கண்டால்தான் சொல்ல வேண்டும் என்று கிடையாது, இன்று கண்டாச்சோ என்று சொன்னால் இன்றே கிடைக்கும் ஒட்டடப்பம் பாலாடை கோழி பெருநாள் படி எல்லாம். ஆகையால், நாங்களெல்லாம் பார்த்தோம் என்று உறுதியாகச் சொல்கிறார்கள். அதனால் காலண்டர் பாவா சுருட்டி போடப்பட்டார். பயக்கோ பெருநாள் கொண்டாடினர்.

ஒரு வயதானவரை மகளும் மகனும் ஒதுக்கி விடுகிறார்கள். அவர் சஃபர் போகிறார் ஒரு பூட்டப்பட்ட பையுடன் வாகா எல்லை வரை போகிறார். தீவிரவாதி என்று நினைக்கிறார்கள், பிடிக்கிறார்கள், பிடித்து அடிக்கிறார்கள், அடித்து செத்து போகிறார் வயதானவர். பைக்குள் இருந்தது என்ன? அவர் எங்கேயாவது இறந்தால் அடக்கம் செய்ய அனைத்துப் பொருள்களும் பஞ்சு உள்பட.

இன்னொரு கதையில் ஒரு பெண் ஒரு பஸ் கண்டக்டருடைய நம்பர் வேண்டும் என்று எல்லொரையும் கேட்கிறாள். ஆயிரம் சந்தேகங்கள். கடைசியில் உண்மை தெரிகிறது. ஏன் ஊரில் உள்ள குளங்களைப் போலவே நம் நெஞ்சங்களிலும் ஈரம் வற்றி விட்டது? சொல்லவேண்டிய செய்தியை உரக்கக் கத்த வேண்டாம். நாம் எப்படி, நான் நீ என்று பிரிந்து விட்டோம்? திறந்து பார்த்தால் நீ வேறு நான் வேறு அல்ல, நாம் தான் இருக்கோம். இதைத்தான் திரும்ப திரும்ப தோப்பில் முஹம்மது மீரான் இசைக்கிறார்.

பெண் மனதின் நுட்பமும் நுண்ணுணர்வும் புரிய அப்துல்லா இப்னு அபுபக்கர் கதை ஒன்று போதும். நூருன்னிஸா என்ற பெண்ணும் அவளுக்கே சொந்தமான மாலுமியும், அவர் கதைகளுக்கு தேவை என்றால் வரலாற்றை ஆழ்ந்து படிப்பாராம். இந்தக் கதையில் வரலாற்றைக் கரைத்துக் குடித்த அப்துல் ரகுமான் வருவார், அரபிகள் மேற்கு கரை வந்த கதை சொல்ல. அந்தக் கதைக் கேட்டு நூருன்னிஸா ஒரு மயக்கத்தில் ஆழ்கிறாள், நிஜத்திற்கும் நிழலுக்கும் இடையே இருக்கும் சுவர் அழிகிறது, உலகம் அவளைப் பார்த்து கெக்கலிக்கிறது. கடைசியில் பறக்கிறாள். நூருன்னிஸாவின் வேட்கை, காதல் அவளிடம் செய்யும் ரசவாதம் இதை தோப்பிலின் வார்த்தையில் நாம் படிக்கும்போது தொண்டை அடைக்கிறது, கண்கள் பனிக்கிறது.

இது போல பல கதைகள். என்ன செய்ய, நான் அவரை நேரே பார்த்துப் பேசவில்லை, எழுத்து மூலம்தான், அதனால் அதைப் பற்றி சொல்லித் தான் நான் மரியாதை செலுத்தமுடியும். பிரமிக்கத் தக்க சிருஷ்டிகர்த்தா. எனக்கு அந்த யானை பாறை, அரபிக்கடல், செந்நாரை வந்து அமரும் மரங்கள், இதுபோல அந்தப் புலம் மட்டுமல்ல, அங்கு வாழும் மக்கள் அவர்களின் வாழ்க்கை, நம்பிக்கை, பழக்கவழக்கம் எல்லாமே பரிச்சயம் போல இப்போது தோன்றுகிறது. ஆனால், அவர் சொல்வது அந்தப் புலமும் அந்த மக்களைப் பற்றி மட்டும் அல்ல, நம் எல்லோரையும் பற்றியும்தான் அவர் சொல்கிறார்.

அவர் நமக்கு நம்முள் இருக்கும், இருட்டை, அழுக்கை, அவலத்தை, கசப்பைக் காட்டுவார், ஆனால் அவர் எல்லாம் தொலைந்து விட்டது என்று எப்போதுமே சொல்வதில்லை.

எப்போதும் தோப்பிலின் சொற்களில், கற்பனையில் ஒரு சின்ன ஒளி தெரிந்து கொண்டே இருக்கும், அது நமக்கு நம்பிக்கை தரும், அந்த ஒளியில் ஒரு எல்லையில்லா அன்பு இருக்கும். அவர் எழுத்தை நாம் படிக்கும் வரை அந்த ஒளி அணையாது.

# SAKTHI CASH & CARRY

245-247 High Street North, East Ham,
London E12 6SJ
+44(0)20 8471 4713

இந்திய – இலங்கை மளிகைப்
பொருட்கள்
குறைந்தவிலையில் உயர்தரமாகவும்
சுவையாகவும் கிடைக்கும்
தாயகத்தின் அனைத்துவிதமான
பொருட்களும் கிடைக்கும்

வந்து பாருங்கள்!!!




வியந்து
போவீர்கள்!!!

# SWATHI CASH & CARRY

306-308 High Street North, East Ham,
London E12 6SA
+44(0)20 8586 7648




## இரண்டாம் பாகம் : காஞ்சி முற்றுகை

# மொட்டு வெடித்தது ! 32

தடாகத்தில் ஒரு அழகிய தாமரை மொட்டு தண்ணீருக்கு மேல் தலை தூக்கி நின்றது. அதன் குவிந்த இதழ்களுக்குள்ளே நறுமணம் ததும்பிக் கொண்டிருந்தது. இரவெல்லாம் அந்த நறுமணம் வெளியில் வருவதற்கு முயன்று நாலாபுறமும் மோதிப் பார்த்தும் வெளியில் வரமுடியாதபடியால் உள்ளுக்குள்ளேயே குமுறிக் கொண்டிருந்தது. தாமரை மொட்டுக்கும் அது மிக்க வேதனையளித்தது.

உதய நேரத்தில் நறுமணத்தின் குமுறலும் மோதலும் அதிகமாயின. திடீரென்று கீழ் வானத்தில் ஒரு ஜோதி தோன்றியது. உதயசூரியனின் அமுதனைய கிரணங்கள் தடாகக் கரையில் இருந்த விருக்ஷங்களின் இடையே நுழைந்து வந்து தாமரை மொட்டைத் தொட்டன. அந்த இனிய ஸ்பரிசத்தினால் மொட்டு சிலிர்த்தது. இதழ்கள் விரிந்தன. இரவெல்லாம் உள்ளே விம்மிக் கொண்டிருந்த நறுமணம் விடுதலையடைந்து தடாகத்தையும் தடாகக் கரையையும் வானவெளியையும் நிறைத்தது.




அவ்விதமே, சிவகாமியின் இதயமாகிய தாமரை மொட்டுக்குள்ளே இத்தனை நாளும் விம்மிக் குமுறிக் கொண்டிருந்த எண்ணங்களும் உணர்ச்சிகளும் மாமல்லரிடம் தனியாகப் பேசும் சந்தர்ப்பம் கிடைத்ததும், கரையை உடைத்துக் கொண்ட ஏரி வெள்ளத்தைப் போலப் பிரவாகமாய்ப் பெருகின. மாமல்லர் முதன் முதலில் அரண்ய வீட்டுக்கு வந்ததைக் குறிப்பிட்டபோதுதான் சிவகாமியின் வார்த்தைப் பிரவாகம் சிறிது தடைப்பட்டது.

அப்போது கிடைத்த சந்தர்ப்பத்தை மாமல்லர் பயன்படுத்திக் கொண்டு கூறினார்: "ஆம்! எனக்கு நன்றாய் நினைவிருக்கிறது. நானும் சக்கரவர்த்தியும் முதன் முதலில் உங்கள் அரண்ய வீட்டுக்கு வந்தபோது, உன் தந்தையின் தெய்வச் சிலைகளுக்கு மத்தியிலே நீ நடனமாடிக் கொண்டிருந்தாய். ஆயனர் ஸ்வரக்கோவை பாடிக் கொண்டும், தாளம் போட்டுக் கொண்டும் இருந்தார். எங்களைக் கண்டதும் ஆயனர் பாட்டையும் தாளத்தையும் நிறுத்தினார். நீயும் ஆட்டத்தை நிறுத்தினாய். உன்னுடைய விரிந்த கண்கள் இன்னும் மலருமாறு விழித்து எங்களை நோக்கினாய். என் தந்தை 'நிறுத்த வேண்டாம்; ஆட்டம் நடக்கட்டும்!' என்று வற்புறுத்தினார். அதன் மேல் ஆயனர் பாடத் தொடங்க, நீயும் ஆடத் தொடங்கினாய்! ஆட்டம் முடிந்ததும் நான் பலமாகக் கரகோஷம் செய்தேன். நீ மகிழ்ச்சி ததும்பிய கண்களினால் என்னை ஏறிட்டுப் பார்த்தாய். அந்தப் பார்வையில் நாணம் என்பது அணுவளவும் இருக்கவில்லை..."

"பிரபு! தாங்கள் கூறியதெல்லாம் உண்மைதான். அப்போது நான் பன்னிரண்டு பிராயத்துப் பெண். உலகம் அறியாதவளாயிருந்தேன். தாங்கள் வானத்தில் ஜோதி மயமாய்ப் பிரகாசிக்கும் சூரியன் என்பதையும், நான் கேவலம் பூமியில் புல் நுனியில் நிற்கும் அற்பப் பனித்துளி என்பதையும் அறியாதவளாயிருந்தேன். ஆகையினால், தங்களை ஏறிட்டுப் பார்க்கச் சிறிதும் தயக்கமடையவில்லை. சூரியனை ஏறிட்டுப் பார்க்கத் துணியும் கண்கள் கூடிய சீக்கிரத்தில் கூசிக் குனிய நேரிடுமென்று அறியாமல் போனேன்!..."

"சிவகாமி! நான் சூரியனுமல்ல; நீ பனித்துளியுமல்ல. நீ தீபச்சுடர்; நான் அதைச் சுற்றிச் சுற்றி வரும் விட்டில்!.."

"பிரபு! நான் சொல்ல ஆரம்பித்ததை விட்டு




வேறு விஷயத்துக்குப் போனது தவறுதான் மன்னியுங்கள். நான் ஆடி நிறுத்தியதும் நீங்கள் கரகோஷம் செய்தீர்கள், எனக்கு அப்போது உண்டான மகிழ்ச்சிக்கு அளவில்லை. உங்கள் தந்தை உங்களைப் பார்த்து, 'சிவகாமியோடு சற்று நேரம் விளையாடிக் கொண்டிரு! ஆயனரோடு பேசியான பிறகு உன்னைக் கூப்பிடுகிறேன்' என்றார். நீங்கள் என் அருகில் வந்தீர்கள். இருவரும் கைகோத்துக் கொண்டு காட்டுக்குள்ளே குதித்தோடினோம்."

"காட்டிலே நான் பார்த்து வைத்திருந்த அழகான இடங்களையும் செடி கொடிகளையும் காட்டியான பிறகு தங்களை வீட்டுக்குள்ளே அழைத்துச் சென்று நான் வளர்த்து வந்த கிளிகளையும் புறாக்களையும் காட்டினேன். பிறகு என் தந்தை செய்து வைத்திருந்த சிலைகளைக் காட்டத் தொடங்கினேன். நடன வடிவச் சிலைகளைப் பார்க்கும் போது தாங்கள், 'நானும் நடனக் கலை பயில விரும்புகிறேன்' என்றீர்கள். அந்தச் சிலைகளில் ஒன்றைப்போல் அபிநயத் தோற்றத்தில் நின்றீர்கள். அதைப் பார்த்துவிட்டு நான் கலீரென்று சிரித்தேன். 'குழந்தைகள் அதற்குள்ளே வெகு சிநேகமாகி விட்டார்களே!' என்று நம் தந்தைமார் பேசிக் கொண்டார்கள்.

"அன்றுமுதல் தங்களுடைய வருகையை நான் ஆவலுடன் எதிர்பார்க்கலானேன். குதிரையின் சத்தமோ ரதத்தின் சத்தமோ கேட்கும் போதெல்லாம் தாங்கள்தான் வந்து விட்டீர்கள் என்று என் உள்ளம் துள்ளி மகிழ்ந்தது. உதய சூரியனையும் பூரண சந்திரனையும், வண்ண மலர்களையும், பாடும் பறவைகளையும், பறக்கும் பட்டுப் பூச்சிகளையும் பார்க்கும்போது எனக்குண்டான குதூகலம் தங்களைப் பார்க்கும்போது உண்டாயிற்று. ஆனால் சூரிய சந்திரர்களிடமும், புஷ்பங்கள் பட்சிகளிடமும் பேச முடியாது. தங்களிடம் பேசுவது



சாத்தியமாயிருந்தபடியால், தங்களைக் கண்டதும் பேச ஆரம்பித்தவள் மூச்சுவிடாமல் பேசிக் கொண்டேயிருப்பேன்…"

"உண்மைதான், சிவகாமி! அந்த நாளில் உன்னைப் பார்க்கும்போது, உன் தந்தையின் அற்புதச் சிலைகளில் ஒன்றைப் பார்ப்பது போன்ற மகிழ்ச்சி எனக்கும் உண்டாகும். ஆனால் சிலை பேசாது; நீயோ ஓயாமல் பேசுவாய். பறவைகளின் குரல் ஒலிகளில் எவ்வளவு பொருள் உண்டோ , அவ்வளவு பொருள்தான் உன் பேச்சுக்களிலும் இருப்பதாக எனக்குத் தோன்றும். ஒன்றும் புரியாவிட்டாலும் நெடுநேரம் கேட்டுக் கொண்டிருப்பேன்…"

"என் பேச்சைப் போலவேதான் நமது சிநேகமும் அப்போது அர்த்தமற்றதாயிருந்தது. கொஞ்ச நாளைக்கெல்லாம், தாங்கள்




சக்கரவர்த்தியுடன் தேச யாத்திரை சென்றீர்கள். அப்புறம் மூன்று வருஷ காலம் அரண்ய வீட்டுக்கு நீங்கள் வரவில்லை. மறுபடியும் எப்போதுமே தங்களைப் பார்க்கமாட்டோமோ என்ற ஏக்கம் எனக்குச் சிற்சில சமயம் உண்டாகும். இல்லை, தாங்கள் எப்படியும் ஒருநாள் வருவீர்கள் என்று தைரியம் அடைவேன். தாங்கள் வருவதற்குள்ளே நடனக் கலையிலே சிறந்த தேர்ச்சியடைந்துவிடவேண்டுமென்றும், தாங்கள் திரும்பி வந்ததும் அற்புதமாய் ஆட்டம் ஆடித் தங்களைத் திகைக்கச் செய்ய வேண்டுமென்றும் எண்ணுவேன். தாங்கள் மீண்டும் வரும்போது தங்களுடைய உருவம் எப்படியிருக்குமென்று கற்பனை செய்து பார்க்க அடிக்கடி முயல்வேன். ஆனால் மனத்தில் உருவம் எதுவுமே வராது…. கடைசியாக ஒருநாள் தாங்களே வந்துவிட்டீர்கள்! முற்றும் புதிய மனிதராய் வந்தீர்கள்…"

"நீயும் வெகுவாக மாறிப் போயிருந்தாய், சிவகாமி! உருவத்திலும் மாறியிருந்தாய்; குணத்திலும் மாறியிருந்தாய். நான் எதிர்பார்த்ததுபோல் என்னைக் கண்டதும் நீ ஓடிவந்து என் கரங்களைப் பற்றி வீட்டுக்குள் அழைத்துப் போகவில்லை. தூண் மறைவிலே நாணத்துடன் நின்று கடைக்கண்ணால் என்னைப் பார்த்தாய். 'கலகல' என்று சிரிப்பதற்கு மாறாகப் புன்முறுவல் செய்தாய்! அந்தக் கடைக்கண் பாணமும் கள்ளப் புன்னகையும் என்னைக் கொன்றன."

"ஓடிவந்து முகமன் கூறி உங்களை வரவேற்க முடியாமல் ஏதோ ஒன்று என்னைத் தடைசெய்தது. முன்னால் வரலாமென்றால் கால் எழவில்லை. ஏதாவது பேசலாமென்றால் நா எழவில்லை. நின்ற இடத்திலேயே நின்றேன். என்னை நானே, 'சிவகாமி! உனக்கு என்ன வந்துவிட்டது?' என்று கேட்டுக் கொண்டேன். அதே சமயத்தில் அப்பாவும், 'சிவகாமி! ஏன் தூண் மறைவில் நிற்கிறாய்? வந்து சக்கரவர்த்திக்கு நமஸ்காரம் செய்! பல்லவ குமாரரைப் பார்! எப்படி ஆஜானுபாகுவாய் வளர்ந்திருக்கிறார்?' என்றார். நான் தயக்கத்துடன் வந்து நமஸ்காரம் செய்தேன். அப்போது சக்கரவர்த்தி, 'ஆயனரே! சிவகாமியும் வளர்ந்து போயிருக்கிறாள்! முதலில் எனக்கு அடையாளமே தெரியவில்லை . கற்சிலை செய்வதோடு நீர் தங்கச் சிலையும் செய்ய ஆரம்பித்துவிட்டீரோ என்று நினைத்தேன்' என்றார். இதனால் என்னுடைய நாணம் இன்னும் அதிகமாகிவிட்டது. சற்று நேரம் பேசாமல் நின்றுவிட்டு அப்புறம் வீட்டிலிருந்து நழுவிக் காட்டுக்குள்ளே சென்றேன். தாமரைக் குளக்கரையில் உட்கார்ந்து எனக்கு என்ன வந்துவிட்டது என்று யோசித்துக் கொண்டிருந்தேன்."

"சற்று நேரத்துக்கெல்லாம் என் பின்னால் மிருதுவான காலடிச் சத்தம் கேட்டது. ஆனால் நான் திரும்பிப் பார்க்கவில்லை. தாங்கள் வந்து என் கண்களைப் பொத்தினீர்கள். மூன்று வருஷத்துக்கு முன்னால் இப்படிக் கண்களைப் பொத்தும் போது நான் உங்கள் பெயரைச் சொல்லிக் 'கலகல' என்று சிரித்துக் கைகளைத் தள்ளி விட்டுத் திரும்பிப் பார்ப்பேன். இப்போது தங்களுடைய கரங்கள் என் கண்களை மூடியபோது, என் தேகம் செயலற்று ஸ்தம்பித்தது. என் உள்ளத்திலோ ஆயிரக்கணக்கான அலைகள் எழுந்து விழுந்து அல்லோலகல்லோலம் செய்தன."

"பிறகு நீங்கள் என் பக்கத்தில் வந்து உட்கார்ந்து என் கையை உங்கள் கையோடு சேர்த்துக் கொண்டீர்கள். நான் செயலற்றுச் சும்மா இருந்தேன். 'சிவகாமி! என் பேரில் கோபமா?' என்றீர்கள். நான் மௌனமாய் உங்களைப் பார்த்தேன். 'ஆமாம் கோபம் தான் போலிருக்கிறது!' என்று கூறி, தங்களுடைய யாத்திரையைப் பற்றி ஏதேதோ

சொல்லிக் கொண்டே போனீர்கள். ஆனால், நீங்கள் சொன்னது ஒன்றும் என் காதில் ஏறவேயில்லை. 'நீங்கள் என் அருகில் உட்கார்ந்திருக்கிறீர்கள்; நம் இருவருடைய கரங்களும் ஒன்றுபட்டிருக்கின்றன' என்னும் ஒரு உணர்ச்சி தான் என் மனதில் இருந்தது. அந்த நினைவு என்னை வான வெளியிலே தூக்கிக் கொண்டுபோய் மேக மண்டலங்களின் மேல், மிதக்கச் செய்தது. தடாகத்துத் தண்ணீரில் மிதக்கும் தாமரை இலைகளின் மேலே நின்று என்னை நடனமாடச் செய்தது. தண்ணீருக்குள்ளே அமுக்கிக் கீழே கீழே கொண்டு போய் மூச்சுவிட முடியாமல் என்னைத் திக்குமுக்காடச் செய்தது!..."



"என்னை எத்தகைய அசடாகச் செய்துவிட்டாய் நீ! நான் சொன்னதையெல்லாம் நீ வெகு கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்ததாக எண்ணியல்லவா என் யாத்திரை அனுபவங்களையெல்லாம் உனக்குச் சொல்லிக் கொண்டிருந்தேன்?"

"கடைசியாக, நீங்கள் விடை பெற்றுச் சென்றபோது, 'சீக்கிரத்தில் திரும்பி வருவேன்' என்று சொல்லிவிட்டுச் சென்றீர்கள். அப்புறம் சில காலம் நான் தரையிலே நடக்கவேயில்லை. ஆனந்த வெள்ளத்தில் மிதந்து கொண்டேயிருந்தேன். என் வாழ்க்கையில் ஒரு மகத்தான அதிசயம் அபூர்வமான புதுமை — யாருக்கும் கிடைக்காத அற்புதமான பாக்கியம் கிடைத்துவிட்டதாகத் தோன்றியது. அதனால் என் கண்களுக்கு உலகமே புதிய தோற்றம் கொண்டது. வானத்திலும் பூமியிலும் அதுவரை காணாத வனப்புக்களையெல்லாம் கண்டேன். மல்லிகையும் முல்லையும் செண்பகமும் அதற்குமுன் நான் என்றும் அறியாத நறுமணத்தை அளித்தன. நீல வானம் புதிய மெருகுடன் பிரகாசித்தது. பட்சிகளின் கானத்தில் புதிய இனிமை தென்பட்டது. மூங்கில் காடுகள் காற்றில் அசையும்போது உண்டாகும் சத்தம் முன்னெல்லாம் அழுகைச் சத்தமாக எனக்குத் தோன்றும். இப்போது அதுவே ஆனந்த கீதமாக என் காதில் ஒலித்தது. செடிகளும் கொடிகளும் பட்சிகளும் பூச்சிகளும் ஆயிரம் ஆயிரம் குரல்களில் 'சிவகாமி! நீ கொடுத்து வைத்தவள்; பாக்கியசாலி' என்ற ஆதரவோடு சொல்வதாகத் தோன்றியது. இரவிலே வானத்து நட்சத்திரங்கள் முன் எப்போதையும்விடக் குதூகலமாக என்னைப் பார்த்துச் சிரித்தன. வெண்மதியாகிய தந்தத் தோணியின் மேலே அமர்ந்து வானக் கடலில் அந்த விண்மீன்களிடையே சுற்றி வந்தபோது, இப்போது நான் தனியாகச் சுற்றவில்லை. தோணியில் என் அருகில் நீங்களும்

வீற்றிருந்தீர்கள்! எல்லையற்ற உள்ளக் கடலிலே தாலாட்டிய சிந்தனை அலைகளுக்கு மத்தியில் மிதந்த வாழ்க்கைத் தெப்பத்தில் நான் மட்டும் தனியாக இருக்கவில்லை; பக்கத்தில் தாங்களும் இருந்தீர்கள். அப்போதெல்லாம் எனக்குத் தானாகவே பாட்டுப் பாடத் தோன்றியது. ஆட்டத்தில் அளவில்லாத உற்சாகம் உண்டாயிற்று. நடனக் கலையில் நான் அடைந்த துரிதமான அபிவிருத்தியைக் கண்டு என் தந்தையே பிரமித்துப் போனார்....”




“சக்கரவர்த்தியும் நானும் கூடத்தான் அதிசயம் அடைந்தோம். பரதசாஸ்திரம் எழுதிய முனிவருக்கே எட்டாத நடனக் கலை விந்தைகளெல்லாம் உன் ஆட்டத்தில் வெளியாவதாக என் தந்தை அடிக்கடி சொன்னார். காஞ்சி மாநகரில் இராஜ சபையில் அரங்கேற்றம் நடத்த வேண்டும் என்று அவர்தான் வற்புறுத்தினார்.”

“பிரபு! அந்தத் துரதிர்ஷ்டம் பிடித்த அரங்கேற்றம் நடக்கும் சமயத்தில் என் மன நிலை மாறிவிட்டது. அந்த மாறுதலை நினைத்தால் எனக்கே அதிசயமாயிருக்கிறது. மூன்று வருஷ பிரிவுக்குப் பிறகு தங்களைப் பார்த்ததும் எனக்குண்டான சந்தோஷம், குதூகலம் எல்லாம் சில நாளைக்குள் எங்கேயோ போய்விட்டன. வரவர, தங்களுடைய நினைவு எனக்கு மகிழ்ச்சியை அளிப்பதற்கு மாறாகத் துன்பத்தைத் தர ஆரம்பித்தது. எதைப் பார்த்தாலும் பிடிக்காமல் போய்விட்டது. சந்திரனும் நட்சத்திரங்களும் வெறுப்பை அளிக்கத் தொடங்கின. பொழுது விடிந்தால் ஏன் விடிகிறது என்று தோன்றியது. இரவு வந்தால் ஏன் இருட்டுகிறது என்று தோன்றுகிறது. பூக்களைக் கண்டால் கசக்கி எறியத் தோன்றியது. என் கண்களிலிருந்து தூக்கம் மாயமாய்ப் போய்விட்டது. அருமையாக வளர்த்த மான் குட்டியையும் கிளியையும் வெறுக்கத் தொடங்கினேன். நடனக் கலையிலே கூட எனக்கு ஆசை குன்றத் தொடங்கியது. ‘ஆட்டமும் பாட்டமும் என்ன வேண்டிக் கிடக்கிறது?’ என்று எண்ணத் தொடங்கி விட்டேன்... இந்தச் சமயத்தில்தான் அரங்கேற்றம் நடந்தது; அபசகுனம் போல் அது நடுவில் நின்றுபோனதில் எனக்குத் திருப்தியே உண்டாயிற்று...”

“அரங்கேற்றத்துக்குப் பிறகு தாமரைக் குளக்கரையில் நாம் சந்தித்தபோதும் நீ ஒரு மாதிரி வருத்தத்துடனேதான் பேசினாய். என்னிடம் வாக்குறுதி கேட்டாய்! எனக்கு அதெல்லாம் பெருவியப்பாயிருந்தது..”

“பிரபு! அச்சமயம் தங்களுடைய திருமணத்தைப் பற்றிய பிரஸ்தாபம் என் காதில் விழுந்தது. ஏற்கனவே வேதனைக்குள்ளாயிருந்த என் உள்ளத்தில் அது வேலினால் குத்துவது போலிருந்தது. தாங்கள் எனக்கே முழுவதும் உரியவராயிருக்க வேண்டுமென்று கருதினேன். தங்களைப் பார்க்காமல் ஒரு கணம் போவது ஒரு யுகமாயிருந்தது. என்னுடைய தூண்டுதலினாலேதான் என் தந்தை காஞ்சிக்கு நாவுக்கரசர் பெருமானைப் பார்ப்பதற்கு வந்தார். அன்று நடந்ததைத் தாங்கள் அறிவீர்கள்...”

“அன்று நடந்ததை மட்டும் அல்ல, சிவகாமி! உன் உள்ளத்தின் நிலைமையையும் அன்றைக்குத் தெரிந்து கொண்டேன். அதனாலேதான் மறுநாளே கண்ணபிரானிடம் ஓலை கொடுத்து அனுப்பினேன்.”

“அந்த ஓலையிலிருந்து நான் காஞ்சிக்கு வருவது தங்களுக்கு விருப்பமில்லையென்று அறிந்தேன். தங்களைப் பார்க்காமல் நான் கழித்த எட்டு மாதமும் எனக்கு எட்டு யுகமாயிருந்தது. நாளுக்கு நாள் என் மன வேதனையும் நெஞ்சு வலியும் அதிகமாகி வந்தன. தங்களிடமிருந்து ஓலை வந்த இரண்டொரு தினங்கள் சிறிது உற்சாகமாயிருப்பேன், பிறகு துன்பம் அதிகமாகிவிடும். தங்களை ஒரு நாளும் இனிப் பார்க்கப் போவதில்லையென்றும், என்னுடைய பகற் கனவு ஒரு நாளும் நிறைவேறப் போவதில்லையென்றும் தோன்றும். ‘இப்படி எதற்காக உயிர் வாழவேண்டும்? இந்த வாழ்நாளை முடித்துக் கொள்ளலாம்’ என்று அடிக்கடி எண்ணமிடத் தொடங்கினேன். இப்படியே கொஞ்சநாளிருந்தால் எனக்குப் பைத்தியமே பிடித்துவிடலாம் என்று அடிக்கடி தோன்றியது.... பிரபு! தங்களுடைய விருப்பத்தின்படி அரண்ய வீட்டிலேயே காத்திராமல் ஏன் யாத்திரை கிளம்பி வந்தேன் என்று இப்போது தெரிகிறதா?” என்று சிவகாமி முடித்தாள்.

“தெரிகிறது, சிவகாமி! இப்படிப் பிரளய வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டு இரண்டு பேரும் திண்டாட வேண்டும். இந்த ஜன சூன்யமான ஏகாந்தத் தீவிலே வந்து ஒதுங்க வேண்டும் என்பதற்காகத்தான்! இது தெரியாதா என்ன?” என்று மாமல்லர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அந்தத் தீவைப் பற்றிய அவருடைய வார்த்தையைப் பொய்ப்படுத்திக் கொண்டு, சற்றுத் தூரத்தில் வாத்திய கோஷங்களும் ஜனங்களின் ஆரவார ஒலிகளும் கேட்டன. இருவரும் திடுக்கிட்டு எழுந்திருந்தார்கள்.


(சபதம் தொடரும்)


VARSHA
TM
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100%
Pure
Vegetarian
ઈડલી ઢોસા નું ખીરું
इडली/ दोसा आटा

# மக்காக்

## பிளாஸ்டிக்கால் புவியைச் சிதைப்பதில் நமக்குப் பங்கு இல்லையா?

பிளாஸ்டிக் தொடர்பாக நாம் பேசத் தொடங்கும்போது அது நம் உலகை எவ்வளவு மாசுபடுத்தியிருக்கிறது என்றோ, எத்தனை உயிரினங்கள் பலியாகியிருக்கின்றன என்றோ புள்ளிவிவரங்கள் தர வேண்டிய அவசியம் இருப்பதில்லை. குப்பைத்தொட்டிக்கு வெளியே சிதறிக் கிடக்கும் குட்டிக் குட்டி பிளாஸ்டிக் மூட்டைகளைக் கிழித்துத் தின்ன முயன்றுகொண்டிருக்கும் மாடுகளைக் காணும்போது கடுமையான குற்றவுணர்வு ஏற்படும் அளவுக்கு நமக்கு போதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தக் குற்றவுணர்வோடு மட்டும் நம்மால் அங்கிருந்து கடந்துசென்றுவிட முடிகிறதே ஏன்? அரசு கொண்டுவந்த கட்டுப்பாடு தேர்தல் அறிவிப்பு வந்த வேகத்தில் பிசுபிசுக்க, கூடவே நாமும் பழையபடி பிளாஸ்டிக் யுகத்துக்குள் இயல்பாக நுழைந்துவிடுகிறோமே எப்படி?




ஊகித்திராத அளவுக்கு அசுர வேகத்தில் பிளாஸ்டிக் எல்லா இடங்களிலும் புகுந்துவிட்டது. இன்றைய காரும் விமானமும் 50% பிளாஸ்டிக்கால் ஆனது. உடுத்தும் உடைகளுக்குள் பிளாஸ்டிக் கலந்துவிட்டது. ஒவ்வொரு தரப்பிலிருந்தும் பிளாஸ்டிக் உபயோகத்தைத் தவிர்ப்பது குறித்து நாம் யோசிக்கும்வேளையில் முதல் கட்டமாக நம்மிலிருந்து எப்படித் தொடங்குவது என்ற கேள்வியைக் கேட்டுக்கொள்வோம்.

### பிளாஸ்டிக் பழக்கத்துக்கு அடிமையாகிவிட்டோம்


இதோ இந்த நிமிடத்திலிருந்து என்று உறுதிபூண்டு அடுத்த நொடியே கைவிட்டுவிடும் விஷயம் அல்ல இது. புகைப்பழக்கம்போல இந்த பிளாஸ்டிக் பழக்கத்துக்கு அடிமையாகியிருக்கிறோம். ‘இனி இங்கே பிளாஸ்டிக் பைகள் கிடையாது’ என்று மூன்று மாதங்களாகத் தொங்கிக்கொண்டிருந்த அறிவிப்புப் பலகையை இப்போது அகற்றிவிட்ட கடைக்காரர்களிடம் பேசியபோது சொல்லி வைத்தாற்போல எல்லோரிடமிருந்தும் ஒரே மாதிரியான பதில்தான் வந்தது. “நிறைய பேர் பை எடுத்துவருவதில்லை. இல்லை என்று சொன்னால் யார் தருகிறார்களோ அங்கே சென்றுவிடுகிறார்கள். வேறு

# கழிவு

**த.ராஜன்**

வழியில்லாமல் நாங்களும் வாங்கிவைக்கத் தொடங்கிவிட்டோம்.”

பிளாஸ்டிக் தடை அறிவிக்கப்பட்டபோது உலகின் பல்வேறு நாடுகளும் இந்தச் சிக்கலை எதிர்கொண்டன. ‘வாடிக்கையாளருக்கும் விற்பனையாளருக்கும் இடையே இருக்கும் உளவியல் ஒப்பந்தமே காரணம்’ என்று இந்தப் பிரச்சினையை வரையறுத்தார்கள். ‘நான் உன் கடைக்கு வந்து பொருட்கள் வாங்குகிறேன்; எனக்கு அதை இலவச பிளாஸ்டிக் பையில் போட்டுக் கொடுத்துவிடு’ என்பதுதான் அந்த ஒப்பந்தம். இந்தப் பல ஆண்டு காலப் பழக்கத்தை பிளாஸ்டிக் தடை தகர்க்கிறது. ‘நீ என் கடைக்கு வந்து பொருட்கள் வாங்கு; அதை எடுத்துச்செல்ல நீயே ஒரு பையைக் கொண்டுவந்துவிடு’ எனும் புதிய ஒப்பந்தத்துக்குப் பெரும்பாலானவர்களால் தயாராகமுடியவில்லை. விற்பனையாளர்கள் தங்கள் வாடிக்கையாளர்களைத் தக்க வைத்துக்கொள்ள பழைய ஒப்பந்தத்தைக் கையிலெடுக்கிறார்கள்.




எங்கள் அடுத்த தலைமுறையினர் பிளாஸ்டிக் இல்லா உலகில் வாழ வேண்டும் எனும் உயரிய லட்சியத்தோடு உலகின் பல்வேறு பகுதிகளிலும் பிளாஸ்டிக்குக்கு எதிரான நடவடிக்கைகள் மிக மும்முரமாகச் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. அரசு தடை அறிவிப்பதற்கு முன்பே, பொதுமக்களே அரசுக்கு அறிவுறுத்தும் நிகழ்வுகளெல்லாம் நடந்தேறியிருக்கின்றன. நியூசிலாந்து பிரதமரிடம் பிளாஸ்டிக்கைத் தடைசெய்யக் கோரி 65 ஆயிரம்


SAY NO TO SINGLE-USE PLASTIC


9 REASONS TO REFUSE SINGLE-USE PLASTIC
1
Made from fossil fuels
2
Huge carbon footprint
3
Will still be here in hundreds of years
4
Only a tiny percentage is recycled
5
Leaches toxins into food & drink
6
Causes hormone disruption & cancers
7
Pollutes our oceans
8
Kills marine animals and birds
9
Enters our food chain
LESS PLASTIC.
WWW.LESSPLASTIC.CO.UK



பேர் மனு கொடுத்திருக்கிறார்கள். ஒரு சின்ன பிளாஸ்டிக்கூடப் பயன்படுத்தாத குடும்பங்களின் வாழ்க்கை முறைகளைப் பிரதானக் கட்டுரைகளாக ஊடகங்கள் வெளியிட்டன. ஒருவரைப் பார்த்து இன்னொருவர் என இந்த எண்ணிக்கை கணிசமாக உயர்ந்தது.

### தார்மிக உணர்வே இலக்கை அடையும் வழி

அரசு மட்டுமல்லாது நாமும் இதற்குக் காரணம் என்ற இடத்திலிருந்துதான் இதுபற்றி நாம் பேசத் தொடங்க வேண்டும். பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகிப்பவர்களுக்கு சில நாடுகள் கடுமையான சிறைத்தண்டனை விதித்தன. சில நாடுகள் லட்சக்கணக்கில் அபராதம் அறிவித்தன. மிக அதிக அளவில் வரி விதித்து அந்த வரிப்பணத்தைச் சுற்றுச்சூழல் பராமரிப்புக்குச் செலவிட்டன சில நாடுகள். ஆனால், எங்கெல்லாம் மக்களாகவே கைவிட முன்வந்தார்களோ, எங்கெல்லாம் மக்களே பிளாஸ்டிக்குக்கு எதிராகத் தன்னார்வத்தோடு பிரச்சாரம் செய்தார்களோ அங்குதான் சுமுகமாக பிளாஸ்டிக் தடை சாத்தியமானது.

பிளாஸ்டிக் கழிவுகளை உற்பத்திசெய்வதில் சென்னை முதலிடத்தில் இருக்கும் சூழலில் தமிழகம் எப்போதோ பிளாஸ்டிக் தடைக்கு முகம் கொடுத்திருக்க வேண்டும். இது காலம் தாழ்த்திய நடவடிக்கைதான் எனினும் ஒருமித்த உணர்வோடு நாம் வரவேற்றிருக்க வேண்டும். ஒட்டுமொத்த தமிழகமும் ஒருமித்த மனதோடு பிளாஸ்டிக்கைக் கைவிடுவதுதான் நம் இலக்கு. அது தார்மிக உணர்விலிருந்து வரும்போதுதான் சாத்தியமாகும்.

### எதிர்கால சந்ததிக்கு உருவாக்கும் இழுக்கு

கடவுள் படங்கள் வரைந்துவைத்தால் சிறுநீர் கழிக்க மாட்டார்கள் எனும் நம்பிக்கையெல்லாம் பொய்த்துப்போய்விட்ட காலத்தில் நாம் தார்மிகம் பேசுவதெல்லாம் நகைப்புக்கு இடமளித்துவிடும். தார்மிகத்தும் யதார்த்தத்துக்கும் உள்ள தூரத்தையும் நாம் அறிந்திராதவர்கள் அல்ல. ஆனால், தார்மிகத்தைத் தன் வாழ்வின் பகுதியாகக் கடைப்பிடிக்கும் சொற்பமான கூட்டம் ஒரு நேர்மறையான முன்னுதாரணமாக மாறும்போது இன்னும் கொஞ்சம் பேர் நம் இலக்கை விஸ்தரிக்க முன்வரக்கூடும்.

'தன்னுடைய கல்லைத் தான் வைக்கும்போது, இந்த உலகத்தைக் கட்டமைப்பதில் தன்னுடைய பங்கையும் அளிக்கிறோம் என்ற உணர்வுதான் மானுடம்' என்கிறார் பிரெஞ்சு நாவலாசிரியர் எக்சுபெரி. 'ஒரு சிறு பிளாஸ்டிக் துணுக்கை நான் பயன்படுத்தும்போது இந்த உலகுக்கும் என் எதிர்கால சந்ததிக்கும் மிகப் பெரும் இழுக்கை உண்டாக்குகிறேன்' என்று உணரத் தொடங்குவதே நம் இலக்கை எட்டுவதற்கான வழி.




## காலை உணவைத் தவிர்க்க வேண்டாம்!!


காலை உணவை பெரும்பாலானோர் எடுத்துக் கொள்வதில்லை. ஆனால், இரவு உணவுக்குப் பிறகு சுமார் 10 மணிநேர இடைவெளிக்குப் பின் காலை உணவை உட்கொள்வது மிகவும்...

காலை உணவை தவிர்க்கக்கூடாது என எத்தனையோ முறை பெரியவர்கள் சொன்னாலும், இந்த எந்திர வாழ்க்கையால் வேகமாக ஓட வேண்டிய கட்டாயத்தால் காலை உணவை பெரும்பாலானோர் எடுத்துக் கொள்வதில்லை. ஆனால், இரவு உணவுக்குப் பிறகு சுமார் 10 மணிநேர இடைவெளிக்குப் பின் காலை உணவை உட்கொள்வது மிகவும் அவசியம். பால், நட்ஸ், இட்லி, முட்டை, என புரதம் நிறைந்த உணவுகளை காலையில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு நாளில் நாம் உட்கொள்ளும் உணவில் காலை உணவு மிக முக்கியமானது என்பதை ஏராளமான ஆய்வுகள் எடுத்துக் காட்டிவிட்டன. ஆனாலும் நம்மில் பலர் சரியான காலை உணவை எடுத்துக் கொள்ளத் தவறுகிறோம். இதற்குப் பல காரணங்கள் உண்டு என்பது உண்மைதான். சிலருக்குக் காலையில் பசி எடுப்பதில்லை. பள்ளிக்கோ அலுவலகத்திற்கோ செல்ல வேண்டிய அவசரத்தில் காலை உணவைத் தவிர்ப்போர் பலர். பெண்களில் பலருக்கு காலையில் குழந்தைகளைப் பள்ளிக்குச் செல்லத் தயார்ப்படுத்துவது, சமையலை முடித்து கணவருக்குக் கொடுத்து அனுப்புவது போன்ற வேலைகளில் மூழ்கிவிடுவதால் காலை உணவுக்கு நேரம் ஒதுக்க முடிவதில்லை.

காரணங்களை அடுக்குவதை விடுத்து எப்படியாவது காலை உணவை எடுத்துக் கொண்டே ஆகவேண்டும் என்ற தீர்மானத்திற்கு ஒருவர் வந்துவிட்டால் அவருக்கு அது சாத்தியமே. காலை உணவைத் தவற விடுபவர்கள் மதிய நேரத்தில் ஒரு பிடி பிடித்துவிடுவது வழக்கம். அல்லது இடையில் பசியைச் சமாளிக்க கேக், பிஸ்கெட் என ஏதாவதொரு நொறுக்குத் தீனி அல்லது காபி, டீ, குளிர்பானங்களை உட்கொண்டு பசியைச் சமாளிப்பதும் உண்டு. உடல்நலத்திற்கு உதவாத நொறுக்குத் தீனிகளோ பானங்களோ நீடித்த ஆற்றலைத் தர பயன்பட மாட்டா.

நமது மூளை செயல்பட குளூகோஸ் அவசியம். நமது உடலுக்குத் தேவையான குளூகோசைத் தரவல்லது மாவுச்சத்து. இரவு உணவுக்கும் அடுத்த நாள் மதிய உணவுக்கும் உள்ள இடைவேளை நேரம் மிக அதிகம். உணவுக்குப் பிறகு அதிலிருந்து கிடைக்கும் குளூகோஸ் கல்லீரலிலும் தசைகளிலும் கிளைகொஜனாக சேமித்து வைக்கப்படுகிறது. காலையில் இந்த சேமிப்பு அநேகமாகக் கரைந்துவிடும். இழந்த சக்தியை மீண்டும் பெற காலையில் மாவுச்சத்தும் பிற ஊட்டச்சத்துக்களும் அடங்கிய உணவை எடுத்துக் கொள்வது அவசியம். அன்று நாம் ஈடுபட உள்ள நடவடிக்கைகளுக்குத் தேவையான ஆற்றல் இந்த உணவிலிருந்தே கிடைக்கும். அது மட்டுமல்ல, ஊட்டச்சத்துள்ள






காலை உணவு உடலுக்கு ஒரு நாளைக்குத் தேவையான வைட்டமின்கள் , தாதுப்பொருட்கள் கிடைக்கவும் உதவிடும்.

காலை உணவு எடுத்துக் கொள்வதை வழக்கமாக மாற்றிக் கொண்டவர்கள் நாள் முழுதும் ஆற்றலுடன் இருப்பதோடு மனஅழுத்தம் ஏதுமின்றி மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்பதை ஆய்வுகள் தெளிவுபடுத்தியுள்ளன. மதிய உணவை அதிக அளவில் உள்கொள்ளும்போது உபரியாகக் கிடைக்கும் கலோரிகள் கொழுப்பாக மாற்றப்பட்டு உடலில் நடக்க வேண்டிய வேதியியல் மாற்றங்களை தாமதப்படுத்தி விடும். எனவே, அதிக அளவில் மூன்று வேளைகள் உண்பதைவிட, முறையான இடைவேளைகளில் சிறிதளவு சத்தான உணவு வகைகளை அடிக்கடி எடுத்துக் கொள்வது நல்லது என்கிறார்கள் உணவியல் நிபுணர்கள்.

நல்ல காலை உணவு என்பது அதிக அளவில் இட்லி, தோசை, பூரி வகையறாக்களை உட்கொள்வது என்பதல்ல. அவற்றை சிறிதளவு எடுத்துக் கொள்ளலாம். நார்ச்சத்து நிரம்பிய உணவை எடுத்துக் கொண்டால் அது உடனே செரிமானம் ஆகிவிடாமல் நீண்ட நேரத்திற்கு சக்தியைத் தரக்கூடியதாக இருக்கும். சுத்திகரிக்கப்பட்ட மாவுச்சத்துப் பொருட்களை விட நார்ச்சத்து மிகுந்த மாவுச்சத்துப் பொருட்கள் நல்லது.

அதி அவசரங்களில் மூழ்கிய நம் காலைப் பொழுதுக்கு நாம் காவு கொடுத்ததுஞ் காலை உணவு! இன்றைக்கு பொறியியல் மாணவன், கார்ப்பரேட் நிறுவனத்தில் வேலை பார்க்கும் பெண்மணி, கணவன்—குழந்தைகளை அதிகாலையில் எழுந்து கிளப்பிவிடும் இல்லத்தரசிஞ் இவர்கள் எல்லோருமே தொலைத்தது காலை உணவை!

இரவில் எட்டு மணி நேரம் அமில ஊறலில் இருக்கும் இரைப்பை, காலை உணவைத் தவிர்த்தால் அமிலத்தால் சிதையத் தொடங்கும். காலை உணவைச் சாப்பிட்டு, இரைப்பையை நிரப்பாவிட்டால், முதல் நாள் இரவில் இயல்பாக ஏறிய பித்தம் மெதுவாகத் தலைக்கு ஏறும். அது வயிற்றுப் புண், வயிற்று உப்புசம், தீவிரமான வயிற்றுவலி, வாந்தி, பசியின்மை, அதிக உயர் ரத்த அழுத்தம், மனஅழுத்தம் வரை பல நோய்களைக் கொண்டு வந்து சேர்க்கும். காலை 9 மணிக்குள் சாப்பிடாமல், 11 மணிக்குச் சாப்பிட்டால் ட்ரான்ஸ்பேட் கொழுப்பும் கலோரியும் எக்குத்தப்பாக எகிறும்; அடிவயிற்றில் படிந்து பெருகும். ஆக, எப்படியாவது காலை உணவைக் கண்டிப்பாகச் சாப்பிட்டுவிட வேண்டும் என்பதுதான் நியதி.

காலை உணவை சரியாக உட்கொள்ளவில்லை என்றால் பல்வேறு உடல்நல பிரச்சனைகள் ஏற்படும். அவற்றில் சிலவற்றை காண்போம்.

### 1. நீரிழிவு நோய் ஏற்பட வாய்ப்புகள் அதிகம்:

காலை உணவை மிஸ் செய்தால், டைப் 2 வகை நீரிழிவு நோய் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். இதனை பல்வேறு ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

### 2. உடல் எடை அதிகரிப்பதை தவிர்க்க முடியாது:

இரவில் அதிக உணவை எடுத்துக் கொள்பவர்களைவிட, காலையில் அதிக உணவு எடுத்துக்கொள்பவர்களுக்கு எடை குறைய வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஏனென்றால், காலை உணவை மிஸ் செய்தால், மதியம், இரவு உணவுகளை அதிகம் எடுத்துக் கொள்வீர்கள்.

### 3. இதய நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு:

காலை உணவை உட்கொள்பவர்கள், அதனை மிஸ் செய்பவர்களைவிட குறைவாகவே இதய நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். அதேபோல், மன அழுத்தம், உடலில் சர்க்கரை அதிகரிப்பு ஆகியவையும், காலை உணவை தவிர்த்தால் ஏற்படும்.

### 4. மூளை செயல்பாடு குறையும்:

காலை உணவை உட்கொள்பவர்களுக்கு மூளை திறம்பட செயல்படும். நினைவாற்றல், லாஜிக்கல் திறன் அதிகரிக்கும். காலை உணவை தவிர்த்தால் மூளை செயல்பாடு குறையும்.

# கனியிருப்பக்

இறைவனது படைப்பிலேயே பேசும், சிரிக்கும் தன்மை கொண்ட ஒரே இனம் மனித இனம் மட்டும்தான். பறவைகளுக்கோ, விலங்குகளுக்கோ பேசும் தன்மையோ, சிரிக்கும் தன்மையோ கிடையாது.

பேச்சு என்பது மிகச் சிறந்த கலை. அது நமது எண்ணங்களின் வெளிப்பாடு; எத்தனையோ சான்றோர்கள்அவர்களது பேச்சுத் திறனாலேயே உலகில் அறியப்பட்டுள்ளனர். சிறப்பான பேச்சு அத்தனை நபர்களையும் கட்டிப் போடும் வல்லமை படைத்த ஒன்றாகும். இன்று பல வணிக நிறுவனங்கள் வெற்றிக் கொடிகட்டிப் பறந்து கொண்டிருப்பதற்கு, அந்த நிறுவனத்தின் பேசும் திறன் கொண்ட பிரதிநிதிகள்தான் காரணம்.

ஆனால், இன்றைய சூழலில் ஒவ்வொரு மனிதரும் பல்வேறுபட்ட சூழ்நிலைகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. பல்வேறுபட்ட நபர்களிடம் கலந்துரையாட வேண்டியுள்ளது.

குடும்பத்திலும், அலுவலகத்திலும், சமூகத்திலும் பகிரப்பட வேண்டிய விஷயங்கள் கணக்கிலடங்காமல் உள்ளன. ஒவ்வொரு மனிதரும் அன்றாட வாழ்க்கையில் இந்தச் செயல்பாட்டில் சரிவரச் செயல்படுகிறார்களா என்றால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.




நாம் பேசுவது மனிதர்களோடு என்றுதான் நினைக்கிறோம். ஆனால், உண்மை அதுவல்ல; நாம் பேசுவதெல்லாம் அவர்கள் மனங்களோடுதான். நல்லதொரு இனிமையான பேச்சு மற்றவர்கள் மனங்களை மகிழ வைக்கும்; அவர்கள் முகங்களை மலர வைக்கும்.

மனிதர்களை பல வகையாகப் பிரிக்கலாம். ஒரு சிலர் இயந்திரங்களோடு மட்டுமே பேசிக் கொண்டிருப்பர்.



# காய்...

அருகருகே அமர்ந்திருந்தாலும் அடுத்தவரை கண்டுகொள்ளாமல் கையிலுள்ள செல்லிடப்பேசியிலும், கணினியிலும் காலத்தைக் கடத்திக் கொண்டிருப்பவர்கள் ஒரு வகை. நாம் அதிகார நிலையில் இருக்கிறோம்; அடுத்தவரோடு பேசுவதால் நம் ஆளுமை குறைந்துவிடும் என்பதற்காக குடும்பத்தில்கூட குதூகலத்தை தொலைத்து நிற்பவர்கள் மற்றொரு வகை.

தன்னை மற்றவர்கள் முன்னால் மிகப் பெரிய நபராகக் காட்ட வேண்டும் என்று எல்லா நேரத்திலும் கடுமையான சொற்களைப் பேசுவதும், உரத்த குரலில் பேசும் குணம் கொண்ட மனிதர்கள் வேறொரு வகை. உளவியல் ரீதியாகப் பார்த்தால் இயலாமையின் வெளிப்பாடுதான், உரத்த குரலில் கடுமையான சொற்களைப் பேசும் தன்மையாகும்.




எஸ். ராஜசேகரன்

எங்கே தான் புறக்கணிக்கப்பட்டு விடுவோமோ என்ற அச்சத்திலும், பயத்திலும் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள காட்டப் பயன்படுத்தும் உத்திதான் இந்தப் பேச்சு. தான் சொல்ல நினைப்பதை ஒருசிலர் வெளிப்படுத்தத் தெரியாமல் விழிபிதுங்கி தடுமாறி குழப்பத்தின் மொத்த வெளிப்பாடாகக் காட்சியளிக்கின்றனர். தொடர்பு இல்லாத விஷயங்களை வேறு சிலர் மணிக்கணக்காகப் பேசி அடுத்தவர் நேரத்தை வீணடித்து அதில் ஆனந்தம் அடைகிறார்கள்.

ஆனால், ஒரு சில நபர்கள் மட்டுமே சரியான நபர்களிடம் அவர்களுக்குத் தேவையான விஷயத்தைச் சரியான முறையில் இனிமையாகப் பேசி இதயம் கவர்கின்றனர். அவர்களால் மட்டுமே எல்லாத் துறையிலும் சாதனையாளர்களாக இருக்க முடிகிறது.


இதைத் தான் திருவள்ளுவர்

இனிய உளவாக இன்னாத கூறல்

கனியிருப்பக் காய் கவர்ந்தற்று.

என்று கூறியுள்ளார்.


இதன் பொருள், இனிமையான சொற்கள் இருக்கும்போது கடுமையான சொற்களைப் பேசுவது, ஒரு மரத்தில் உண்பதற்கு நல்ல பழங்கள்




இருக்கும்போது அதை உண்ணாமல் அந்த மரத்தில் உள்ள காய்களை உண்ணுவதற்குச் சமமாகும் என்பதாகும்.

உணர்ச்சிவசப்பட்ட நிலையில் இருக்கும்போது விவாதங்களைத் தவிர்க்க வேண்டும். தவறினால் அது ஆறாத ரணத்தை ஏற்படுத்தி விடும்.

இதெல்லாம் தெரிந்துதான் வாயுள்ள பிள்ளை பிழைத்துக் கொள்ளும் என்று நேர்மறையாகக் கூறியுள்ளனர். இதன் பொருள் கனிவான வார்த்தைகளைப் பேசுவோர், அனைத்துச் செயல்பாடுகளிலும் வெற்றி காண முடியும்.




பேசும்போது எதிரே உள்ளவரின் முகம் பார்த்துப் பேசுவது பயனளிக்கும். மிகவும் உரத்த குரலிலும், மிகவும் தாழ்ந்த குரலிலும் பேசுவது எரிச்சலை ஏற்படுத்தும். அவர்களது கண்களைப் பார்த்துப் பேசும்போது ஏற்படும் அதிர்வலைகள் நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்தும். பேசுகின்ற நபர்களுக்கு உடல் மொழி மிகவும் அவசியமான ஒன்றாகும். அலட்சியமான பேச்சு, ஆணவமான பேச்சு, எதிர்மறையான பேச்சு, அடுத்தவர் மனதைப் புண்படுத்தும் பேச்சு ஆகியவற்றை அறவே தவிர்க்க வேண்டும்.

பேசுகின்ற பேச்சு மரியாதையையும், அன்பையும், கண்ணியத்தையும் வெளிப்படுத்தும் பேச்சாக இருக்க வேண்டும். சுய விளம்பரம் செய்யும் பேச்சு, மற்றவர்களை வெறுப்படையச் செய்யும். எதிரே உள்ளவரின் பேச்சுகளைக் கூர்ந்து கவனித்துப் பதிலளிக்க வேண்டும்.

பேசுவதற்கு முன்பு திட்டமிடல் வேண்டும். என்ன பேச வேண்டும், அதை எப்படிப் பேச வேண்டும் என்பது குறித்த முறையான தயாரிப்புதான் அந்தத் திட்டமிடல் ஆகும். சில மனிதர்கள் ஆத்திரத்திலும், அவசரத்திலும் தவறாகப் பேசிவிட்டு தனிமையில் வருந்துவர். முள்ளின் வலிகூட சில நிமிஷங்கள்தான்; ஆனால், சொல்லின் வலி பல ஆண்டுகள் என்பதை மறக்கக் கூடாது. அது நடந்த பின்பு வருந்துவதைவிட, பேசும் முன் யோசிப்பதும், யோசித்த பின்பு பேசுவதும் உறவுமுறைகளை மேம்படுத்த உதவும்.

நல்ல பேச்சினால் நட்புகளைப் பெற்று, நன்மைகளைப் பெற முடியும். ஆனால், மனதைக் காயப்படுத்தும் பேச்சுகள் வடுக்களைத்தான் ஏற்படுத்தும். அதைச் சரி செய்ய முடியாது.

இந்த உலகிலேயே சிறந்தது அன்பு ஒன்று தான். அன்பாகப் பேசுங்கள், பேச்சால் அன்பினை வெளிப்படுத்துங்கள். அன்பு காரணமாக உறவுகள் மேம்படும். அன்பு காட்ட குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள், அன்பினால் மட்டும் குழந்தைகளை வழி நடத்துங்கள்.

# படைப்பாளிகளுக்கு...

* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!



* படைப்புகளை மின்னஞ்சலில் அனுப்புவது வரவேற்கப்படுகிறது.

*இதழில் வெளியாகிற கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள் யாவும் படைப்பாளிகளின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!



தொடர்புகளுக்கு

editor@ithamil.com

# தமிழ்

**நற்றமிழரின் நாடித்துடிப்பு**


## January




## February




## March




## April




## May




## June

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

## July

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

## August

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

## September

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

## October

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |


## November

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

## December

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com




editor@ithamil.com


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा